ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# நம்பிக்கையூட்டும் நீதிமன்றத் தீர்ப்புகள்

ஹிந்து இன அழிப்பிற்கு அழைப்பு விடுத்தார் உதயநிதி. நூறாண்டு காலமாக வெறுப்புப் பேச்சைத் தொடர்ந்து செய்கிறது திராவிட கும்பல். வெறுப்புப் பேச்சின் மீது வழக்குப் பதியாத தமிழகக் காவல்துறை, அதைக் கண்டிப்பவர்கள் மீது வழக்குப் பதிந்திருப்பது துரதிர்ஷ்டம் என்று நீதியரசர் ஸ்ரீமதி அவர்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். மத மோதல்களை ஏற்படுத்துகிறது தி.மு.க அரசு. மத அரசியலுக்காக கீழ்த்தரமாக இறங்கியுள்ளது தி.மு.க அரசு. வேண்டுமென்றே நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் செயல்படுகிறது என்று நீதியரசர் ஜெயச்சந்திரன் அவர்களும், இராமகிருஷ்ணன் அவர்களும் திருப்பரங்குன்றம் தீபம் ஏற்றுவது தொடர்பான வழக்கில் தீர்ப்பளித்தனர்.

சிறுபான்மையினர் மத கட்டடங்களுக்குத் தடையில்லாச் சான்றிதழ் தேவையில்லை என்ற அரசின் உத்தரவை நீதியரசர் ஜெயச்சந்திரனும், செந்தில் குமாரும் தடை விதித்தனர். அழகர் கோவில் நிதியில் வணிகவளாகம் கட்ட நீதியரசர்கள் அனிதா சுமந்தும், குமரப்பனும் தடை விதித்தனர். கோயில் விவகாரங்களில், அறநிலையத் துறைக்கு எதிரான தீர்ப்புகள் ஏராளம். இந்தத் தீர்ப்புகளை வெற்றி-தோல்வியாக பார்ப்பதைவிட பொதுவாக உணர்த்தும் உண்மை என்ன? இந்த அரசு ஹிந்துக்களின் உரிமைகளைப் பறிக்கும் அரசு, ஹிந்துக்களை அழிக்க கிறிஸ்தவ முஸ்லீம்களுக்கு சட்ட விரோதமாக உதவி செய்யும் அரசு. சிறுபான்மை ஓட்டுக்காக அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறவும் , ஜனநாயக மரபை அழிக்கவும் தயங்காது தி.மு.க என்பது தெளிவாகியுள்ளது.

உயர் கல்வி நிறுவனங்களில் “சமத்துவத்தை ஊக்குவிப்பதற்கான வழிகாட்டுதல் 2026-ஐ” யுஜிசி அண்மையில் வெளியிட்டது. அதில், பிரிவு 3(சி)-இல், உயர்கல்வி நிறுவனங்களில் ஜாதிய அடிப்படையிலான பாகுபாடு என்பதற்கு, எஸ்சி., எஸ்டி., ஓபிசி உள்ளிட்ட இடஒதுக்கீடு பிரிவினருக்கு எதிரான பாகுபாடு என்பதாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு, ஜாதிய பாகுபாட்டை இடஒதுக்கீடு பிரிவினருக்கானதாக மட்டும் சுருக்குவது, பொதுப் பிரிவினருக்கு இழைக்கப்படும் அநீதி. மேலும், தவறான புகார்களுக்குத் தண்டனை அளிக்கும் பிரிவு இடம்பெறாததால், இந்த விதிகள் துஷ்பிரயோகம் செய்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. ஜாதிய அடிப்படையில், ஹிந்துக்களைப் பிளக்கவும், மதமாற்றத்தை ஊக்குவிக்கவும், மாணவர்கள் நெஞ்சில் ஜாதிய வன்மத்தைப் புகுத்தவும் இந்த விதிமுறைகள் பயன்படுத்தப்படும். ஹிந்துக்களைப் பிளவு படுத்த ஜாதிப் பாகுபாட்டை குற்றமாக அங்கீகரித்தது அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாண சபை.

இது துஷ்பிரயோகத்திற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது என்று கண்டித்தவர்கள் பா.ஜ.க ஆதரவாளர்கள். அமெரிக்கா செய்த சதியையே இப்போது பா.ஜ.க அரசின் கீழ் செயல்படும் யு.ஜி.சி செய்துள்ளது. இந்த வழிகாட்டுதலை உச்சநீதிமன்றம் தடை செய்துள்ளது. பிரிவினையும், அரசியல் லாபமும் மலிந்த இத்தருணத்தில் இந்தத் தீர்ப்புகள் நம்பிக்கையூட்டுபவைகளாக உள்ளன.



# ஹிந்து இன அழிப்பிற்கு அழைப்புவிடுத்த உதயநிதி நீதிமன்றம் உறுதி

*வீர வேலுநாச்சியார்*

தமிழ்நாடு முற்போக்கு கலைஞர்கள் சங்கம், செப்டம்பர் 2, 2023 அன்று சனாதன ஒழிப்பு மாநாடு என்ற பெயரில் ஒரு மாநாட்டை நடத்தியது. அதில் கலந்துக் கொண்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், "சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு, மலேரியா, கொரோனா போன்றவற்றை எதிர்க்கக் கூடாது. ஒழித்து கட்ட வேண்டும். அதே போல் தான் சனாதனம். அதை எதிர்ப்பதை விட ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம்'' என்று ஹிந்து மதம் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசினார். அதாவது, இன அழிப்புக்கு அழைப்பு விடும் வகையில் பேசினார்.

இதற்கு எதிர்வினையாற்றிய பாஜக ஐடி விங் தலைவரான அமித் மால்வியா, உதயநிதியின் பேச்சு இன அழிப்பிற்கான அறைகூவல் என்று சமூக வலைதளங்களில் பதிவிட்டார். உடனே, திமுகவின் வக்கீல் பிரிவைச் சார்ந்த KAV தினகரன் திருச்சி சிட்டி க்ரைம் பிரிவில், உதயநிதியின் பேச்சை திரித்து கருத்து வெளியிட்டு சமூகத்தில் பதற்றத்தை ஏற்படுத்த முற்பட்டுள்ளார் என்று அமித் மால்வியா அவர்கள் மீது புகார் மனுவைக் கொடுத்தார். காவல்துறையும் புகார் கொடுத்தவர் திமுகவைச் சேர்ந்தவர் என்பதால் உடனே திரு. அமித் மால்வியா அவர்கள் மீது FIR போட்டது.

இதை எதிர்த்து திரு. அமித் மால்வியா அவர்கள் நீதிமன்றத்தை நாடினார். அந்த வழக்கு, ஜனவரி 20 2025 அன்று மதுரை உயர்நீதிமன்ற கிளையில் நீதிபதி ஸ்ரீமதி அவர்கள் முன் வந்தது. அப்போது நீதிபதி ஸ்ரீமதி அவர்கள் அமித் மால்வியா மீது பதிவு செய்யப்பட்ட FIRI ரத்து செய்ய உத்தரவிட்டதோடு, "சனாதன ஒழிப்பு மாநாட்டில்" திமுக தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை, ஹிந்து சமூகத்திற்கு எதிரான "வெறுப்புப் பேச்சு" (Hate Speech) என்றும் கூறியுள்ளார்.

மேலும், இது குறித்து நீதிபதி எஸ். ஸ்ரீமதி தனது தீர்ப்பில் சில முக்கியமான விஷயங்களை குறிப்பிட்டுள்ளதையும் பார்ப்போம்.

கடந்த 100 ஆண்டுகளாக ஹிந்து மதத்தின் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. முதலில் திராவிடர் கழகத்தாலும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தாலும் (திமுக) இது தொடர்கிறது. வெறுப்புப் பேச்சைத் தொடங்கியவர் மீது சட்டம் பாயவில்லை, ஆனால் அதற்கு எதிர்வினையாற்றியவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்று நீதிபதி தன் அதிருப்தியை தெரிவித்தார்.

தமிழகத்தில் உதயநிதி மீது வழக்கு ஏதும் பதிவு செய்யப்படவில்லை, ஆனால் மற்ற மாநிலங்களில் அவர் மீது இது குறித்து வழக்குகள் உள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

2024ல் உதயநிதிக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட Quo warranto petition வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் இது வெறுப்பு பேச்சின் கீழ் வரும் என்று கூறியதை குறிப்பிட்டு, உதயநிதி ஸ்டாலினின் பேச்சு ஹிந்துக்களுக்கு எதிரானது தான் என்பதை சுட்டிக்காட்டி சனாதனியான அமித் மால்வியா, அந்த வெறுப்புப் பேச்சிலிருந்து சனாதன தர்மத்தைப் பாதுகாக்கவே முயன்றார், எனவே அதை ஒரு குற்றமாகக் கருத முடியாது என்றும் நீதிபதி கூறியுள்ளார். அதோடு மட்டுமல்லாமல், நீதிபதி ஸ்ரீமதி அவர்கள் 'ஒழிப்பு' என்ற வார்த்தையை

**கடந்த 100 ஆண்டுகளாக ஹிந்து மதத்தின் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. முதலில் திராவிடர் கழகத்தாலும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தாலும் இது தொடர்கிறது. - நீதிபதி ஸ்ரீமதி**

விரிவாக ஆய்வு செய்து பின்வரும் கருத்துகளைக் கூறியிருக்கிறார்

'ஒழிப்பு' என்றால் அகற்றுதல் அல்லது அழித்தல் என்று பொருள்.

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்றால், அதைப் பின்பற்றும் மக்களும் இருக்கக்கூடாது என்றாகிறது.

எனவே, 'சனாதன ஒழிப்பு' என்பது ஒரு குறிப்பிட்ட இனத்தை அல்லது கலாச்சாரத்தை அழிப்பதற்குச் சமமான (Genocide/Culturicide) சொல்லாகும்.

இந்த வழக்கில் புலனாய்வு அதிகாரி (IO) தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், "ஆளுநரும் பாஜகவும் சனாதனம் பற்றி பேசும்போது, ஒரு அமைச்சர் ஏன் பேசக்கூடாது?" எனக் குறிப்பிட்டிருந்தார். இதற்கு கண்டனம் தெரிவித்த நீதிபதி, அதிகாரிகள் அரசியல் சார்பற்று இருக்க வேண்டும் என்றும், அரசியல் கட்சி களுக்கு ஆதரவாகச் செயல்படுவது கண்டிக்கத்தக்கது என்றும் கூறினார்.

மால்வியாவுக்கு எதிரான முதல் தகவல் அறிக்கை (FIR) ஆதாரமற்றது எனவே இந்த வழக்கின் நடவடிக்கைகளைத் தொடர்வது சட்ட நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்துவதற்குச் சமமாகும் எனக் கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்தார் நீதிபதி ஸ்ரீமதி. உச்சநீதிமன்றத்தில் உதயநிதி மீதான வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், இந்தத் தீர்ப்பும், இதற்கு முன் வந்த நீதியரசர் அனிதா சுமந்த் அவர்களின் தீர்ப்பும் உதயநிதிக்கு தலைவலியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தத் தீர்ப்புகளுடன் திருப்பரங்குன்றம் நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்த செயல், அறநிலையத் துறையின் தொடர் நீதிமன்ற அவமதிப்புகள், கோயில் இடிப்புகள், கோயில் சொத்துக் கொள்ளைகள், ஹிந்துப் பண்டிகைகளுக்குத் தடை, பாரம்பரிய



விழாக்கள், ஊர்வலங்களுக்குத் தடை, சிறுபான்மை மதக் கட்டிடங்களுக்கு தடையில்லாச் சான்றிதழ் விலக்கு, சிறுபான்மை கல்விக் கூடங்களுக்கு சலுகைகள் வழங்கி ஹிந்து கல்வி நிறுவனங்களை முடக்கும் சதி, அமைச்சர் முதல் அடிமைகள் வரை இடைவிடாது நிகழ்த்தும் வெறுப்புப் பேச்சுக்கள், அடிப்படை வழிபாட்டு உரிமையையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க குரல் கொடுத்தால் காவல் துறையின் அடக்குமுறை, முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும் திருப்திப்படுத்த ஹிந்துக்கள் மீது சட்ட விரோத நடவடிக்கைகள், பிரிவினைவாத ஆதரவு, பயங்கரவாத ஆதரவு என்று ஹிந்து இன அழிப்புக் கொள்கையை செயல்படுத்தியும் வருகிறது தி.மு.க அரசு.

உலகின் பல பகுதிகளிலும் இன அழிப்பை நிகழ்த்திய ஆட்சியாளர்கள் பின்பற்றிய முறையையே தி.மு.க அரசும் பின்பற்றுகிறது. காஷ்மீர் இன அழிப்பிற்கு முன் தேசிய மாநாட்டுக் கட்சியின் ஆட்சியில் ஹிந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டபோது, மனநிலை சரியில்லாதவன் செய்துவிட்டான் என்று சொல்லி வழக்கை முடிப்பது வாடிக்கையாகியிருந்தது. இதையே வங்கதேசத்தில் இருந்த அரசுகளும் செய்தன. இன்று தமிழகத்திலும் இதை நாம் பார்க்கிறோம்.

இன அழிப்பு நடந்த காஷ்மீரிலும், வங்கதேசம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சைப்ரஸ், இலங்கை போன்ற நாடுகளில் வெறுப்புப் பேச்சை அந்த நேரத்தில் ஆண்ட அரசாங்கங்கள் ஆதரித்தன. பேசியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், எதிர்த்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்தன. இன்று தமிழகத்திலும் இதே நிலை தான் உள்ளது. இந்த நாடுகளும், காஷ்மீரும் வெறுப்பை நியாயப்படுத்தவும், இன அழிப்பை நடைமுறைப் படுத்தவும் சர்வதேசத் தளத்தில், ஒத்த சிந்தனையுள்ள அமைப்புக்களையும், நிறுவனங்களையும் பயன்படுத்தியதைப் போல் தமிழக அரசும், அன்னிய சக்திகளை ஊக்குவிக்கிறது. இந்தியாவை சர்வதேச அரங்கில் இழிவுபடுத்தும் நபர்களையும், அமைப்புக்களையும் அரசு அங்கீகாரம் கொடுத்து தேசத் துரோகம் செய்து வருகிறது.

நீதியரசர் திருமதி ஸ்ரீமதி அவர்கள், திராவிட இயக்கங்கள் நூற்றாண்டு காலமாக ஹிந்து வெறுப்பை முன்னெடுத்து வருகிறது என்ற கூற்றை உறுதி செய்யும் விதமாகவே, தி.மு.க அரசின் செயல்பாடு அமைந்துள்ளது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. நீதியரசர் ஸ்ரீமதி அவர்களின் தீர்ப்பு, உதயநிதியின் வெறுப்புப் பேச்சை சுட்டிக் காட்டியுள்ளது என்பதை விட ஒரு மாபெரும் சதியை வெளிக்கொண்டு வந்துள்ளது எனலாம். இந்தத் தீர்ப்பு நமக்கு உணர்த்தும் ஆபத்தை பொது விவாதமாக மக்கள் மன்றத்திற்குக் கொண்டுச் செல்லும் பொறுப்பு நம்முடையது என்று உணர்ந்து செயல்படவேண்டும்.

DMK

# பொங்கலுக்கு திராவிட ஸ்டிக்கர்

பால கௌதமன்

உங்க பித்தலாட்டத்துக்கு அளவே இல்லையா டா ?

மத்திய அரசு திட்டங்களுக்கு ஸ்டிக்கர் !

தேசியக் கல்விக் கொள்கையிலிருந்து பெரும் பகுதியை காபி பேஸ்ட் செய்துவிட்டு தமிழக அரசின் கல்விக் கொள்கைனு ஸ்டிக்கர் !

மத்திய அரசின் யுனிபைட் பென்ஷன் திட்டத்தை பெருவாரியாக காபி பேஸ்ட் செய்து, புதிய பென்ஷன் திட்டம்னு ஸ்டிக்கர் !

வெளி நாட்டு மீட்புப் பணிகளை தமிழக அரசு செய்ததுனு கூசாம ஒட்டற ஸ்டிக்கர் !

இந்த மாதிரியான நீண்ட லிஸ்டுல சேர்ந்திருப்பது திராவிடப் பொங்கல் ஸ்டிக்கர் !

இதுக்கு விளக்கம் வேறு ! பாட்டு வேறு !

பொங்கல் இயற்கையை வழிபாட்டைக் குறிக்கும் விழா ! இது ஜாதி மதம் கடந்தது என்று தி.மு.க வினர் பேசினாலும், இதற்கு அதிக அழுத்தம் கொடுத்தது அமைச்சர் பொன் முடியும், தி.மு.க எம்.பி கனிமொழியும். இந்தப் பொங்கலுக்கு திராவிடப் பொங்கல்னு டைட்டில் வேறு ! டைட்டில் ஓகே, இதை எல்லா மதத்தினரும் ஏற்றுக் கொள்வார்களா ?

வேதங்களும், தமிழ் இலக்கியங்களும் சூரியனைப் போற்றி வணங்க வேண்டும் என்கின்றன ! ஆனால் பைபிள் என்ன சொல்கிறது ?

நான் விலக்கியிருக்கிற வேறே தேவர்களையாவது சந்திரசூரியர் முதலான வானசேனைகளையாவது சேவித்து, அவைகளை நமஸ்கரிக்கிறதாகக் காணப்பட்டால், அது உன் செவிகேட்க உனக்கு அறிவிக்கப்படும்போது, நீ அதை நன்றாய் விசாரிக்கக்கடவாய்; அது மெய் என்றும், அப்படிப்பட்ட அருவருப்பு இஸ்ரவேலில் நடந்தது நிச்சயம் என்றும் கண்டாயானால்,அந்த அக்கிரமத்தைச் செய்த புருஷனையாவது ஸ்திரீயையாவது உன் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய், அப்படிப்பட்டவர்கள் சாகும்படி கல்லெறியக்கடவாய்.

*(உபாகமம் 17 : 3-5)*

சுருக்கமாகச் சொன்னால், பொங்கல் கொண்டாடினால் கல்லெறிந்து கொல்லப் படவேண்டும் ! இது அன்பு மார்கம் ! சரி, அமைதி மார்கம் என்ன சொல்கிறது! அவளும், அவளுடைய சமூகத்தார்களும் அல்லாஹ்வையன்றி, சூரியனுக்கு ஸுஜூது செய்வதை நான் கண்டேன்; அவர்களுடைய (இத்தவறான) செயல்களை அவர்களுக்கு ஷைத்தான் அழகாகக் காண்பித்து, அவர்களை நேரான வழியிலிருந்து தடுத்துள்ளான்; ஆகவே அவர்கள் நேர்வழி பெறவில்லை.

பொங்கல் கவர்ச்சிகரமாக இருக்கலாம், ஆனால் பொங்கலைக் கொண்டாடத் தூண்டுவது சாத்தான்! அப்படியென்றால் திராவிடக் கூட்டம் சாத்தான்களா ?ஏன் கொண்டாடக் கூடாது என்று குர் ஆன் சொல்கிறது? அல்லாவிற்கு இணை வைக்கக் கூடாதாம் ! அப்படி வைத்தால் அது பெரும் பாவம் நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான்;. இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்;. யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள். (குர்-ஆன் 4:48)

சூரிய வழிபாட்டின் அடிப்படையில் பொங்கல் எங்கெல்லாம் கொண்டாடப்படுகிறது ?

தொன்மையான இப்பண்டிகை சூரிய வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு மகர சங்கராந்தி என்ற பெயரில் கர்நாடகா, ஒடிசா, ஜார்கண்ட், கோவா பகுதிகளிலும், பெத்த பண்டுகா என்று தெலுங்கானா மற்றும் ஆந்திராவிலும், கிச்சரி என்று போஜ்புரியிலும், மகா பிகு என்று அசாமிலும், மாஹி சாஜி என்று ஹிமாசல் பிரதேசத்திலும், மாஹி சங்கராந்த் என்று பஞ்சாபிலும், ஜம்முவில் உத்தரணி என்ற பெயரிலும், மிதாலி பகுதியில் தில் சக்ராத், காஷ்மீரில் ஷிஷுர் செங்ராத், ஹரியானாவில் சக்ரத், இராஜஸ்தானில் சக்ராத், மத்திய பாரதப் பகுதியில் சுக்காரத், குஜராத் மற்றும் உத்திர பிரதேசத்தில் உத்ராயண், உத்ராகண்டில்



**பொங்கல் என்ற ஹிந்து மரபை அழிக்க ஒட்டப்பட்ட ஸ்டிக்கர் தான் இந்த திராவிடப் பொங்கல். இந்த ஸ்டிக்கர் நகைப்புக்குரியதில்லை, நயவஞ்சகமானது. இது திட்டமிட்ட ஹிந்து இன அழிப்பு என்ற எச்சரிக்கை உணர்வுடன் இந்தச் சதியை முறியடிப்போம்**

குகூதி, தஹி ச்சூரா என்று பிஹாரிலும், மகோர் சங்கராந்தி அல்லது பௌஷ் சங்கராந்தி என்ற பெயரில் வங்கத்திலும் அழைக்கப்படுகிறது.

பூச நட்சத்திரத்தில் முழு நிலவு வரும் மாதம் தை என்பதால் வங்கத்தில் இதை புஷ்ய சங்கராந்தி என்று அழைக்கின்றனர். இந்த மரபும் நாம் கொண்டாடும் தை பூச மரபும் ஒன்றே. மகர சங்கராந்திக்கு கிச்சடி சங்கராந்தி என்ற பெயரும் உண்டு. அரிசியும், வெல்லமும் கலந்த பால் பொங்கல் செய்து சூரியனுக்குப் படைப்பதால் இந்தப் பெயர். நாமும் அரிசியில், பாலும் நெய்யும் கலந்து பொங்கல் படைக்கிறோம். இந்த மரபு பாரதம் முழுவதும் ஒன்றாகவே உள்ளது. இன்னும் சொல்லப்போனால், பிரிவினைக்குப் பின்னும் பாரதப் பண்பாட்டைப் பின்பற்றும் நேபாளத்தில் மாஹே சங்கராந்தி, கம்போடியா மற்றும் தாய்லாந்தில் சொங்ரான், மியான்மரில் திங்யான் என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகை பாரதத்தின் பண்டிகை, ஹிந்துப் பண்டிகை. இதை மதம் சாராத பண்டிகை, தமிழருக்கு மட்டுமேயான பண்டிகை என்று சொல்வது அறிவிலித்தனம். இப்போது தமிழர் அடையாளத்தையும் மறைத்து திராவிடம் என்ற புது அடையாளம் புகுத்தப்படுகிறது. தமிழ் அடையாளம் வந்தால் ஹிந்து அடையாளம் வந்து விடுமே? அந்த அடையாளத்தை மறைக்க ஒட்டப்படும் ஸ்டிக்கர், திராவிடம் !

இந்தத் தற்குறித்தனத்தை வைத்து பிரிவினைவாத அரசியல் நடத்த தி.மு.க வின் ஐ.டி பிரிவு வெளியிட்ட பாடல் அறிவிலித்தனத்தின் உச்சம். இந்தப் பாடல் வரியைப் பாருங்கள்

தெற்க பார்த்து திசைய மாற்று, வடக்கும் கேட்கும்

சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நகர்வதைக் கொண்டாடுவது பொங்கல். வடக்கு நோக்கி சூரியன் நகர்வதால் உஷ்ணம் ஏற்பட்டு, பனியிலிருந்து விடுபட்டு, சித்திரையில் பூக்கும் காலம் தொடங்கி பருவச் சுழற்சி ஆரம்பமாகிறது. வடக்கே நகர்ந்து வளம் கொடுக்கும் சூரியனை தெற்கே திசையை மாற்று என்று சொல்லி உயிர் வாழ ஏதுவான ஒரு பகுதியாக நம் தேசம் இருந்துவிடக்கூடாது என்ற தி.மு.க வின் நோக்கத்தைப் பிரதிபலிக்கிறதோ இந்தப் பாடல் ! அடிப்படை அறிவியல் தெரியாதக் கூட்டம்



தான் பகுத்தறிவு பேசுகிறது! இந்தப் பகுத்தறிவில்லா வரியின் நோக்கமென்ன? பிரிவினைவாத அரசியல் ! வடக்கு - தெற்கு என்று பிரித்தாளும் சதி !

நாங்கள் சங்க இலக்கிய தை நீராடலைத் தான் கடைபிடிக்கிறோம், அதில் சூரிய வழிபாடு சொல்லப்படவில்லை எனவே இது அந்தப் பொங்கல் இல்லை என்று சொல்லலாம் ! தை நீராடல் மரபே எங்களது என்று சிலர் பேசி வருகிறார்கள் ! தை நீராடல் என்றால் என்ன ?

சங்க இலக்கியமான பரிபாடலில் 11 வது பாடல் இதை விளக்கமாக படம் பிடித்துக் காட்டுகிறது. இந்தப் பாடலில், மார்கழி பௌர்ணமியில் தொடங்கி, தை பௌர்ணமி வரை நோன்பிருக்கும் பெண்கள் அதிகாலையில் வைகை நதியில் நீராடிய சடங்கை சொல்கிறது. அந்தணர்கள் நாள் குறித்து விழா தொடங்கியதும், அந்தணர்கள் தானம் பெற்றதும் குறிக்கப்படுகிறது. நல்ல கணவனைப் பெற பெண்கள் ஐந்து வகையான பூக்களைச் சூடி, தோழியருடன் பாட்டுப்பாடி, தங்கள் தாயாருடன் வந்து நீராடினர். வைகை நதிக்கரையில் அந்தணர்களால் வேள்வித் தீ மூட்டி, ஈர உடைகளுடன் வழிபாடு நடத்தினர். வேதியரின் அவிர்பாகமே வைகைக்கு விருந்தாக அமைகிறது என்கிறது பரிபாடல்.

சங்கத் தமிழன் பொங்கல் என்றால் வேதம், வேள்வி என்பதையெல்லாம் ஏற்க வேண்டுமே! ஏற்றால் கம்பெனிக்கு மூடு விழா ஆகிவிடுமே ! பாலைவன முதலாளிகளும், ஐரோப்பிய ஐயாக்களும், சிகப்பு சீமான்களும் சினந்து விடுவார்களே! என்ன செய்ய ? அன்பு மார்க்கத்தின் ஸ்டிக்கர் முறையை ஆட்டையைப் போட்டது அடிமை திராவிடக் கூட்டம். இரவு நேரம் அதிகமான நாளை விண்டர் சால்சிடைஸ் என்று ரோமானியர்கள் கொண்டாடினர்.

அந்த நாள் முதல் பகல் பொழுது அதிகரிக்கத் தொடங்குவதால், அந்நாளை சூரியனின் பிறந்த நாளாகக் கொண்டாடினர். இந்த நாளை இயேசுவின் பிறந்த நாள் என்று ஸ்டிக்கர் ஒட்டி ஒரு அறிவியல் சார்ந்த பாண்பாட்டை ஒழித்ததைப் போல், பொங்கல் என்ற ஹிந்து மரபை அழிக்க ஒட்டப்பட்ட ஸ்டிக்கர் தான் இந்த திராவிடப் பொங்கல். இந்த ஸ்டிக்கர் நகைப்புக்குரியதில்லை, நயவஞ்சகமானது. இது திட்டமிட்ட ஹிந்து இன அழிப்பு என்ற எச்சரிக்கை உணர்வுடன், இந்தச் சதியை முறியடிப்போம்!.

# தமிழக சட்டப்பேரவையில் ஆளுநருக்கு அவமரியாதை சாமானியன் பார்வை

அருண்பிரபு

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் தமிழக சட்டமன்றத்தில் 2026ஆம் ஆண்டுக்கான முதல் கூட்டத்தில் உரை நிகழ்த்த வந்துள்ளார். ஆளுநரின் அனுமதி பெற்ற பிறகே அவரது உரை அச்சிடப்பட்டது என்று அரசுத் தரப்பு கூறினாலும், ஆளுநர் அந்த உரையில் தவறான தகவல்களும் ஆதாரமற்ற கூற்றுகளும் இடம் பெற்றிருந்ததாக தெரிவிக்கிறார். அவற்றில் உண்மை இருப்பது கண்கூடு என்பதும், அவற்றை ஊடகங்கள் விவாதிக்காமல் அரசு சார்ந்த கருத்துக்களை ஆளும்கட்சி சார்ந்த ஆட்கள் கொண்டு இறுமாப்புடன் இவர் யார் கேள்வி கேட்க என்று பேசிக்கொண்டிருப்பது அறிவுசார் செயல்பாடு அல்ல. ஆளுநரின் கூற்று என்ன?

1.ஆளுநரின் ஒலிவாங்கி (மைக்) மீண்டும் மீண்டும் அணைக்கப்பட்டது. (அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா சட்டமன்றத்தில் பேச என்ற திமுக சொம்புகளின் கேள்வி சிறுபிள்ளைத்தனமானது அல்லது அதீதமான திமிரில் வருவது)

2.ஆதாரமற்ற தகவல்கள் உண்மைக்கு மாறான கூற்றுகள் உரையில் இருந்தன. (எழுதிக் கொடுத்ததைப் படிக்கத்தான் ஆளுநர் என்று பேசும் ₹ 200 ஊப்பிகள் உச்சநீதிமன்றத்தில் போய் ஆளுநரின் அதிகாரம் பற்றிக் கேட்டுத் தெளிவு பெறலாம்)

**எழுதிக் கொடுத்ததைப் படிக்கத்தான் ஆளுநர் என்று பேசும் ₹ 200 ஊப்பிகள் உச்ச நீதிமன்றத்தில் போய் ஆளுநரின் அதிகாரம் பற்றிக் கேட்டுத் தெளிவு பெறலாம்**

3.₹12 லட்சம் கோடிக்கு அதிகமான முதலீடுகளை ஈர்த்துள்ளோம் என்பது உண்மைக்கு எட்டாத தொலைவில் உள்ளது. பல ஒப்பந்தங்கள் காகிதத்தில் மட்டுமே உள்ளன. அந்நிய நேரடி முதலீடு பெறும் மாநிலங்களில் 4ஆவது இடத்தில் இருந்து 6ஆவது இடத்துக்கு இறங்கியுள்ளது தமிழகம். (இதை மறுப்போர் தரவுகளைப் பொதுவெளியில் வைக்கலாம்)

4. போக்சோ குற்றங்கள் 55% அதிகரித்துள்ளன, பெண்களுக்கெதிரான பாலியல் குற்றங்கள் 33% அதிகரித்துள்ளன. ஆனால் அவை புறக்கணிக்கப்பட்டு சட்டம் ஒழுங்கு சிறப்பு என்று பேசுவது என்ன நியாயம்?

5. போதைப் பொருட்கள், மாத்திரைகள் புழக்கம் பள்ளி மாணவர்கள் உள்பட இளைஞர்களிடம் பரவி வருகிறது. இது கவலை தரும் விஷயமாகும். இதனால் இரண்டாயிரம் பேர் ஒரே ஆண்டில் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இதைப் புறக்கணித்துப் போவது சரியல்ல.

6. தலித்களுக்கு எதிரான வன்முறை, தலித் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அதிகரித்துள்ளன, ஆனால் அவை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

7. தமிழகத்தில் ஒரே ஆண்டில் இருபதாயிரம் பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். புள்ளிவிவரப்படி ஒரு நாளுக்கு 65 தற்கொலைகள். இது அரசுக்குக் கவலை தரும் விஷயமாகத் தெரியவில்லையா?

8. கல்வித்தரத்தில் கடும் சரிவும் கல்வி நிறுவனங்களில் நிர்வாகச் சீர்கேடும் மலிந்துவிட்டது. 50% ஆசிரியப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. மாணவர்கள் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிறது. இதில் கல்வியிற் சிறந்த தமிழ்நாடு என்று எப்படிச் சொல்வது?

9. உள்ளாட்சித் தேர்தல் முறையாக நடக்காமல் கிராம ஊராட்சிகள் செயல்படாது இருக்கின்றன. இது ஜனநாயக உரிமை மறுப்பு. மக்கள் கிராம ஊராட்சிகளில் பங்களிக்கத் தயாராக இருக்கிறார்கள், ஆனால் அவை அரசின் சிறப்பு அதிகாரியின் கீழ் செயல்படுகின்றன. இதை ஆளுநர் உரையில் மறைத்துவிட்டனர்.

10. பல்லாயிரம் கோவில்கள் அறங்காவலர் குழு இன்றி அரசால் நிர்வகிக்கப்படுகின்றன. தவறான நிர்வாகத்தால் பக்தர்கள் மனவேதனை அடைகின்றனர். பழங்காலக் கோவில்களை மீட்பது குறித்த உயர்நீதிமன்ற உத்தரவு 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் கிடப்பில் உள்ளது. பக்தர்கள் இரக்கமற்ற முறையில் புறக்கணிக்கப்படுகின்றனர். இதெல்லாம் சிறப்பான நிர்வாகமா?

11. வெளிப்படை, மறைமுகச் செலவுகள் காரணமாகச் சிறு, குறு தொழில்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளன. நாட்டில் 5.5 கோடி சிறு குறு தொழில்கள் இருந்த போதிலும், அவைகள் செயல்பட அதிக சாத்தியக்கூறுகள் இருந்தும் தமிழகத்தில் 42 லட்சம் சிறு, குறு தொழில்களே உள்ளன. அவையும்





மற்ற மாநிலங்களுக்கு இடம் பெயர வாய்ப்புகளை எதிர்நோக்கியுள்ளன. இந்தப் பிரச்சனை ஆளுநர் உரையில் பேசப்படவே இல்லை.

12. அனைத்துத் துறைகளிலும் கீழ்மட்ட ஊழியர்களிடையே அதிருப்தி நிலவுகிறது. அதைச் சரி செய்ய எந்த நடவடிக்கையுமில்லை. ஊழியர்கள் அமைதியில்லாமல், விரக்தியில் உள்ளனர்.

13. நிகழ்ச்சித் தொடக்கத்தில் தேசிய கீதம் பாடப்படவில்லை. இது மரபுக்கும், தேசிய கீதத்துக்கும் அவமரியாதை.

இவற்றில் பல கேள்விகளுக்கு அரசிடம் முறையான பதில் இல்லை. முதல்வர் ஸ்டாலின் கூறுகையில் "மாநில அரசு தயாரித்துத் தரும் உரையில் ஆளுநரின் கருத்தைச் சேர்க்க முடியாது" என்று கூறுகிறார். "ஆளுநர் அரசின் செயல்களுக்குத் துணை செய்யவேண்டும், ஆனால் இவர் எதிர்த்து நிற்கிறார்" என்று பேசினார் ஸ்டாலின். பிறகென்ன ஆளுநரின் அனுமதி பெற்று அச்சடித்தோம் என்ற பேச்சு? அமைச்சர் ரகுபதி வழக்கம் போல எகத்தாளமாகப் பேசியிருக்கிறார். தேசிய கீதத்தை முதலில் பாடவேண்டும் என்று ஆளுநர் வெளிநடப்புச் செய்கிறார். முதலில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதே மரபு. இறுதியில் தேசிய கீதம் பாடி முடிப்பதும் மரபு. இதை மறுத்து வெளிநடப்புச் செய்கிறார் ஆளுநர் என்கிறார் ரகுபதி. ஆளுநர் தேசிய கீதம் பாடப்படவில்லை என்றுதான் சொல்கிறார். முதலில் இரண்டாவது என்று சொல்லவில்லை. பொய்யான கருத்துக்களை ஆளுநர் சொல்கிறார் என்கிறார் ரகுபதி. வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி குறித்து ஆளுநர் பேசியது முற்றிலும் பொய் என்று சொல்கிறார் அமைச்சர். அதற்கு ஆதாரம் தரவேண்டுமே?

**முதலீடு காகிதத்தில் உள்ள அளவுக்கு நிஜத்தில் வரவில்லை என்ற ஆளுநரின் குற்றசாட்டுக்கு பதில் இல்லை. கல்வித்தரம் குறித்த ஆளுநரின் கவலைக்குப் பதில் இல்லை. அடிமட்ட ஊழியர் அதிருப்தி குறித்த ஆளுநரின் கருத்துக்குப் பதில் இல்லை.**

போதைப் பொருள் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படவில்லை. மாநில எல்லையில் போலீசார் சோதனை நடத்திப் பிடிக்கிறார்கள் என்கிறார். அது பற்றிய தரவுகள்? மூச். வெளி மாநிலங்களில் இருந்து வரும் போதைப் பொருட்களைத் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிறார் அமைச்சர். முதல்வர் போதைத் தடுப்புப் போலீசுடன் தீவிர ஆலோசனை நடத்தி நடவடிக்கை எடுக்கிறாராம். ஆனாலும் எப்படிப் புழக்கம் இருக்கிறது?

முதலீடு காகிதத்தில் உள்ள அளவுக்கு நிஜத்தில் வரவில்லை என்ற ஆளுநரின் குற்றச்சாட்டுக்குப் பதில் இல்லை. கல்வித்தரம் குறித்த ஆளுநரின் கவலைக்குப் பதில் இல்லை. அடிமட்ட ஊழியர் அதிருப்தி குறித்த ஆளுநரின் கருத்துக்குப் பதில் சொல்லவில்லை. உள்ளாட்சி நிர்வாகம் முறையாக நடக்காதது பற்றிய குற்றச்சாட்டுக்கு அமைச்சரின் பதில் என்ன? பெண்களுக்கெதிரான கொடுமைகள் பற்றிய ஆளுநரின் கருத்துக்கு அமைச்சரோ இன்ன பிறரோ பதில் சொல்லவில்லை. தற்கொலைகள் பற்றிய ஆளுநரின் கவலை மாநில அரசுக்கு இருக்கிறதா தெரியவில்லை. மூச்சே விடவில்லையே?

ஆளுநர் வெளியே போனவுடன் மாளிகையில் இருந்து அறிக்கை வருகிறது என்கிறார் ரகுபதி. உரை முன்பே தயாரானால் அதில் இருக்கும் தவறுகளைச் சுட்டி அறிக்கை தர எத்தனை நாட்கள் வேண்டும்? விவரமறிந்தவர்கள் சில மணித்துளிகளில் பதில் சொல்வார்கள். ஆளுநர் விவரம் தெரிந்தவர்.

எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி கூறுகையில் "சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கும் போது சிறப்பான நிர்வாகம் என்று சொல்ல முடியாது. ஆளுநர் மறுத்தது சரியில்லை" என்றார்.

இப்படி முரண்பட்டுப் பேசுவதும் ஆளுநரை பாஜக ஏஜண்ட் என்று ஏசுவதும் அரசுக்கு அழகல்ல. தமிழக அரசு அவரிடம் மன்னிப்புக் கேட்பதே பொருத்தமான செயலாக இருக்கும்.

# திமுகவிற்கு பிரச்சாரம் செய்ய பாதிரிகளுக்கு பயிற்சி

ப்ரியா வெங்கட்



தேர்தலில் திமுகவிற்காக பிரச்சாரம் செய்ய பாதிரியார்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக அதிமுகவின் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாநில தலைவர் கோவை சத்யன் தெரிவித்துள்ளார். மேலும் இது குறித்து அவர் கூறுகையில், தமிழ்நாடு சிறுபான்மைத் தலைவராக இருக்கக் கூடிய ஜோ.அருண், லயோலா கல்லூரி நிர்வாக குழுவைச் சேர்ந்தவர். துணை முதல்வர் உதயநிதியின் நண்பர். அதனால் திமுகவிற்கு சாதகமாக சிறுபான்மை ஆணையம் செயல்படுகிறது என்கிறார்.

சில மாதங்களுக்கு முன் பல்வேறு சர்ச்சுகளைச் சேர்ந்த பாதிரியார்கள் சென்னைக்கு அழைக்கப்பட்டதாகவும், அவர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி கூட்டம் நடந்தாகவும் கோவை சத்யன் கூறியுள்ளார். அதே போன்று திமுகவிற்காக பிரச்சாரம் செய்ய சர்ச்சுகளை பயன்படுத்துவது தொடர்பாகவும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. ஜோ.அருண் அழுத்தத்தின் காரணமாக லயோலா கல்லூரியும், மிஷனரி அமைப்புகளும் திமுகவிற்காக வேலை செய்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜோ.அருண் தமிழக அரசின் பாடத்திட்டம் வடிவமைக்கும் குழுவில் இருந்த போது சமூக அறிவியல் பாடங்களில் கிறிஸ்தவக் கருத்துக்களை புகுத்தியுள்ளேன் என்று வெளிப்படையாக தெரிவித்தவர். பள்ளிப் பாடங்கள் வாயிலாக மதமாற்றத்திற்கு வித்திட்டவர். இவரை தமிழ்நாடு சிறுபான்மைத் தலைவராக தமிழக அரசு நியமித்த போதே சர்ச்சைகள் எழுந்தன.

நடிகர் விஜயின் செல்வாக்கு அதிகரித்தவுடன் ஒரு கிறிஸ்தவ முதல்வர் வேட்பாளர் உருவானது சர்ச்சின் நெடுநாளையத் திட்டத்தின் பலன். இந்தப் புதிய கிறிஸ்தவ தலைமையால் கிறிஸ்தவ வாக்கு வங்கியை இழக்க நேரும் என்ற பயம் திமுகவை தொற்றியது. கரூர் மாநாட்டுடன் அவருக்கு முடிவு கட்ட எண்ணியது. அது திமுகவிற்கு பின்னடைவை ஏற்படுத்தியது. திமுக கிறிஸ்தவ ஆதரவு கட்சி தான். ஆனால், தவெகவோ கிறிஸ்தவரையே முதல்வர் வேட்பாளராகக் கொண்டது. இதை அறிந்த திமுக கிறிஸ்தவர்களை சமாதானம் செய்ய பல உத்திகளை மேற்கொண்டு வருகிறது. கிறிஸ்தவர்களும் இது தான் சரியான சமயம் என்று திமுகவை மிரட்டி பல கோரிக்கைகளை முன் வைத்து பெற்று வருகின்றனர்.

தமிழகத்தை 4 மண்டலங்களாகப் பிரித்து அற்புத திருவிழாக்களை நடத்தியது. அதன்பின், தமிழக பிஷப்களை சந்தித்து அவர்கள் கோரிக்கைகளை எல்லாம் பரிசீலிப்பதாக உத்தரவாதம் கொடுத்தார் ஸ்டாலின். அந்தவகையில், கிறிஸ்மஸ் விழாவில் பல சட்டவிரோத சலுகைகளைத் தருவதாக வாக்குறுதி கொடுத்து, அரசாணையும் வெளியிட்டார் ஸ்டாலின். உதாரணத்திற்கு, சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் நிரந்தர அங்கீகாரம், சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்வு விலக்கு, மதம் சார்ந்த கட்டிடங்களுக்குத் தடையில்லா சான்று பெற தேவையில்லை, அரசு உதவி பெறும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் நியமனங்களை அந்தந்த கல்வி நிறுவனங்களே நியமித்துக் கொள்ளலாம் என்பவை அடங்கும். இந்த அறிவிப்புகள் பயன் தர வேண்டுமே! அதனால், தேர்தலில் திமுகவிற்காக பிரச்சாரம் செய்ய சர்ச் பாதிரிகளை களமிறக்கத் திட்டமிட்டுள்ளது தி.மு.க. தேர்தலை மதவாதத் தேர்தலாக மாற்றியுள்ளது தி.மு,க

மைனாரிட்டி கல்வி நிலையங்கள் பாதுகாப்பு கூட்டம் என்ற பெயரில், கல்வி நிறுவனங்களை சட்ட விரோத மத செயல்பாடுகளுக்குப் பயன்படுத்த கூட்டம் நடந்தது லயோலா கல்லூரியில்! ஹிந்துக்களை இழிவுபடுத்தி படக் கண்காட்சி! சட்ட விரோதமாக தத்துவப் பாடப் பட்டப் படிப்பு, பாலியல் சீண்டலுக்கு ஆளான பெண் பணியாளருக்கு நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னும் இழப்பீடு வழங்காமை, நூற்றாண்டு கொண்டாட்ட வசூலுக்கு கணக்கில்லை என்று சட்ட மீறல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது லயோலா கல்லூரி. இப்போது, கல்வி நிலையத்தை மதவாத அரசியலுக்காகப் பயன்படுத்தும் தவறை பகிரங்கமாகச் செய்கிறது. இந்தத் தொடர் குற்றங்களைச் செய்யும் லயோலா கல்லூரி சீல் வைக்கப்படுமா? மதவாத அரசியல் செய்யும் தி.மு.க தடை செய்யப்படுமா ?

# தொழிலதிபர்கள் மாநாடா? பிரிவினைக்கான ஏவுதளமா?

இராமகிருஷ்ணன்

ஜனவரி மாதம் 25, மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் SIRAT (Strengthening Muslim Roots & Aspirations Together) என்ற பெயரில் இயங்கும் அமைப்பின் மாநாடு!. இந்த மாநாடு யாருக்கானது? எதற்கானது? மாநாட்டு அழைப்பிதழில் உள்ளபடிப் பார்த்தால், இது தமிழ் முஸ்லிம் வணிக முன்னோடிகளின் முதல் பிரம்மாண்டக் கூடுதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எந்தத் தவறுமில்லை! ஆனால் இந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பேச்சாளர்கள் யார்? இவர்களுக்கும் வணிகத்திற்கும் என்ன தொடர்பு ? பாதிரியார் ஜெகத் கேஸ்பர் ராஜ், ஊடகவியலாளராக அடையாளப்படுத்திக் கொள்ளும் ஹிந்து எதிர்ப்பாளரும், தி.மு.க வின் ஆதரவாளருமான செந்தில் வேல் (அண்டா என்று தன்னை அழைக்க ஆசைப்படுபவர்), விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஆளூர் ஷாநவாஸ், திருப்பரங்குன்றம் மலை மீது அசைவ உணவு சாப்பிட்டுக் களங்கப்படுத்தியவரும் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்ட தமிழக வக்ஃப் வாரியத் தலைவருமான நவாஸ்கனி, இந்திய தேசிய முஸ்லீம் லீக் கட்சியின் சென்னை மாநகர கவுன்சிலர் பாதிமா முசாபிர் உள்ளிட்ட பலர், இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இவர்களுக்கு இஸ்லாமிய வணிகர்கள் மாநாட்டில் என்ன வேலை ?

இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்கள் ஹிந்து எதிர்ப்பு, இஸ்லாமிய அடிப்படைவாத ஆதரவு, தேசப் பிரிவினை ஆகியவற்றை வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் வெளிப்படுத்துபவர்கள் என்பது தெரிந்த உண்மை. இவர்கள் தி.மு.கவின் ஆதரவாளர்கள் என்பதும் யாவரும் அறிந்ததே! கிறிஸ்தவர்கள் விஜயின் தமிழக வெற்றிக் கழகத்தை பெருவாரியாக ஆதரித்தால், முஸ்லீம் வாக்குக்களை சிதறாமல் தன் பக்கம் இழுக்க இந்த முயற்சி பயன் அளிக்கும் என்று அரசியலுடன் இதன் நோக்கத்தை நிறுத்திவிட முடியாது. தமிழ் அடையாளத்தால் அறியப்படும் வணிகர்களின் சந்திப்பு என்பதால், பணப் பரிவர்த்தனைக்கு இவர்களை பயன்படுத்த ஏதாவது முயற்சி எடுக்கப்படுகிறதா? அயல் நாட்டு முதலீடுகளுக்கோ, சட்டத்தை ஏமாற்றி அன்னியப் பணத்தை நம் நாட்டிற்குள் கொண்டுவர இந்தத் தொடர்புகள் பயன்படுத்தப்படுமா? என்ற சந்தேகம்




எழுகிறது.

இந்தக் கூட்டத்தின் பேச்சாளர்களில் ஒருவரான பாதிரியார் ஜெகத் கேஸ்பர் ராஜ், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக ஆயுதம் வாங்க உதவியதாக அமெரிக்காவின் எப்.பி.ஐ இவர் மீது வழக்குத் தொடர்ந்தது. அது தவிர ரைஸ் (RISE) என்ற பெயரில் இவர் ஒரு தமிழ் வணிகர்கள் கூட்டமைப்பை நடத்தி வருகிறார். தி.மு.க வின் உதவியை விடுதலைப் புலிகள் அமைப்புப் பெற இவரை புலிகள் அமைப்பு பயன்படுத்தியது, அதற்காக பெரும் பணம் கை மாறிய செய்தியை நினைவில் கொள்ள வேண்டும். இந்தப் பின்னணியுள்ளவர், இந்தக் கூட்டத்தை எப்படி வழி நடத்துவார் ? இவரது பின்புலம் தெரிந்து தான் இவர் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டாரா ?

உலகம் முழுவதும் தமிழர்கள் கணிசமாக வசிக்கும் பகுதிகளில் தமிழ் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்கள் சில காலம் முன்புவரை, இந்தியாவின் பண்பாட்டுத் தூதர்களாக விளங்கின. திருக்குறள், தேவாரம், திருவாசகம், பிரபந்தம், திருக்கோயில்கள் என்று ஹிந்துப் பண்பாட்டைப் பேணி காத்து வந்தன. சமீப காலங்களில் இவைகள் தமிழ் பிரிவினைவாத சித்தாந்தங்களை முன்னெடுக்கும் சக்திகளின் ஊடுருவலைக் காண்கிறது. ஆன்மிக செயல்பாடுகள் சுணக்கத்தைக் காண்கிறது. ஜல்லிக்கட்டுப் போராட்டம் தொடங்கி, பல போராட்டங்களை, பிரிவினைவாத த்வனியில் முன்னெடுத்து, இந்திய

**உலகம் முழுவதும் லிபரல்-ஜிகாதி கூட்டணி வலுவாகச் செயல்பட்டு ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்துவதுடன், அடிப்படைவாத இஸ்லாமிய ஆதிக்கத்தை விரிவுபடுத்தியும் வருகிறது. இந்த மலேஷியக் கூட்டத்தின் கூட்டும், இந்த போக்கை உறுதி செய்கிறது.**

அரசை தவறாகச் சித்தரிக்கும் செயலை, சில மிஷனரி, ஜிகாதி, சீக்கிய மற்றும் இடதுசாரிக் குழுக்களுடன் இணைந்து செயல்படுத்த உதவின. இந்தச் செயலுக்கு பேருதவி செய்தவர் ஜெகத் கேஸ்பர் ராஜ். இந்தப் பின்னணியில் பார்த்தால், உலகம் முழுவதும் உள்ள தமிழர்களை பாரதத்திற்கும், ஹிந்து மதத்திற்கும் எதிராக திசை திருப்ப இந்தக் கூட்டமைப்பு பயன்பட அதிக வாய்ப்பு உள்ளது.

ஆபரேஷன் சிந்தூர், குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கம் போன்ற விஷயங்களில், பாரதத்திற்கு எதிரான மற்றும் பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலைபாட்டை எதிர்த்த நாடு மலேஷியா. துருக்கி, பாகிஸ்தான், மலேஷியா ஆகிய நாடுகள், நேட்டோ போன்ற இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்து வருகின்றன. உலகம் முழுவதும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் பரப்பி, பலரை மூளைச் சலவை செய்து மதமாற்றியதுடன், பயங்கரவாதிகளாக உருவாக்கிய ஜாகிர் நாயக் என்ற இஸ்லாமிய மத போதகருக்கு அடைக்கலம் கொடுத்த நாடு மலேஷியா. இதைத் தவிர, தமிழர்கள் கணிசமாக வாழும் நாடு மலேஷியா. தமிழ் பிரிவினைவாதம், திராவிட ஹிந்து விரோத சிந்தனைகளைத் தமிழர்கள் மனதில் விதைக்க, பல அமைப்புகளும், மிஷனரி கூட்டங்களும் மலேஷியாவைக் குறி வைக்கின்றன. இந்தச் சூழலில், இந்த மாநாடு மலேஷியாவில் நடப்பது உற்று கவனிக்கப்பட வேண்டும்.

சென்னை தி.நகரில் உள்ள அக்கார்டு ஹோட்டலில் டயலாக் வித் தமிழ்நாடு என்ற பெயரில் ஜனவரி 13, 2026 அன்று ஒரு கூட்டம் நடந்தது. இதை உலகத் தமிழர்களின் நிகழ்ச்சி என்று குறிப்பிட்டிருந்தனர். இந்நிகழ்ச்சியை உலகத் தமிழர் அமைப்பு மற்றும் Global Organisation People of Indian origin என்ற இரண்டு அமைப்புகள் இணைந்து நடத்தின. இந்த நிகழ்ச்சியின் அழைப்பில் தன்வீர் மதராஸி என்பவர் இடம்பெற்றிருக்கிறார். நம் நாட்டில் தடை செய்யப்பட்ட பாப்புலர் பிரண்ட் ஆப் இந்திய (PFI) அமைப்பு, பல அமைப்புகளின் சங்கமம். இதில் ஒன்று தமிழகத்தைச் சேர்ந்த அமைப்பு மனித நீதிப் பாசறை. இந்த அமைப்பின் செயல்பாட்டாளராகவும், பி.எப்.ஐ அமைப்பின் மீடியா பணிகளுக்கு உதவியவரும் தான் இந்த தன்வீர் மதராஸி. சர்வதேச தமிழர்களை பாரதத்திற்கும், ஹிந்துக்களுக்கும் எதிராகத் திருப்ப, மிஷனரிகள் பயன்படுத்திய யுக்தியை, இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கையில் எடுத்திருப்பதாகத் தெரிகிறது.



வளைகுடா நாடுகளில் Indian Social Forum, Indian Cultural Society, India Fraternity Forum என்ற பெயர்களில் என்ற அமைப்பின் பெயரில் பி.எப்.ஐ அமைப்பிற்கு நிதி திரட்டப்பட்டது. பி.எப்.ஐ அமைப்பின் அரசியல் முகமான எஸ்.டி.பி.ஐ அமைப்பின்நிர்வாகிகள்இந்தச்செயலில் ஈடுபட்டனர். சர்வதேச அளவில் பல முகமூடிகளை அணிந்து, நம் நாட்டில் பயங்கரவாத, பிரிவினைவாதச் செயல்களில் ஈடுபடுவதும், அதற்கு ஊக்கம் கொடுப்பதும் அரசின் கண்காணிப்பிற்குள் வந்ததால் அவர்களுக்கு மறைவு தேவைப் படுகிறது. மேலும் இந்த அமைப்புக்களை விரிவு படுத்தவும், புதிய நண்பர்களைப் பெறவும், பொது அமைப்புக்களில் ஊடுருவும் முயற்சியாக இந்த மாநாடுகள் பார்க்கப்பட வேண்டும்.

உலகம் முழுவதும் லிபரல்-ஜிகாதி கூட்டணி வலுவாகச் செயல்பட்டு ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்துவதுடன், அடிப்படைவாத இஸ்லாமிய ஆதிக்கத்தை விரிவுபடுத்தியும் வருகிறது. இந்த மலேஷியக் கூட்டத்தின் கூட்டும், இந்த போக்கை உறுதி செய்கிறது. இந்தியாவில் கலகத்தை ஏற்படுத்த, பல நாடுகளிலிருந்து சமூக வலைத்தளங்கள் வாயிலாக கருத்தியல் யுத்தத்தை மேற்கொண்டு வருகிறார்கள். இந்தியச் சட்டத்திலிருந்து தப்பிக்கவும் முடியும், தொடர் கருத்துத் திணிப்பாலும், செல்வாக்காலும் உள்ளூர்காரர்களை மூளைச் சலவை செய்யவும் இந்தப் பன்னாட்டு ஏவுதளங்கள் வசதியாக அமையும் என்பதால், அயலக தமிழர்கள் குறிவைக்கப்படுகிறார்கள். வங்கதேசம், இலங்கை, நேபாளம் போன்ற நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்பிற்கு இந்த யுக்தி அடித்தளமானது என்பதை இத்தருணத்தில் நினைவு கூறவேண்டும். இந்தப் பின்னணியில் மலேஷிய மாநாட்டு பேச்சாளர்கள் பட்டியலில் இடம் பெற்ற பெயர்கள், இது வணிகர்களுக்கான மாநாடா? பிரிவினைக்கான ஏவுதளமா என்ற கேள்வியை எழுப்புகிறது. வரும் முன் காக்குமா இந்திய அரசு?

# மொகலாய மன்னர்கள் நிகழ்த்திய கொடூரம் பொய்யா A.R.ரகுமான் ?

ராஜேஷ்

இசை என்றாலே அது இனிமையானதாக, கேட்பவர்களுக்கு அமைதியையும், ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தரும் என்பதாலே தான் அந்த இசையை உருவாக்கிடும், பாடலுக்கு மெட்டமைத்திடும் இசையமைப்பாளர்களுக்கு மெல்லிசை மன்னர்கள், ராகவேதவன், இசைஞானி, தேனிசைத்தென்றல் என்றெல்லாம் பட்டம் சூட்டிக் கொண்டாடினர். தமிழ் சினிமாவில் இளம் வயதில் சட்டென நுழைந்ததாலோ என்னவோ A.R..ரகுமானை இசைப்புயல் என்று அழைக்கலாயினர். இந்த இசைப்புயல் அவ்வப்போது புயல்சின்னமாக உருமாறி வருவதை பார்த்து வருகிறோம். அப்படி சமீபத்தில் BBC ஏசியா நெட்வொர்க் சேனலில் வீசிய புயலால் நாடு முழுக்க ஒரு பெரும் பாதிப்பு ( விவாதம் ) உருவானது.

**குற்றச்சாட்டும், உண்மையும்:**

BBCக்கு அளித்த பேட்டியில் A.R.ரகுமான் 3 முக்கியமான கருத்துக்களை குற்றச்சாட்டாக முன்வைத்தார். நான் வாய்ப்புகளைத் தேடி போவதில்லை, ஆனால் வரும் வாய்ப்புகள், சில நாட்களில் கைமாறி போகின்றன. இப்போது மியூசிக் கம்பெனிகள் வேறு சிலரையும் புக் செய்து விடுகிறார்கள். Chinese Whispers (முழுவதும் மாறான செய்தி) போல இஸ்லாமியர் என்பதால் இப்படி நடப்பதாக சொல்கின்றனர். இதுவரை அப்படி நேரடியாக யாரும் சொன்னதில்லை (ஆதாரம் கேட்டு விடக் கூடாதே). இந்த நிலை கடந்த 8 வருடங்களாக நடக்கிறது. கிரியேட்டிவ் சிந்தனை இல்லாதவர்களின் ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ளது கலைத்துறை (இன்பநிதியை சொல்றாரோ). முக்கியமாக இவரே இசையமைத்த Chhaava என்ற படம் ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு எதிராக கட்டமைக்கப்பட்ட பொய் வரலாறு. இப்படிப்பட்ட படங்கள் வசூலையும் அதிகளவில் ஈட்டியுள்ளது ( தான் இசையமைத்த படம் தோல்வி அடைய நினைக்கிறாரா? ) என்ற ஆதங்கத்தையும், அவதூறையும் கிளப்பியுள்ளார்.

பாஜக ஆட்சியில் தான் இவர் சினிமாவிலிருந்து முஸ்லீம் என்பதால் ஓரங்கட்டப்படுவதாக சொல்வது எந்தளவு அபத்தம் என்பதை வாஜ்பாய், மோடி ஆட்சியில் இவர் வாங்கிய விருதுகளே கூறும். அப்படியிருக்க வலிந்து பொய் சொல்வானேன். கிரியேட்டிவ் இல்லாதவர்கள் கையில் சினிமா எனச் சொல்கிறார். தமிழ் சினிமாத்துறையில் கூட ஏவிஎம்,வாசன், வாகினி, ஜெமினி, தேவர் பிலிம்ஸ் என பல பாரம்பரிய தயாரிப்பு நிறுவனங்கள் காணாமல் போய் கந்து வட்டிக்காரர்களிடமும், சன்பிக்ஸ்ர்ஸ், ரெட் ஜெயண்ட், க்ளவுட் 9 போன்ற அரசியல்வாதிகளின் நிறுவனங்களிடமும் சிக்கி சீரழிந்து வருவதும், அந்த அடாவடி பேர்வழிகளிடமிருந்து தான் இவரே ஊதியம் பெற்று வருகிறார் என்பதையும் வசதியாக மறந்து விட்டாரா?

**எப்படி இருந்த பாலிவுட் ?**

தான் முஸ்லீமாக இருந்தால் பாலிவுட் ஏற்குமோ? ஏற்காதோ என அஞ்சி தன் பெயரை திலீப்குமார் என மாற்றிக் கொண்டார் ஒரு ஹீரோ. ஆனால் ராஜகோபால குலசேகர சேகர் ( R.K.Sekar ) என்ற ஆற்காடு “முதலியார்”, மலையாளத்தில் 100க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்த, தென்னிந்திய சினிமாவில் எலக்ட்ரானிக் இசைகோர்ப்பை முதன்முதலில் கொண்டு வந்து சாதனை புரிந்தவரின் மகன் தான் திலிப்குமார். ஆம் அவர் தான் தன் பெயரை தந்தையின் இனிஷியல் கூட சேர்க்காமல் அல்லா ரக்கா ரகுமான் என மாற்றிக் கொண்டிருந்தாலும் வாஞ்சையுடன் வரவேற்று வாய்ப்புகளை அள்ளி வழங்கி பல விருதுகள் கிடைத்திடும் உயரத்திற்கு அழைத்துச் சென்றது இதே தமிழ் மற்றும் பாலிவுட் சினிமா தானே.

காலம் மாறும் போது அவர்கள் தேவையா? இல்லையா? என்பதை ரசிகர்களின் ரசனை தானே முடிவு செய்கிறது. இந்த அடிப்படை கூட தெரியவில்லையா இசைப்புயலுக்கு?

சென்ற மாதம் கூட எத்தியோப்பியா பயணத்தில் நீங்கள் இசைகோர்த்த வந்தே மாதரம் பாடலை கைத்தட்டி ஆரவாரம் செய்த மோடியின் உற்சாகத்தை பார்த்த பின்பும், இஸ்லாமியர் என்பதால் ஓரங்கட்டப்படுகிறேன் என்ற திராவிடத்தன பிரச்சாரம் ஏன் ரகுமான் சார்?

ஹிந்தி தெரியாது போடா என ட்ரெண்டிங் செய்த போதும், தமிழனங்கு என தலைவிரி கோலமாக தமிழன்னையை பதிவு செய்த போதும் நீங்கள் இசையை கொஞ்சம் கொஞ்சமாக மறந்து திராவிட பிரச்சார அரசியலுக்குள் வந்து விட்டீர்களோ என ரசிகர்கள் யோசிக்க ஆரம்பித்து விட்டார்கள். இப்போது ரசிகர்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக பிரித்து பார்க்கும் உஷாரான பக்குவத்திற்கு வந்து விட்டார்கள்.

ஆகவே, உங்கள் நல்ல இசை எப்போதும் போல கொண்டாடப்படும்,

திராவிஷ பிரச்சாரம் புறந்தள்ளப்படும் ரகுமான் பாய்…

# அரசியல் உலா

**- கரிகாலன்**



அரசியல்வாதிகள் அந்தப் பக்கமாக பேசிக் கொண்டிருந்தார்கள். ஒட்டு மொத்தத்தையும் கேட்டே பழகிய எனக்கு ஒட்டு கேட்கும் பழக்கம் இல்லை. சரி என்னதான் சொல்கிறார்கள் கேட்டுவிடுவோம் என்று அவர்கள் பக்கமாக நகர்ந்தேன் என்னை அடையாளம் கண்டு கொண்டதாலோ என்னவோ ஒட்டுமொத்தமாக அவர்கள் கலைந்து விட்டார்கள்.

நடப்பதைப் பார்ப்போம் என்று நானும் நடையைக் கட்டினேன். ஓடியும், நடந்தும் என்னைக் கடந்தவர்கள் ஏராளம். ஓடி வந்தவரில் ஒருவர் பிரபல மருத்துவர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவரைப் பார்க்கிறேன். என்னைத் தாண்டிச் சென்று, பின் திரும்பி வந்தார். அவரிடம் பேசியதை அப்பறம் சொல்கிறேன்.

வழக்கமாக வரும் நண்பர்கள் அன்று தாமதமாக வந்தார்கள். அதில் ஒருவர் நீண்ட விடுப்பு எடுத்திருந்தார். “குடியரசு தினம்லாம் கோலாகலமாக் கொண்டாடிட்டு குதூகலமா வர்றாப்ல இருக்கே!” என்று கேட்டேன்.

“அட ஆமாம்பா, ஊர் பக்கம் போயிருந்தேன். அதுதான் நாலு நாளா வர முடியல. அது சரி நீர்தான குதூகலமா இருக்கீர்! என்னைப் பார்த்து அப்படிச் சொன்னா என்ன அர்த்தம்?” என்னை மடக்கினார் அவர். ஆமோதித்தனர் அருகில் இருந்த மூவரும்.

ஆம், கடந்த சில தினங்களாகவே பலரது பாராட்டு மழையில் நனைந்து நனைந்து எனக்குள் ஒரு பெருமித உணர்வு. உண்மையிலேயே சளி பிடித்து விட்டது.

சென்ற இதழுக்கும் இந்த இதழுக்கும் இடைப்பட்ட கால இடைவெளியில் இங்கே பிரதமர் வந்து போயிருந்தார். முன்பு பித்துப் பிடித்தவர்கள் போல் திரிந்தவர்கள் எல்லாம் பிரதமர் வருகைக்குப் பின் பிரமித்துப் போய் நிற்கிறார்கள்.

காரணம் அங்கே அங்காடித் தெருவில் அறிமுகமான நண்பர்களுக்கு மட்டுமில்லை, ஸ்ரீ தமிழ் வாசகர்கள் அனைவருக்கும் தெரிந்தது தான். இந்த இதழ் உலாப் போகத் தொடங்கிய காலம் முதல் நாம் சொல்லியும், எழுதியும் வருகின்ற எத்தனையோ விஷயங்கள் இப்பொழுது அரசியல் அரங்கில் அரங்கேறத் தொடங்கி விட்டன.

அதைத் தொடர்ந்து நமக்கும் அலைப்பேசி அழைப்புகள் வந்த வண்ணம் உள்ளன. “இன்னைக்கு நடக்கிறதை எப்படி முன்னாடியே சொன்னீங்க?” என்றுதான் பலரும் கேட்கிறார்கள்.

இன்று மட்டுமல்ல, நாளை நடப்பதையும் நேற்றே கணித்துவிட்ட பெருமை ஸ்ரீ தமிழ் இதழுக்கு (எனக்கும்தான்) உண்டு. அதனால் தான் தொலைவில் இருந்து பார்த்தாலும் தெளிவாகத் தெரிகின்ற வகையில் இருக்கின்றது எனது முகமும், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஏறு முகமும்.

முதலில் சந்தித்த மருத்துவர் உட்பட அங்கிருக்கும் அனைவருமே ஒப்புக் கொள்கிறார்கள். நல்ல மாற்றங்கள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன, வெற்றி நம்மை நெருங்கி வருவது கண்கூடாகத் தெரிகின்றது என்பதை நடைபயிலும் நண்பர்கள் எல்லாரும் ஒருமித்த குரலில் ஆமோதித்தனர். நீண்ட காலக் காத்திருப்புக்குப் பிறகு அவர்களின் முகத்திலும் பிரகாசம் தென்பட்டது.

“அன்னைக்கு அப்பா, அம்மாவைச் சுத்தி வந்து மாம்பழம் வாங்கிட்டாரு ஒரு பையன். ஆனா இன்னைக்கு பையனை எவ்வளவோ சுத்தி வந்தும், சட்ட ரீதியா சுத்தி வளைச்சும் மாம்பழத்தை வாங்க முடியாமத் தவிக்கிறாரே ஒரு அப்பா!” கோடிட்ட இடங்களை நிரப்பச் சொல்லிக் கேட்டார் ஒரு நண்பர்.



“தினகரன் சொன்னதைக் கேட்டிருந்தா, பாமகவுல பிரச்சனை எப்பவோ தீர்ந்துருக்கும். இப்படி இவ்ளோ நாளா அது



இழுத்தடிச்சிருக்காது!'' தீர்மானமாகச் சொன்னேன் நான்.

"கூட்டணி பத்திப் பேசக் கூப்பிடவே இல்லையாமே, அண்ணியார் ஏன் அப்படிப் பேசுறாங்க?'', இது ஒருவர். "அளவுக்கு மீறி ஆசைப்படுறாங்களோ?'', இது இன்னொருவர். "வேற பக்கம் பேரம் பேசுறாங்களோ?'', இது மற்றவர். "தினகரன் சொன்னதைக் கேட்டிருந்தா..,'' திரும்பவும் சொன்னேன் நான்.

"சரி, இப்போ ஓபிஎஸ் என்னதான் பண்ணப் போறார்? கூட இருந்தவங்கல்லாம் அவரைத் தவிக்க விட்டுப் பிரிஞ்சு போயிட்டாங்களே!'' அக்கறையுடன் விசாரித்தார் ஒருவர். அவருக்கும் அதே பதிலையே சொன்னேன், "தினகரன் சொன்னதைக் கேட்டிருந்தா..!''

"என்னங்க, தினகரன் சொன்னதைக் கேட்டா.. தினகரன் சொன்னதைக் கேட்டா.. ன்னு எதைக் கேட்டாலும் ஒரே பதிலைச் சொல்றீங்க!'' அலுத்துக் கொண்டார் ஒருவர். "இப்படித்தான் ஆரம்பத்துல சொன்னீங்க, எல்லாம் மேல இருக்கிறவன் பாத்துக்குவான்னு!'' சலித்துக் கொண்டார் மற்றவர். "ரெண்டுமே உண்மை தானே!'' என்றேன்.

"சரி இப்பயாவது சொல்லுங்க, அப்படி தினகரன் என்ன தான் சொன்னாரு?'', பலரும் கேட்டார்கள். இன்னமும் நான் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. சிரிப்பை மட்டுமே பதிலாகத் தந்தேன்.

"ஜனநாயகன் படம் எப்ப தான் வெளியே வரும்?'', "விஜய்க்கு காங்கிரஸ் கை கொடுக்குமா?'', "திமுக கூட்டணியில ஒரு கட்சியாச்சும் அடங்க மறுக்குமா, அத்து மீறுமா?'' வரிசையாகக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள்.

"ஜனநாயகன் படம் வெளியே வர்றது இருக்கட்டும், விஜய் அடுத்து எப்போ வெளியே வருவார் ன்னு அவங்க கட்சிகாரங்களுக்கே தெரியலையே!'', இது ஒருவரின் குழப்பம். "அது எல்லாம் அவரே அப்படிச் சிந்திக்கிறாரா, இல்ல அவர் கூட இருக்கறவங்க இப்படி அவரைத் தவறா வழி நடத்துறாங்களான்னு தெரியலயே!'' சந்தேகத்தைக் கிளப்பினார் ஒருவர்.

"ஆரம்பத்துலருந்து அவர் மையப் புள்ளியா இருப்பார்ன்ற எதிர்பார்ப்பு பலருக்கும் இருந்துச்சு. அதுல நானும் ஒருத்தனா இருந்தேன். மறுக்கலை. ஆனா இப்போ சமீபத்துல நடக்குற விஷயத்தையெல்லாம் வச்சு பார்த்தா அவர் மேல ஏகப்பட்ட சந்தேகம் வருது. ஜனநாயகனா இருக்கிறத விட பட நாயகனா இருந்தா போதும்னு நினைக்கிறார்




போல!'' என் தரப்பில் நான்.

"சரி, என்னதான் சொல்ல வர்றீங்க? சுத்தி வளைக்காமல் நேரடியாச் சொல்லுங்க!'', பொறுமையின் எல்லைக்கே போய்விட்டார் ஒருவர். சொல்லித்தானே ஆக வேண்டும்!

"எல்லாம் மேல இருக்கிறவன் பார்த்துப்பான்'' அப்படிங்கற மனநிலையில இருந்துகடவுள் மேல பாரத்தை போட்டு அவங்க அவங்க வேலையைச் செய்யலாம். கடவுள் நிச்சயமா நமக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுப்பார். இது சரணாகதி தத்துவம்.

"விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை'' ங்கறது வாழ்வியல் தத்துவம். இதைத்தான் தினகரன் சமீபத்துல சொன்னாரு. இன்றைய அத்தியாவசியத் தேவை எதுங்கற சரியான புரிதலும், தற்காலிக இழப்புகளைத் தாங்கிக்கிற மனப் பக்குவமும் இருந்தாத்தான் அப்படிச் சொல்லவோ, நடக்கவோ முடியும்.

"இந்த ரெண்டு வசனங்களும் எல்லா சூழ்நிலைக்கும், எல்லாத் தரப்புக்கும் பொருந்தும். ஒவ்வொரு கட்சிக்குள்ளயும் அந்தந்த கூட்டணிக்குள்ளயும் யாராவது ஒருத்தர் இதை எல்லாம் சொல்லிப் புரிய வச்சா அவங்களுக்கு நல்லது!''

"எங்களுக்குப் புரிய வச்சா உங்களுக்கு நல்லது'' என்றவருக்காக இது. "ஒவ்வொரு தேர்தல்லயும் தோத்ததுக்கப்புறம் கருணாநிதி என்ன சொல்வாரோ அதை இப்ப இந்தத் தேர்தலுக்குப் பிறகு ஸ்டாலின் சொன்னாலும் ஆச்சரியம் இல்லை. அதை திமுக இப்பவே அறிக்கையாத் தயார் செஞ்சு வைச்சுக்கலாம்!''

"எப்பவுமே எங்களுக்குப் புரியிற மாதிரி பேச மாட்டீங்களா?'' முறைத்தார் மற்றவர். அதற்காக இதோ சொல்கிறேன்.

"வாக்குக்குப் பணமும், வகை வகையா இலவசமும் தந்தா தமிழக மக்களை ஏமாத்திடலாம்ன்னு தப்புக் கணக்கு போடுது திமுக. ஆனா தமிழங்க சோத்தால அடிச்ச பிண்டங்க இல்ல, வாக்கால திருப்பி அடிப்பாங்கன்னு திமுக இந்தத் தேர்தலில் புரிஞ்சுக்கும்! ஏன்னா, அமையப்போறது தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி!!''

# பத்மா விருதுகள் -2026

செங்கோட்டை ஸ்ரீராம்

நாட்டின் 77வது குடியரசு தின நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக, 2026ம் வருட பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டன. பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ போன்ற பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. குடியரசு தினத்துக்கு முந்தைய நாள், பத்ம விருதுகள் அறிவிக்கப்படுவது வழக்கம். அந்த வகையில், தமிழகத்தைச் சேர்ந்த 13 பேர் உட்பட மொத்தம் 131 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டன. இந்தப் பட்டியலில், பத்மவிபூஷன் 5 பேர், பத்ம பூஷன் 13 பேர், பத்மஸ்ரீ 113 பேர் என இடம்பெற்றிருக்கின்றனர்.

பிரதமர் மோடி பதவி ஏற்ற பிறகு, மத்திய உள்துறை அமைச்சகத்தால் வழங்கப்படும் பத்ம விருதுகள் சாமானியர்களுக்கான அங்கீகாரமாக மாறி இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க அம்சம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தங்கள் கட்சி சார்பானவர்களுக்கு அரசின் உயரிய விருதுகளை அளித்து அவர்களை திருப்திப்படுத்துவார்கள் அல்லது தங்கள் சார்பு நபர்களாக மாற்றிக் கொண்டிருப்பார்கள். பிரதமர் மோடி பதவி ஏற்ற பின்னர், சில அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக அல்லது அதை விமர்சனம் செய்யும் வகையில், ஆளும் அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் வகையில், முன்னர் அரசால் அளிக்கப்பட்ட விருதுகளை திருப்பி அளிக்கும் அறிக்கை போர் அரசியலை சிலர் மேற்கொண்டதை கவனித்திருப்போம். இந்த நடவடிக்கை ஒன்றே, அரசின் உயரிய விருதுகளை அரசியல் சார்பு நபர்களுக்கு அளித்து காங்கிரஸ் அரசியல் செய்திருந்தது என்பதை உணரலாம்.

ஆனால் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு, இது போன்ற அரசியல் செய்யும் நபர்களுக்கு விருதுகளை அளிக்கும் மோசமான பின்னணியை தகர்த்தெறிந்தது. நாட்டில் உண்மையாகவே அவரவர் ஈடுபட்ட துறைகளில் சாதித்த நபர்களை கௌரவப்படுத்தும் வகையில் மக்களுக்கு விருதுகளை மத்திய அரசு அளித்து வருகிறது.

எனவே, சாதனையாளர்களுக்கு விருதுகள் அளிக்கப்படும் போது, அந்த நபர்களின் பின்னணி, அரசியல் பின்புலம் இவற்றை எல்லாம் மத்திய உளவுத்துறைகள் மூலம் தீர விசாரித்து, அரசியல் கலந்திராத வெகு சாமானிய மக்களுக்கே விருதுகளை அளித்து வருவதை இந்நாட்களில் காண்கிறோம்.

**பத்ம விருதுகள் –** 2026

2026ம் ஆண்டுக்கான பத்ம விபூஷன், பத்ம பூஷன், பத்ம ஸ்ரீ விருதுகள் பெறுவோரின் பட்டியலை மத்திய அரசு ஜன.25 அன்று அறிவித்தது. மிக உயரிய விருதான பத்ம விபூஷன் இந்த முறை மஹாராஷ்டிராவைச் சேர்ந்த பிரபல நடிகர் அமரர் தர்மேந்திரா, கேரள முன்னாள் முதல்வர் அமரர் வி.எஸ். அச்சுதானந்தன், கேரளாவைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி.தாமஸ்; கேரளாவைச் சேர்ந்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான பி.நாராயணன், உ.பி.,யைச் சேர்ந்த வயலின் கலைஞர் என்.ராஜம் என ஐந்து பேருக்கு பத்ம விபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் தர்மேந்திராவும், அச்சுதானந்தனும் அமரர்களாகி விட்டனர். அவர்களுக்கு உரிய கௌரவத்தை நாடு பத்மவிபூஷனாக திருப்பிச் செலுத்துகிறது.

நடிகர் மம்முட்டி, பின்னணிப் பாடகி அல்கா யாக்னிக் உள்ளிட்ட திரைப் பிரபலங்கள், விளையாட்டுப் பிரிவில் விஜய் அமிர்தராஜ் உள்ளிட்டோருக்கு பத்ம பூஷன் அறிவிக்கப்பட்டது. கலைப் பிரிவில் நடிகர் மாதவன், கிரிக்கெட் வீரர் ரோகித் ஷர்மா, இந்திய மகளிர் அணியின் கேப்டன் ஹர்மன் ப்ரீத் கவுர் உள்ளிட்ட பிரபலங்களுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டது. உயரிய விருதான பத்மபூஷன், தமிழகத்தைச் சார்ந்த கள்ளிப்பட்டி ராமசாமி, அவர்களுக்கு மருத்துவத்துறையில் ஆற்றிய சேவைக்காகவும், எஸ்.கே.எம். மயிலானந்தன் அவர்களுக்கு சமூக சேவைக்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பத்ம பூஷண்:**

**கே.ஆர்.பழனிசாமி:**

50 ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவ சேவையில் ஈடுபட்டு வருபவர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி. இரைப்பை குடல் நோய் பிரிவு சிறப்பு மருத்துவர். நவீன மருத்துவ ஆராய்ச்சி கள் மூலம் தனித்திறனை நிலைநாட்டி வருகிறார். 2007ல், ஏற்கெனவே இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.

**எஸ்.கே.எம்.மயிலானந்தன்**

எஸ்.கே.எம்., குழும நிறுவனர். பொது சுகாதாரம், சமூக நலனை மேம்படுத்த பெரும் பங்களித்தவர். 3,000க்கும் மேற்பட்ட கிராமங்களில், யோகா, தியானம், இலவச மருத்துவ முகாம் நடத்தியுள்ளார். குழந்தைகள் நலனை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார். இவருக்கு 2013ல் ஏற்கெனவே பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

**பத்மஸ்ரீ விருது பெறும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்:**

**ரஞ்சனி, காயத்ரி:**

கர்நாடக இசையுலகில் ராகா என முதல் இரு எழுத்துகளால் அறியப்படும் ரஞ்சனி, காயத்ரி

சகோதரிகள், வயலின் மற்றும் கர்நாடக இசைப் பாடகியரான இவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக கல்பனாஸ்வரம் பாடுவதிற்கு இணையான "ஸ்வரதூரி" எனும் வகையில் தங்கள் தனித்திறனை வெளிப்படுத்தி வருகின்றனர். பாரம்பரிய கர்னாடக இசைக் கச்சேரிகள் மட்டுமின்றி, ஹிந்துஸ்தானி, ஜுகல்பந்தி, இளையராஜாவின் இசையைத் தொகுத்து 'ராஜா பை ராகா' என பல்வேறு தளங்களில் செயலாற்றி வருகின்றனர்.

**எச்.வி.ஹண்டே:**

சென்னையைச் சேர்ந்த பிரபல மருத்துவர். எம்.ஜி.ஆர்., ஆட்சிக் காலத்தில் இரண்டு முறை சுகாதாரத்துறை அமைச்சராகவும் இருந்தார். தமிழகத்தில் போலியோ மற்றும் தட்டம்மை ஒழிப்பில் பெரும் பங்காற்றினார். பச்சிளம் குழந்தைகளின் இறப்பு விகிதத்தை பெருமளவு குறைக்க நடவடிக்கை எடுத்தார். 4,500க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டமைத்தார்.

**ராமசாமி :**

இயற்கை வேளாண்மைக்கு ஆதரவாக செயல்பட்ட முன்னணி வேளாண் விஞ்ஞானி. வேளாண் உயிர்தொழில்நுட்பம், உர-நீர்ப்பாசனம், உயிர் எரிவாயு வளர்ச்சி உள்ளிட்ட துறைகளில் தேசிய கொள்கை வடிவமைப்பில் பங்காற்றியவர். 30க்கும் மேற்பட்ட ஆய்வுத் திட்டங்களுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

**விஜயகுமார்:**

முன்னாள் ஐ.பி.எஸ்., அதிகாரி. காடுகளில் நடக்கும் சண்டை, ஊடுருவல் தடுப்பு நடவடிக்கைகளை கையாள்வதில் நிபுணத்துவம் பெற்றவர். நக்சல் பயங்கரவாதம், சந்தனக் கடத்தல் வீரப்பன் தொடர்பான முக்கிய நடவடிக்கைகளில் உத்திகளை வகுத்து செயல்பட்டு, வீரப்பனைச் சுட்டுக் கொன்றவர்.

**திருத்தணி சுவாமிநாதன்:**

திருமுறை பஜனைப் பாடல்களில் தனித்த அடையாளம் பதித்தவர். 60 ஆண்டுகளுக்கும் மேல், இவரது இசைப் பயணம், பக்தி இசைக்கு உயிரூட்டியது. உலகம் முழுதும் இசை நிகழ்ச்சி கள் நடத்தி, இளம் தலைமுறையினருக்கு திருமுறை மரபைக் கொண்டுச் செல்பவர்.

**புண்ணியமூர்த்தி நடேசன்:**

கால்நடை மருத்துவத் துறையில் முன்னோடி. பசுக்களை பாதிக்கும் நோய்களுக்கு, நோய் எதிர்ப்பு மருந்துகளை அதிகம் பயன்படுத்தாமல், மூலிகை சிகிச்சை முறைகளை உருவாக்கி, பாரம்பரிய தீர்வுகளை வழங்கினார். இதனால், பாலில் ஆன்டிபயாடிக் மருந்துகளின் எச்சம் குறைந்தது. எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மாடுகளுக்கு சிகிச்சை அளித்துள்ளார்.

**ஆர்.கிருஷ்ணன்:**

மறைவுக்கு பின் இவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 3,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த குரும்பா ஓவியக் கலையை மீட்டெடுத்த ஓவியர். இயற்கை வண்ணங்களை பயன்படுத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓவியங்களை உருவாக்கினார்.

**ராஜஸ்தபதி காளியப்ப கவுண்டர்:**

வெண்கல சிலை வடிவமைப்பாளர். 50 ஆண்டுகளுக்கும் மேலான தன் கலை பயணத்தில், உலகின் மிகப்பெரிய வெண்கல சிலைகள் உள்ளிட்ட பல படைப்புகளை உருவாக்கி உள்ளார். 100க்கும் மேற்பட்ட கோவில்களின் திருப்பணிகளில் பங்கேற்றுள்ளார்.

**சிவசங்கரி:**

தமிழ் இலக்கிய உலகில் மதிப்புக்குரிய எழுத்தாளர். 30க்கும் மேற்பட்ட நாவல்கள், 150 சிறுகதைகள் எழுதியுள்ளார். சாதாரண மனிதர்களின் உணர்வுகள், உறவுகள், வாழ்க்கை மதிப்புகளை தன் எழுத்துக்களில் ஆழமாக பதிவு செய்தவர்.

**திருவாரூர் பக்தவச்சலம்:**

மிருதங்க இசை மேதை. தஞ்சாவூர் பாணி மிருதங்க இசையில் தனித்திறன் கொண்டவர். மிருதங்க கலையின் பாதுகாப்பு, வளர்ச்சி, உலகளாவிய பரவலுக்கு பங்காற்றுபவர்.

**காமகோடி:**

சென்னை ஐஐடி இயக்குனர். புகழ்பெற்ற கணினி விஞ்ஞானி. மைக்ரோபிராசசர் எனப்படும், கணினி சிப்பை முதன் முறையாக 'சக்தி' என்ற பெயரில் உள்நாட்டிலேயே உருவாக்கியவர். தொலைத்தொடர்பு பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் கொள்கை அமலாக்கம் மூலம், தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளார்.

**ராமமூர்த்தி ஸ்ரீதர்:**

சமுதாய வானொலி சேவை தொடங்குவதில் முன்னோடியாக செயல்பட்டவர். தற்போது கோவையில் வசிக்கும் இவர் 'இந்திய சமூக வானொலியின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். நாட்டில் முதல் சமூக வானொலி நிலையத்தை துவங்கியவர். உலகிலேயே குழந்தைகளுக்கான மிகப்பெரிய தொடர் கதையை 18 மொழிகளில் வானொலியில் வழங்கியுள்ளார்.

**புதுச்சேரி**

**பழனிவேல்:**

சிலம்பக் கலையை மீண்டும் பிரபலப்படுத்திய பயிற்சியாளர். பாரம்பரிய போர்க்கலையை இளம் தலைமுறையிடம் கொண்டுச் செல்ல, மாமல்லன் தற்காப்பு மற்றும் நாட்டுப்புறக் கலை வளர்ச்சி மன்றம் அமைத்தார். இதுவரை 5,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் இவரிடம் சிலம்பம் பயிற்சி பெற்றுள்ளனர்.

# தமிழர் பெருமையை பறைசாற்றும் கும்பமேளா முடக்கும் தமிழக அரசு

ரமேஷ்

பிரயாகை திரிவேணி சங்கமத்தில் கும்பமேளா நடக்கும், அது என்ன கேரளாவில் கும்பமேளா என்ற கேள்வி வருகிறது. தென்னகத்து கங்கை என்று அழைக்கப்படும் பரதப்புழா ஆற்றில், திருநாவாயப் பெருமாள் ஆலயத்தில் காலம் காலமாக நடந்து வந்த கும்பமேளா, ஹைதர் அலியின் படையெடுப்பால் தடைபட்டது. அதன் பின் இப்பகுதியை ஆண்ட கிறிஸ்தவ ஆங்கிலேயர் மாமாங்கத்தைத் தடை செய்தனர். சுமார் 250 ஆண்டுகளுக்கும் மேலான தொடர் போராட்டத்திற்குப் பின் ஹிந்துக்கள் அதை மீட்டு இருக்கின்றனர்.

பரதப்புழா ஆறு, தமிழகத்தில் உடுமலைப்பேட்டை திருமூர்த்தி மலையில் உற்பத்தியாகி, ஆனைமலையைக் கடந்து, பாலக்காடு வழியாக செல்கிறது. “தக்ஷிண கங்கை” என்று போற்றப்படும் இந்த நதி நமது பாரத தேசத்து புண்ணிய தீர்த்தங்களில் ஒன்று.

**திருநாவாயா திருத்தல மகிமை**

திருநாவாயாப் பெருமாள் ஆலயம் 108 திவ்யதேசங்களில் 76ம் திவ்யதேசமாகும். நம்மாழ்வாரும் திருமங்கை ஆழ்வாரும் பெரியாழ்வாரும் பாடி மகிழ்ந்த சேர நாட்டுத் திருத்தலம். நம்மாழ்வார் திருவாய்மொழியில்

“**மணாளன் மலர் மங்கைக்கும் மண் மடந்தைக்கும்**
**கண்ணாளன் உலகத்துயிர் தேவர்கட் கெல்லாம்**
**விண்ணாளன் விரும்பியுரையும் திரு நாவாய்**
**கண்ணாரக் களிக்கின்றது இங்கு என்று கொல்**
**கண்டே**”

என்று அதன் பெருமையினை சொல்கிறார். இது பஞ்ச பாண்டவர்கள் வழிபட்ட கோவில். முகுந்தன் கஜேந்திரனுக்கு இங்கு மோட்சம் அருளியதால், காசிக்கு நிகராக மோட்ச பாக்கியம் அருளும் இந்தத் திருத்தலத்தில், இன்றும் அமாவாசையில் பித்ரு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆற்றுக்கு அக்கரையில் பிரம்மதேவருக்கும், சிவபெருமானுக்கும் தனி கோயில் உள்ளது. இதன் காரணமாக இத்தலம் சுசீந்திரம் தலம் போல் மும்மூர்த்தி தலம் என்றும் அழைக்கப்படுகிறது.

திருமங்கையாழ்வார் இத்தலத்தை திருக்கோஷ்டியூர் மற்றும் திருநறையூரோடு ஒப்பிட்டு மங்களாசாசனம் செய்துள்ளார். இவ்வாறு தமிழோடும் தமிழகத்தோடும் நெருக்கமானது இந்த சேர நாட்டுத் திருத்தலம்.

**சேரமான் பெருமான்**

கேரளத்தில் ஒரு மன்னரின் ஆட்சி காலம் 12 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய சேரமான் பெருமான், இந்த விழாவில் தேர்ந்தெடுக்கப்படுவார். இந்த விழாவில் வித்வத் சதஸ், களரிப்பயிற்றுப் போட்டி, வணிகம் என்று பல நிகழ்வுகள் இடம்பெறும். இந்த சேரமான் பெருமான் வரிசையில் இடம் பெற்றவர் தான் 63 நாயன்மார்களில் ஒருவரான சேரமான் பெருமான். குறித்த காலம், தேர்வு முறை என்று நவீன ஜனநாயகக் கோட்பாடுகளின் முன்னோடியாக விளங்கிய திருவிழா இந்த மாமாங்கத் திருவிழா.

**கேரளத்தின் திருப்பரங்குன்றம்**

திருப்பரங்குன்றம் கதையின் கேரளத்து வெர்ஷன் தான் திருநாவாய முகுந்தனின் கும்பமேளா. கேரளத்து ஹிந்துக்கள் சுமார் 250 ஆண்டுகளுக்குப் பிறகு வெற்றிக் கொடி நாட்டி தமிழகத்துக்கு முன்னோடியாகி உள்ளனர்.

கிபி 1762 வரை தொடர்ந்து நடந்து வந்த இந்த கும்பமேளா, கிபி 1766ல் ஹைதர் அலியின் கேரள படையெடுப்பிற்குப் பிறகு நின்று விட்டது. கிறிஸ்தவ ஆங்கிலேயரும் இதற்குத் தடை விதித்தனர். மலப்புரம் மாவட்டம் இஸ்லாமிய மயமானது. இந்த கும்பமேளாவினை மீண்டும் நடத்த வெவ்வேறு காலகட்டங்களில் எடுத்த முயற்சிகள் எல்லாம் தடைப்பட்டன. காலம் இழுத்துக் கொண்டே சென்றது ஹிந்துக்கள் விடுவதாக இல்லை. சுதந்திர





பாரதத்திலும் காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும் சிறுபான்மைக்கு பல்லக்கு தூக்க இந்த கும்பமேளா தடுக்கப்பட்டே வந்தது.

ஆதாரமும் வரலாறும் இந்துக்களிடம் இருக்க, அந்த இந்து வழிபாடு நடக்கும் இடமும் ஹிந்துக்களிடமே இருக்க, "250 ஆண்டுகளுக்கு மேலாக நடக்காத பண்டிகை இனி ஏன் நடக்க வேண்டும்? மதவெறியில் கலவரம் செய்ய விரும்புகின்றீர்களா?" என்று எதிர்ப்புக் குரல் வந்தது. இந்த விழாவிற்கான ஏற்பாட்டைத் துறவிகளும், ஹிந்து அமைப்புக்களும் தொடங்கியவுடன், கேரள நதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கனரக இயந்திரங்கள் கொண்டு ஆற்றுப் படுகையை சீர் செய்யக் கூடாது என்று திருநாவாயா ஊராட்சி வாயிலாகத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆச்சரியப்படுவதற்கில்லை, இந்தப் பஞ்சாயத்துத் தலைவர் இந்திய தேசிய முஸ்லீம் லீக் கட்சியைச் சார்ந்தவர். பரதப்புழை ஆற்றைக் கடக்க தற்காலிகப் பாலம் அமைத்தவுடன், கூட்ட நெரிசல் ஏற்பட்டு பலர் மரணிக்க வாய்ப்புள்ளது என்று அதற்கும் அரசு தரப்பில் எதிர்ப்பு வந்தது.

ஆனால் இந்துக்கள் போராடினார்கள், பெரிய போராட்டம் வெடித்தது விஷயம் வெளிவராமல் ஈரானிய அரசு உண்மையினை மறைத்தது போல் எல்லாமும் மறைத்தார்கள். அரசு செய்திகளை மறைக்கலாம் வரலாற்றையும் இந்து உணர்வையும் மறைக்கமுடியாது. இந்த போராட்டம்தான் உள்ளாட்சி தேர்தலில் இந்து வாக்காக கம்யூனிஸ்ட் காங்கிரசுக்கு எதிரான இந்து எழுச்சியாகவும் வந்தது இதனால் வேறு வழியின்றி கம்யூனிச அரசு இறங்கி வந்தது எதிர்கட்சியான காங்கிரசுக்கும் வேறு வழி இல்லை, மக்களின் எழுச்சிக்கு அஞ்சி விழாவிற்கு ஒப்புகொண்டார்கள். 2026 ஜனவரி 19ம் தேதி முதல் அதாவது அமாவாசை முடிந்த மறுநாளில் இருந்து, சூரியன் மகரராசியிலும் குரு மிதுனத்திலும் இருக்கும் இந்த 15 நாட்கள் அங்கு நடந்து வரும் புனிதநீராட்டு பிப்ரவரி 3ந்தேதி நிறைவு பெறுகிறது.

**இஸ்லாமியர் மனம் புண்படும் எனவே கும்பமேளா நடத்தக் கூடாது என்று பிடிவாதம் பிடித்த காங்கிரஸும், கம்யூனிஸ்டும் ஹிந்துக்களின் தார்மீக பாரம்பரிய வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டதை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை**

"70 ஆண்டுகாலம் விளக்கு ஏற்றாத தூணில் இப்போது ஏன் ஏற்றவேண்டும்?" என்று கேட்கப்பட்ட அதே குரல்தான் கேரளத்திலும் ஒலித்தது. இஸ்லாமியர் மனம் புண்படும் எனவே கும்பமேளா நடத்தக் கூடாது என்று பிடிவாதம் பிடித்த காங்கிரஸும், கம்யூனிஸ்டும், ஹிந்துக்களின் தார்மீக பாரம்பரிய வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டதை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை

**தமிழகத்தில் தடை**

கேரளத்து கும்பமேளாவுக்காக அந்த புனிதமான பரதப்புழா எனும் தென்னக கங்கை உற்பத்தியாகும் திருமூர்த்தி மலையில் இருந்து கும்பமேளா ரதம் கிளம்பி ரத சப்தமி அன்று கேரளாவினை அடைவதாக ரத யாத்திரை விழாக்குழுவினரால் திட்டமிடப்பட்டது. கும்பமேளா ரதத்தில் பிரதிஷ்டை செய்த மகாமேரு யந்திரத்தை திருமூர்த்தி மலையில் நதிமூலத்தில் வைத்து பூஜை செய்து பிறகு நதியின் போக்கிலே உள்ள அனைத்து ஊர்களிலும் சிறப்பு வழிபாடு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தமிழகத்தில் திருப்பூர், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோயம்பத்தூர், எட்டிமடை ஆகிய பகுதிகளில் ரத யாத்திரை விழா ஏற்பாடுகள் நடந்தன. ஆனால் ஹிந்து விரோத திமுக அரசு ரதயாத்திரைக்கும், தமிழகத்தில் திட்டமிட்ட ஊர்களில் வழிபாடு நடத்துவதற்கும் தடை விதித்தது. இது மட்டுமன்றி, பிரதிஷ்டை செய்த மகாமேருவை ரதத்தில் இருந்து பிரித்து எடுத்து, தனியாக பாலக்காடு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டது தமிழக காவல்துறை. பிறகு மகாமேரு இல்லாத ரதம் தனியாக பாலக்காடு சென்றது. பாலக்காடில் இருந்து இதர கேரள ஊர்களில் திட்டமிட்டபடி சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டு, ரதசப்தமி அன்று ரத யாத்திரை நிறைவு பெற்றது. கேரளத்தில் கம்யூனிஸ்ட் அரசு அனுமதித்த ரதயாத்திரை விழாக்களை, தமிழகத்தில் தடை செய்து தனது பாவக்கணக்கைக் கூட்டிக் கொண்டது ஹிந்து விரோத திமுக

**ஒன்றுபட்ட ஹிந்து சக்தி**

ஒன்றுபட்ட ஹிந்து சக்தி வென்று தீரும் என்ற உண்மைக்கு எடுத்துக்காட்டு மீட்கப்பட்ட பரதப்புழா நதியின் கும்பமேளா. 250 ஆண்டுகளுக்கு மேலாக போராடி ஒரு பண்டிகையினை அந்நிய மதத்திடம் இருந்து மீட்டிருப்பது, நிச்சயம் ஒரு சரித்திர சாதனை. ஆனால் இந்த வரலாற்றுச் சாதனையும், 250 ஆண்டுகளுக்கு மேலாக தொடர் போராட்டங்களும் மறைக்கப்பட்டுவிட்டன என்பது மன வேதனையைத்தான் தருகிறது. 250 ஆண்டுகளுக்கு முன் தடைபட்ட புனித நீராட்டை கேரள இந்துக்கள் மீட்டுவிட்டார்கள், ஆனால் தமிழகத்தில் 70 வருடம் முன்பு வரை இருந்த திருப்பரங்குன்ற மலை உச்சி விளக்குதூண் உரிமையினை இன்று வரை மீட்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறோம்.




**யாருக்கும் அடிமையாக இருக்க நான் அரசியலுக்கு வரவில்லைனு தவெக தலைவர் விஜய் சும்மா விசில் அடிச்சி சவுண்ட் உட்ருக்காரு !**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

**ஒருவேளை கமல், திருமா, வைகோ, ச்சாச் ச்சா அவங்க எல்லாம் எவ்ளோ சீனியர். அவங்களை எல்லாம் அப்டி சொல்லிருக்க மாட்டாரு... அப்படியெல்லாம் இருக்காதுயா .... நம்புயா**

**பிரிந்தவர்களுக்கு அதிமுக வாசல் திறந்தே இருக்கிறது அப்டினு ஒரு CALL For Ad குடுத்துருக்காரு முன்னாள் அமைச்சர் உதயகுமார்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

வாஸ்தவன் தான், ஆனா பாருங்க உங்க வாச கதவைவிட, அறிவாலய Entrance DOOR ரொம்ப பெருசா இருக்கு !

**பங்கு.... இந்த மேட்டரை பார்த்தியா? பெண் குழந்தைகள் பாடிய பாடலைக் கேட்டு, அவர்களை தன் மடியில் அமரவைத்து உரையாடிய முதலமைச்சர் ஸ்டாலின்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அய்யய்யோ ! ஒரத்தநாடு வைத்தியலிங்கம் கோச்சிக்க போறாரு..... ஏன்னு யோசிக்கிறியா ? முதல்வர் மடியில் விழுந்த புறா நான்னு கட்சியில் இணைஞ்சப்ப அவர் வாயால் உதிர்த்தது

**எம்ஜிஆரின் பாடல்கள் என்னை வளர்த்ததுனு விருது வழங்கும் விழா ஒன்னுல ஏ.டி.எஸ்.பி சிவசங்கர் ரொம்ப பெருமையா பேசிருக்காரு.....**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

சரிதான்... இவரை இந்நேரம் Transfer பண்ணிருக்கணுமே... பிழைக்கத்தெரியாத மனுஷன். கலைஞரின் கவிதை வரிகளால் வளர்ந்தேன்னு சொல்லிருந்தா சாருக்கு ப்ரோமோஷன் கிடைச்சிருக்கும். ஹ்ம்ம் வெள்ளந்தியா இருக்காரு.....

**போற போக்குல.... இஸ்லாமியர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுனு முதலமைச்சர் பேசி இருக்காருப்பா....**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இல்லியா பின்ன, ஜமேஷா முபீன் சிலிண்டர் குண்டு வெச்சப்ப, ஜாபர் சாதிக் போதைப் பொருள் வித்தப்ப , திருப்பரங்குன்றம் மலைமீது நவாஸ் கனி மாமிசம் சாப்டப்ப, கோவை குண்டு வெடிப்பு குற்றவாளி பாட்ஷா மரண ஊர்வலத்திற்கு 5000 பேர அனுமதிச்சப்ப இப்டி எவ்ளோ பாதுகாப்பு அவரு ஆட்சியில அவிங்களுக்கு....

**ராகுலுடன் கூட்டணி குறித்து தில்லியில் கனிமொழி ஆலோசனை பண்ணிருக்காங்கலாமே !**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

தமிழகம் என்றுமே தில்லிக்கு Out Of Control னு CM சொல்லுவாரே ! இந்த தில்லி ஒருவேளை சத்தியமூர்த்தி பவன்ல இருக்குற Annexure Buiding பேரா இருக்குமோ ? இருக்கும் இருக்கும் !! ..

**- நா.பாஸ்கரன்**

**விஜயுடன் சேர்ந்தால் காங்கிரசுக்கு தமிழகத்தில் மீண்டும் அதிகாரம் கிடைக்கும்னு விசய் அப்பா டயர்டக்கரு எஸ்.ஏ சந்திரசேகர் சொன்னதை பார்த்தியா ?**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அப்பாவுக்கு பிள்ளைக்கும் நாலுக்கு மூனு சீர் ல ஒரு குறள் எழுதிருக்கேன். நீயே பாரு

தந்தை மகற்காற்றும் உதவி ஜார்ஜ்
கோட்டையில் விஜயை அமர்த்தல்

**நல்ல படியா கூட்டணி அமைஞ்சிருச்சுனு திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் சாமி தரிசனம் பண்ணிருக்காருப்பா....**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இப்பல்லா நான் வள்ளுவருக்கு Tough கொடுக்க ஆரமிச்சுட்டேன்...

மகன் தந்தைக்காற்றும் உதவி அரசியலில்
ஒய்வும், கட்சிக் காவும்

# போதையைத் தொடர்ந்து ஆயுதக் கடத்தல் அபாயத்தில் தமிழகம்

பால்கி





திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையத்தில் துப்பாக்கி வியாபாரத்தில் ஈடுபட்ட தி.மு.க வின் பொறியாளர் பிரிவு நிர்வாகி கைது செய்யப்பட்டார். தி.மு.கவின் பொறியாளர் பிரிவு நிர்வாகியான முல்லிக்குளத்தைச் சேர்ந்த இரத்தினபாலன், மத்திய பிரதேசத்தில் இருந்து வாங்கி வந்த நாட்டுத் துப்பாக்கியை திருநெல்வேலி, மேலப்பாளையம் அமீர் சுகைல் என்பவருக்கு விற்றுள்ளார். இந்தத் துப்பாக்கியை , மேலப்பாளையத்தைச் சேர்ந்த முசம்பில் முர்ஷிதும் அவன் கூட்டாளியுமான திண்டுக்கல் பேகம்பூரில் வசிக்கும் சாகுல் ஹமீதும் அதிக விலைக்கு, திண்டுக்கலில் பைனான்ஸ் தொழில் நடத்திவரும் நபருக்கு விற்றுள்ளனர். வாங்கிய துப்பாக்கி சரியாக இயங்காததால், அதை திண்டுக்கலைச் சேர்ந்த சிக்கந்தர் ஷேக் ஒலி மற்றும் சதாமிடம் கொடுத்து, இரத்தினபாலன் மற்றும் முசம்பில் முர்ஷிதிடம் கொடுத்து பணத்தைத் திரும்பிப் பெற்றார். இந்நிலையில், இந்தத் துப்பாக்கியை மீண்டும் அமீர் சுகையல், இரத்தினபாலன் மற்றும் அவர் கூட்டாளிகள் விற்க முற்படும்போது, அவர்களை காவல் துறை கைது செய்தது.

இந்த வழக்கில் தொடர்புடைய அமீர் சுகைல், முசம்பில் முர்ஷித், சாகுல் ஹமீது ஆகியோர் முல்லான் சையத் அலியின் கூட்டாளிகள். இவர்கள் முல்லான் சையத் அலியுடன் இணைந்து திருநெல்வேலியைச் சேர்ந்த பெர்டின் ராயன் என்பவர் மீது 2024 ஆம் ஆண்டு கொலை வெறித் தாக்குதல் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டனர். முல்லான் சையத் அலி, அல் உம்மா அமைப்பில் இருந்தவன். திருச்சி மாநகர பா.ஜ.க தலைவராக இருந்த டாக்டர் ஸ்ரீதர் அவர்களை வெட்டிய வழக்கு, மேலப்பாளையத்தில் காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஒருவரைக் கொன்ற வழக்கு, பெங்களூரு பா.ஜ.க அலுவலகத்தில் குண்டு வைத்தது தொடர்பான ஆயுத வழக்கு, நடத்தை சரியில்லாத காரணத்தால் ஹாரூனிஷா என்ற பெண்ணைக் கொன்று ஷரியத் சட்டத்தை நிலைநாட்டிய வழக்கு என்று பல வழக்குகளில் சிக்கியவன் பயங்கரவாதி முல்லான் சையத் அலி. இந்த வழக்கில் தொடர்புடைய திண்டுக்கல் ஷாகுல், அல் ஆசித் என்ற திண்டுக்கலைச் சேர்ந்த பயங்கரவாதியின் உறவினரை தொழில் போட்டி காரணமாக வீதியில் வெட்டிக் கொன்றான்.

இந்த ஆயுத வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாதி முல்லான் சையத் அலியின் கூட்டாளிகளாக இருப்பதால், ஆயுதக் கடத்தல் கும்பலுக்கும், இஸ்லாமிய பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு இருக்க வாய்ப்புள்ளது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட தி.மு.க பொறியாளர் பிரிவு நிர்வாகி இரத்தினபாலன், முன்னாள் திருநெல்வேலி மேயரும், திமுக கட்சியைச் சேர்ந்தவருமான உமா மஹேஸ்வரியின் உறவினர். இரத்தினபாலனின் உறவினரான முல்லிக்குளம் பிரபு, பா.ஜ.க வின் ஜெகன் என்பவரைக் கொலை செய்ததற்காக கைது செய்யப்பட்டார். இந்தக் கொலையை, தி.மு.க திட்டமிட்டு செய்கிறது என்று அப்போதைய பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை அவர்கள் தெரிவித்திருந்தார். இந்த நிகழ்வுகளை வைத்துப் பார்க்கும்போது, தி.மு.க வினர் உதவியுடன், பயங்கரவாதிகள் ஆயுதக் குவிப்பில் ஈடுபடுகிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

ஜாபர் சாதிக் என்ற தி.மு.க வின் அயலகப் பிரிவு நிர்வாகி போதைக் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டு, அவன் இடத்தில் போதைத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்தச் செய்தியைச் சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களை தி.மு.க செயலாளர் நுங்கம்பாக்கம் சிற்றரசின் தலைமையிலான கூட்டம் தாக்கியது. போதையில் கொலை செய்வதும், தாக்குதல் நடத்துவதும் அதிகரித்துக் கொண்டே போனாலும், அரசின் நடவடிக்கைகளும், கண்டணங்களும் அழுத்தமாக இல்லை. ஆயுதக் கலாச்சாரமும், போதையும் பின்னிப் பிணைந்தவை ! சர்வதேச பயங்கரவாதத்தின் தூண்களாகக் கருதப்படும் இந்த இரட்டையரை தி.மு.க அரசு வளர்க்கிறதா ? தேசத்தை சிதைக்கும் சதியை ஆதரிக்கிறதா ?

# ஈவேரா பித்தலாட்டம் புத்தக தடை / தினமலம் புத்தகத்திற்கு அனுமதி

தமிழ்நேசன்

சென்னை புத்தக கண்காட்சியில் வெளியிடப்பட்ட, 'இந்தி எதிர்ப்பு போரில் ஈ.வெ.ரா., பித்தலாட்டம்' என்ற மறுபதிப்பு நூலை போலீசார் பறிமுதல் செய்துள்ளது, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈழத்து சிவானந்த அடிகள், பலராலும் மதிக்கப்பட்ட தமிழறிஞர்; சிவனடியார். இவர், 1965ம் ஆண்டு 'இந்தி எதிர்ப்பு போரில் திராவிட பித்தலாட்டம்' என்ற நூலை எழுதி வெளியிட்டார். இந்தி எதிர்ப்பு போராட்டம் தொடங்கியது எப்படி, யார் அதை முன்னின்று நடத்தியது, அதில் ஈ.வெ.ரா., எப்படி இடையில் வந்து சேர்ந்தார், அதை எப்படி தன் சுயநலத்துக்கு பயன்படுத்திக் கொண்டார் என்று ஈழத்து சிவானந்த அடிகள் அந்த நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

இந்த நூல் வெளியானபோது, அதில் குறை கூறப்பட்டுள்ள ஈ.வெ.ரா., உள்ளிட்ட அனைவரும் உயிரோடு தான் இருந்தனர். ஆனால், யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. புத்தகத்தைத் தடை செய்யவும் இல்லை.இந்த நூல், 60 ஆண்டுகளாக வாசிக்கப்பட்டு, பல முறை மறுபதிப்பும் செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு புத்தக கண்காட்சியில் தமிழம் பதிப்பகத்தால் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

புத்தகத்தின் பெயர் மட்டும், 'இந்தி எதிர்ப்பு போரில் ஈவெரா பித்தலாட்டம்' என்று மாற்றப்பட்டு, புத்தக கண்காட்சியில் வெளியிடப்பட்டது. புத்தகம் வெளியான மறுநாள், சென்னை புத்தக கண்காட்சி அரங்குக்குச் சென்ற போலீசார், மொத்த புத்தகங்களையும் பறிமுதல் செய்து விட்டனர். இந்த நடவடிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஒரு நூலைத் தடை செய்ய வேண்டும் என்றால் அது பற்றி பாதிக்கப்பட்டவர் உரிய முறையில் புகார் அளிக்க வேண்டும். உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட எழுத்தாளர்/ வெளியீட்டாளர் தரப்பினருக்கு விளக்கமளிக்க உரிய வாய்ப்பும் தரப்பட வேண்டும்.ஆனால், 'ஈவெரா பித்தலாட்டம்' நூல் பறிமுதல் விவகாரத்தில் அப்படி எதுவுமே நடக்கவில்லை. நேரடியாக தடாலடி நடவடிக்கையாக போலீசார், புத்தகங்களை பறிமுதல் செய்து விட்டனர். அரசுக்கு வேண்டிய யாரோ ஒருவர் கொடுத்த அழுத்தம் காரணமாக, கருத்து சுதந்திரம் பற்றி எதுவும் கவலைப்படாமல் நேரடியாக புத்தக கண்காட்சியில் புகுந்து தூக்கிச் சென்று விட்டனர் என்கின்றனர் பாதிக்கப்பட்ட தரப்பினர்.

***இதுதான் எல்லாருக்குமான அரசா? இதுவே கருத்து சுதந்திரமா?***

தமிழக முதல்வர், அமைச்சர்கள், திமுக கூட்டணிக்கட்சிகளின் தலைவர்கள், அவ்வப்போது கருத்து சுதந்திரத்துக்காக குரல் கொடுப்பது வழக்கம். கருத்து சுதந்திரத்தை வலியுறுத்தி, முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட பல அறிக்கைகள், அவரது சமூக வலைதள பக்கங்களில் குவிந்து கிடக்கின்றன. ஆனால், இப்போது அவற்றுக்கு மாறாக, தங்களுக்குத் தோதுபடாத கருத்து என்பதற்காக இந்த நூலை அதிகாரத்தைப் பயன்படுத்திப் பறிமுதல் செய்துள்ளனர். அதுவும் 60 ஆண்டுக்கு முன் வெளியாகி பல பதிப்பு கண்ட நூலின் மறுபதிப்பை பறிமுதல் செய்திருப்பது நகைப்பை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமின்றி சொல்வது ஒன்று, செய்வது இன்னொன்று என்ற திமுகவின் நிலைப்பாட்டையும் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

இந்நிலையில் திருமுருகன் காந்தி என்பவர் திசை புத்தக நிலையம் என்ற கம்பெனியின் சார்பில் தினமலம் என்ற புத்தகத்தை தினமலர் நிறுவனத்தின் அரசியல் சமூக நிலைப்பாடுகளை விமர்சித்து வெளியிட்டார். திருமுருகன் காந்தி என்றால் புரியாதவர்களுக்கு மே17 மாரடிப்பு ஒப்பாரி இயக்கம் என்றால் புரியும். இவர்கள் ஏன் தினமலரைக் கொள்கை ரீதியாக எதிர்க்காமல் இப்படிக் கேவலப்படுத்தி எதிர்ப்பைக் காட்டுகிறார்கள்? அது இவர்களது இயக்கங்களின் தாய்க்கழகமான திகவின் தோற்றுவிப்பாளர் இவர்கள் தந்தை என்றழைக்கும் ஈவெரா கற்றுத்தந்தது. தனக்குப் பிடிக்கவில்லை என்றால் கேவலமாகப் பேசுவார் உதாரணத்துக்கு தமிழ் காட்டுமிராண்டி பாஷை, திருக்குறள் தங்கத்தட்டில் வைத்த மலம். அந்த வகையில் இந்த திருமுருங்கன் காந்தி அந்த வகையறாவே. தந்தை என்றழைக்கும் ஈவெராவைப் பின்பற்றி தினமலரைக் கேவலமாக ஏசுகிறார். ஆனால் இந்த புத்தகத்தின் மீது இதுவரை நடவடிக்கை இல்லை. இந்த இரட்டை நிலையிலேயே நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களைக் கேவலமாக விமர்சித்து ஒரு புத்தகம் எழுதினர். வெளியிட்டால் வகுந்துவிடுவேன் என்று ஐகோர்ட் சொல்லிவிட்டது. முறையிட்டுப் போனஇடத்தில் தொலைச்சுப்புடுவேன் என்று சுப்ரீம் கோர்ட் சொல்லிவிட்டது. அதனால் பேசாதிருக்கிறார்கள். இந்த மனநிலைக்கு நிச்சயமாகச் சிகிச்சை தேவைப்படும் ஒரு விஷயம்.

அரசின் இரட்டை நிலை மாறவேண்டும். அதற்கு வேறு வழி இல்லை. அரசு மாறவேண்டும் என்ற நிலைக்குத் தமிழகம் சென்றுவிட்டது. பார்க்கலாம், காலத்தின் கைவண்ணத்தை. வந்தே மாதரம்.

# பாரதத்தைத் துண்டாட ஒத்திகை மம்தா ஆசியுடன் நடந்த கலவரம்

ஆனந்தம்



மேற்கு வங்காளத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள பெல்டாங்கா நகரம், ஜனவரி 16, 17 தேதிகளில் வன்முறைக்களமானது. ரயில் பாதைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை-12 ஐ மறித்த போராட்டக்காரர்கள், வாகனங்கள் மற்றும் இரயில்வே சொத்துக்களையும் சேதப்படுத்தினர். பெல்டாங்கா மாவட்டத்தின் அலாவுதீன் ஷேக் ஜார்கண்டில் நடைபாதை வியாபாரியாக பிழைப்பு நடத்தி வந்தார். வாடகை வீட்டின் பூட்டிய அறையில் தூக்கில் தொங்கிய இவரை அடித்துக் கொலை செய்து, அதை தற்கொலையாக மாற்றினர் என்று சொல்லி பெல்டாங்காவின் கலவரம் நடந்தது . அலாவுதீன் ஷேக், வங்காளதேசத்தைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கொலை செய்யப்பட்டதாக பிரச்சாரம் செய்யப்பட்டது.

“பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் பெங்காலி பேசும் புலம்பெயர் தொழிலாளர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். மேற்கு வங்கத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் எந்தத் தொந்தரவுமின்றி அமைதியாக வாழ்கிறார்கள். பிற மாநிலங்களில் பெங்காலி பேசும் தொழிலாளர்கள் ஏன் குறிவைக்கப்படுகிறார்கள்? அவர்கள் அசாம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், டெல்லி அல்லது பீகாரில் தாக்கப்படுகிறார்கள்,” என்று கலவரத்திற்கு ஊக்கம் அளித்தார் மம்தா பேனர்ஜி. இந்த மாநிலங்கள் பட்டியலில், ஜார்கண்டும் இல்லை, தமிழகமும் இல்லை ? அலாவுதீன் ஷேக் பிணமாகக் கண்டெடுக்கப்பட்ட மாநிலம் எதிர்கட்சிக் கூட்டணி ஆளும் ஜார்கண்ட் மாநிலம்! இதே ஜனவரியில் தானே கோவையில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சூரஜ் என்ற முஸ்லீம் படுகொலை செய்யப்பட்டான்!. மம்தாவின் இந்தப் புகார் அனுதாபத்திற்கானதில்லை, அரசியலும், பிரிவினையும், மதவெறியும் தூண்டும் சதி!.

ஜனவரி16 அன்று, வன்முறைநடக்கும் இடத்திற்கு செய்தி சேகரிக்கச் சென்ற பல பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர். இதற்கு எதிர்வினையாக முதல்வர் மம்தா பானர்ஜி, “பத்திரிகையாளர்களை தாக்குவதை நான் ஆதரிக்கவில்லை. ஆனால் அவர்கள் கூட்டத்தின் நடுவே செல்லாமல் தவிர்க்க வேண்டும். இது என் கையிலில்லை,” என்று கூறினார். அப்படியென்றால், மாநிலக் காவல்துறை கடும் நடவடிக்கை எடுக்காது என்பதை தெளிவாக்கியுள்ளார். இந்தச் சம்பவங்களை வெளிக்கொண்டுவந்தால் கடும் விளைவுகளை சந்திக்க வேண்டும் என்று எச்சரிப்பதாகவே மம்தாவின் பேச்சு அமைந்துள்ளது. ஒரு சில பத்திரிகைகளைத் தவிர, பிரபல்ல ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முர்ஷிதாபாத் மாவட்டத்தின் பெல்டாங்கா வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலை-12, வடக்கு மற்றும் தெற்கு வங்காளத்தையும், நாட்டின் வடகிழக்கு பகுதிகளையும் இணைக்கும் முக்கிய உயிர்நாடியாக உள்ளது. இதை சிலுகுரி வழித்தடம் (silluguri corridor) என்கிறோம். இந்தப் பகுதி வங்கதேசம், நேபாளம், பூடான் ஆகிய நடுகளுக்கு இடையே பாரதத்தின் வட கிழக்குப் பகுதியை, பாரதப் பெரும்பரப்புடன் இணைக்கும் 20-60 கி.மீ அகலமே கொண்ட நிலப் பகுதி. இதை பாதுகாப்பு வல்லுனர்கள் சிக்கன் நெக் (chicken neck) என்று அழைக்கின்றனர். இந்தப் பாதையை முடக்கினால், நம் நாட்டின் வட கிழக்கு மாநிலங்கள் முற்றிலுமாகத் துண்டிக்கப்படும். இந்தப் பகுதியையும், வடகிழக்கு மாநிலங்களையும் சுட்டி, ஒரு வரைபடத்தை வங்கதேசத்தின் தற்காலிக அதிபர் முகமது யூனிஸ் சீனாக்காரர்களிடம் கொடுத்தது சர்சையை ஏற்படுத்தியது.

தில்லி கலவர வழக்கில் கைது செய்யப்பட்ட சர்ஜில் இமாம், இந்தச் சிக்கன் நெக் பகுதியைத் தடுத்து, வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவிலிருந்து பிரிக்க அழைப்பு விடுத்தான். அவன் கூட்டாளி உமர்கலீதை சிறையிலிருந்து விடுதலை செய்ய, அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயர் மம்தானி முதல் கோரிக்கை வைக்கின்றனர். இந்தப் பின்னணியில் பார்த்தால், இந்தக் கலவரம், இந்தியாவைப் பிரிப்பதற்கான ஒத்திகையோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த ஆபத்தை உணர்ந்து மத்திய அரசு செயல்படுமா?

# மஹாராஷ்ட்ரா உள்ளாட்சி தேர்தல் உணர்த்தும் பாடம்

ராயன்

சமீபத்தில் மஹாராஷ்ட்ராவில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் பாஜகவின் மாஹாயுதி கூட்டணி வெற்றி பெற்றது. மும்பை மாநகராட்சியை பல தசாப்தங்களுக்குப் பின் தாக்ரேக்கள் கையிலிருந்து தட்டித் தூக்கியது பாஜக.ஷிண்டே தலைமையிலான சிவசேனா தான் பலம் வாய்ந்தது என்பதும் இந்த தேர்தல் முடிவு காட்டிவிட்டது. தாக்ரே சகோதரர்கள் உத்தவ், நவநிர்மான் சேனை ராஜ் தாக்ரே ஒன்றாக களம் கண்டும் வெற்றி பெற முடியவில்லை என்பதும் வெட்ட வெளிச்சமானது. காங்கிரஸ், சரத் பவார் தலைமையிலான NCP யும் தோல்வியடைந்தன. சில இடங்களில் கள்ள கூட்டணி வைத்த அஜித்பவாரின் NCPயும் தங்களது சொந்த வலிமையான புனே உள்ளிட்ட இடங்களில் பெரியளவில் வெற்றி பெற முடியவில்லை என்பதும் தேர்தல் முடிவில் கிடைத்த செய்தி. வளர்ச்சித் திட்டங்கள், ஃபட்னவிஸ், மோடி மீதான நம்பிக்கை ஆகியவை பாஜக வெற்றிக்கு உதவின.

**அபாய சங்கு :**

பாஜக பல இடங்களில் வெற்றி பெற்றாலும் சில இடங்களில் கிடைத்திருக்கும் தேர்தல் முடிவுகள் முஸ்லீம்கள், ஹிந்துக்களின் ஓட்டளிக்கும் முறை எந்தளவிற்கு மாறியுள்ளது என்பதும் இதே நிலை மற்ற மாநிலங்களிலும் நடக்கும் போது எப்படிப்பட்ட சிக்கல்கள் வரும் என்பதை தேசிய கட்சிகளான காங்கிரஸும், பாஜகவும் ஊகித்து செயல்படுமா? என்பதே அவர்கள் முன் உள்ள கேள்வி. இதில் இரண்டு கட்சியின் செயல்பாடுகளை உற்று நோக்க வேண்டியுள்ளது.

**AIMIM** : ஒவேஸியின் மஜ்லிஸ் கட்சி என்பது ஹைதராபாத்திலிருந்து வந்திறங்கிய கட்சி, காங்கிரஸிடமிருந்து முஸ்லீம் ஓட்டுகளை பிரிக்கும் என நினைத்தது பாஜக. ஆரம்பத்தில் அப்போதைய அவுரங்கபாத் தற்போதைய சம்பாஜி நகரில் மட்டும் கால்பதித்த AIMIM இம்முறை மாநிலம் முழுவதும் பரவலாக கவுன்சிலர்களை பெற்றுள்ளது. குறிப்பாக மும்பை மாநகராட்சியில் 8 இடங்களில் வெற்றி பெற்று,விரைவில் மும்பையை பச்சையாக மாற்றுவோம் என சவால் விடுக்கும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

**ISLAM: Indian Secular Largest Assembly of Maharashtra** என்ற கட்சி தனது மிகப்பெரிய வெற்றியை பதிவு செய்துள்ளது. காங்கிரஸின் முன்னாள் எம் எல் ஏ ஹாசிஃப் ஷேக் 2024ல் தொடங்கிய கட்சி தான் ISLAM. முஸ்லீம் ஜனத்தொகை மற்றும் நெசவாளர்கள் அதிகமுள்ள பகுதியான மாலேகானில் இக்கட்சி முத்திரை பதித்துள்ளது.

**மாலேகான்:**

மாலேகான் நகராட்சியின் 84 இடங்களுக்கு நடந்த தேர்தலில் ISLAM கட்சி 35 இடங்களைப் பெற்று முதலிடத்திற்கு வந்துள்ளது. AIMIM கட்சி 21 இடங்களைப் பெற்று இரண்டாவது இடத்திலும், இத்தனை ஆண்டு காலம் நகராட்சியை தன்வசம் வைத்திருந்த காங்கிரஸ் 3, பாஜக 2 ஷிண்டே சிவசேனா 18 இடங்களுடன் மூன்றாவது இடம். இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவெனில் காங்கிரஸில் இருந்த முஸ்லீம் எம் எல் ஏ விலகி வேறு கட்சி தொடங்கியதும் அந்த சமூகம் மொத்தமாக எப்படி ஓட்டளிக்கிறது என்பதை கவனிக்க வேண்டும்.

**முஸ்லீம்கள் ஓட்டளிக்கும் ஸ்டைல்:**

ஆரம்பத்தில் வெவ்வெறு கட்சிகளில் இருக்கும் முஸ்லீம் பிரதிநிதிகள் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் மதம் சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலில் முஸ்லீம்களை ஓட்டளிக்க வைப்பதும், ஒரு கட்டத்தில் தனியாகவே நின்றால் வெற்றி பெறும் சூழல் வந்த பின்பு, வெளியே வந்து அக்மார்க் முஸ்லீம் கட்சியாக செயல்படுவது தொடர்ந்து நடைபெறுவதை கண்டாலும் அதை தேசிய கட்சிகள் உணர மறுக்கின்றன. 2026ல் சட்டமன்ற தேர்தல் நடக்கவுள்ள மே.வங்கம், அஸ்ஸாமிலும் முஸ்லீம்கள் இந்த முறையில் தான் ஓட்டளிக்க வைப்புள்ளது என அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். அஸ்ஸாமில் பதுருதீன் அஜ்மல் தலையில் இயங்கும் All India United Democratic Front வரும் தேர்தலில் AIMIM உடன் கூட்டு வைக்க வாய்ப்பு அதிகம் என்கின்றனர். அதேபோல முர்ஷிதாபாத்தில் பாபர் மசூதி கட்ட முயலும் ஹுமாயூன் கபிர் முஸ்லீம் ஓட்டுகளைத் திரட்ட திட்டம் வைத்திருப்பதையும் கவனிக்க வேண்டியுள்ளது.

**பாடம் படிங்க சார்:**

ஹிந்துக்களுக்கு எதிராக மைனாரிட்டிகளுக்கு ஆதரவாக நின்றால் ஓட்டை அள்ளலாம் என நினைக்கும் காங்கிரஸும், முஸ்லீம் ஓட்டுகளை பிரிக்க AIMIM போன்ற கட்சிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் வளர்ந்தால் அது நமக்கு சாதகமாகும் என பாஜகவும் நினைத்தால் இருவரும் ஏமாந்து தான் நிற்பார்கள். அரசியல் கட்சிகள் வரலாற்றிலிருந்து எப்போது பாடம் படிப்பார்கள்?

# தென்காசியில் முஸ்லிம் மதமாற்றம் பயங்கரவாதத்திற்கு ஆள் சேர்ப்பா ?

வெள்ளையன்




தென்காசி மாவட்டம், கடையநல்லூர் அருகே கொடிக்குறிச்சி எனும் ஊரில் ஹிந்துக்களை முஸ்லீம்களாக மதமாற்றும் முயற்சியில் ஈடுபட்டார் கடையநல்லூரைச் சார்ந்த முகமது இத்ரிஸ். மதமாற்ற முயன்ற முகமது இத்ரிஸை உள்ளூர் ஹிந்துக்கள் கண்டித்தனர். காவல்துறையினருக்கு தகவல் கொடுப்போம் என்று ஹிந்துக்கள் சொன்னவுடன், அவர்கள் வரட்டும் என்று திமிராகப் பேசினான் முகமது இத்ரிஸ். ஹிந்துக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவிக்க, வேறு வழியில்லாமல் ஓடினான் முகமது இத்ரிஸ். காவல்துறை என்றவுடன், வரட்டும் பார்க்கலாம் என்ற இத்ரிஸின் பேச்சு கவனிக்கத்தக்கது. முஸ்லீம்களுக்கு காவல்துறை ஒரு பொருட்டல்ல என்பதை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளனர் முஸ்லீம்கள். இது ஒரு புறம் இருக்க, யார் இந்த முகமது இத்ரிஸ் என்பதை கவனிக்க வேண்டும்.

**வேற்று மதத்தினரை மதம் மாற்றி, அவர்களை மூளைச் சலவை செய்து, பயங்கரவாத செயல்களில் ஈடுபடுத்தும் செயலை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் உலகம் முழுவதும் செய்து வருகின்றனர்.**

கடையநல்லூரிலிருந்து புளியங்குடி செல்லும் வழியில் அமைந்துள்ள சொக்கம்பட்டி என்ற ஊரில் மதமாற்ற முயற்சியில் ஈடுபட்டான். அங்கும் இவனை மக்கள் துரத்தினர். மதமாற்ற முயற்சியை இடைவிடாமல் செய்யும் இத்ரிஸ், ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிற்கு ஆள் சேர்த்த வழக்கில், என்.ஐ.ஏ வால் விசாரிக்கப்பட்டவன். இவனது மனைவியின் பிரசவத்தை, இவன் வீட்டில் பார்த்தான், காரணம், வெளியாட்கள் தன் மனைவியைப் பார்த்தால் அது இஸ்லாமிற்கு விரோதம் என்ற அடிப்படைவாத சித்தாந்தம் கொண்டவன் என்கிறார்கள் விவரமறிந்தவர்கள். இவன் தடை செய்யப்பட்ட பாப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியாவுடன் தொடர்பில் இருந்தவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேற்று மதத்தினரை மதம் மாற்றி, அவர்களை மூளைச் சலவை செய்து, பயங்கரவாத செயல்களில் ஈடுபடுத்தும் செயலை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் உலகம் முழுவதும் செய்து வருகின்றனர். போலோ சங்கர் என்பவரை அத்திகூர் ரஹ்மானாக மாற்றி, அவனை குண்டு வைக்கப் பழக்கிய 1996 ஆம் ஆண்டு நிகழ்வு முதல், இன்று சட்டத்தின் பிடியில் சிக்கும் பயங்கரவாதிகள் பலரும் சமீபத்தில் மதம் மாற்றப்பட்டவர்கள் என்பதை வைத்துப் பார்த்தால், இந்த மதமாற்ற முயற்சி, பயங்கரவாத ஆள் சேர்ப்புக்காக நடத்தப்படுகிறதா என்ற கண்ணோட்டத்தில் விசாரிக்கப்பட வேண்டும். இந்த மதமாற்ற சம்பவம் நடந்து ஒருவார காலம் ஆகியும், இவன் மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது, இந்த சதிப்பின்னணியைப் பற்றிய புரிதலோ, இதன் அபாயத்தையோ உணராமல் இருப்பதாகத் தெரிகிறது. இல்லையேல், பயங்கரவாதச் செயல்களை ஆதரிக்கிறதோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

சமீபத்தில், இந்தியாவை வெற்றி கொள்ள வேண்டும், இதை இஸ்லாமிய நாடாக்க வேண்டும் என்று ஹதீஸை மேற்கோள்காட்டி பெரியகுளம் மதரஸா தலைவர் உஸ்தாத் பீர் முகமது பேசினார். இதே கருத்தை சல்மான் அஸாரி என்ற இஸ்லாமிய பிரச்ச ாரகர் தொடர்ந்து பேசி வருகிறார். அவர் மீது நடவடிக்கையில்லை. இதுபோன்ற நிகழ்வுகள் அதிகரித்து வருவது தமிழகத்தில் பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆள் சேர்க்கும் முயற்சி நடைபெறுகிறதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. கண்டிப்பாக தமிழக அரசு நடவடிக்கை எடுக்காது. இந்தப் போக்கு நாட்டின் நிலைநிற்பிற்கே அச்சுறுத்தலாகும். இதைக் கருத்தில் கொண்டு, இதை ஒரு மதமாற்ற வழக்கு என்று சுருக்கிக் கடந்து செல்லாமல், இதன் பின்னணியையும், தீர விசாரிக்க, இந்த வழக்கு தேசிய புலனாய்வு அமைப்பிற்கு மாற்றப்பட வேண்டும்.

# செய்
# சிந்த

**செய்தி:**

**திருப்பரங்குன்றம் தீபத் தூண் குறித்து சாலமன் பாப்பையா விமர்சனம் - முருக பக்தர்கள் கண்டனம்**

**சிந்தனை**

மேடைக்காக மாண்பை விட்டுக்கொடுத்து உள்ளார். எவ்வளவு கற்றாலும் ஞானத்தை மதவெறி மறைக்கும் என்பதை நிரூபித்துள்ளார். தொடர்பே இல்லாமல் திருப்பரங்குன்றம் விவகாரத்தைப் பற்றி பேசுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது

**செய்தி:**

**வழிபாட்டுத்தலங்களுக்கு NOC தேவையில்லை என்ற அரசாணைக்கு தடை - மதுரை உயர்நீதிமன்றம் அதிரடி**

**சிந்தனை**

வரவேற்கப்பட வேண்டிய தீர்ப்பு! கட்டட ஒழுங்குமுறை விதிகள் சட்டத்தை மீறி ஓட்டுக்காக போடப்பட்ட உத்தரவு. சட்டவிரோத சர்ச்சுகளும், மசூதிகளும் பெருகி மதமாற்றத்தையும் மதக் கலவரங்களையும் ஏற்படுத்தும் முயற்சி! ஹிந்து இன அழிப்பிற்கான யுக்தி!

**செய்தி:**

**கருங்கல்பாளையம் அம்மன் கோயில் மகா மண்டபத்தின் தாமரை வடிவ அலங்காரம் அகற்றப்பட்டால் தான் கும்பாபிஷேகத்திற்கு அனுமதி - EO மிரட்டல்**

**சிந்தனை**

காழ்புணர்ச்சியின் உச்சகட்டம். அறநிலையத்துறையின் அராஜகம். பாஜகவின் சின்னமாக தாமரை இருப்பதால் மகாலட்சுமி, சரஸ்வதி, சூரிய பெருமான் போன்ற தாமரைத் தொடர்பான மூர்த்தங்களை இடித்து விடுவார்களா? பூஜையிலிருந்து தாமரை விலக்கப்படுமா? ஹிந்து எதிர்ப்பின் உச்சம்!

**செய்தி:**

**குடியரசு தினத்தில் போலீசாருக**
**காவல்துறையினரை அசிங்கப்**

**சிந்தனை**

முதல்வரின் உல்லாச வெளிநா
சிலை, நினைவு மண்டபம், க
சம்பளம், கள்ளசாராயம் செ
நிவாரண நிதி ஆனால் நாட
பணமில்லை. போலீசாரின்
அவர்கள் குடும்ப உறுப்பினர்க

**செய்தி:**

**தமிழ்நாடு அரசின்**
**விருதில் உருது மொ**
**எம்.எச். ஜவாஹிரு**

**சிந்தனை**

ஹிந்தி அந்நிய
மொழி! ஆனால் உ
திணிப்பினால்
வங்கதேசம். இஸ்
ஒழிகிறது வங்காள
உள்ளே வந்து
அழிக்கும் முயற்சி

# ...திகள்
# ...னைகள்

**செய்தி:**

**உதயநிதி தாமதத்தால் பாலமேடு ஜல்லிக்கட்டு பரிசுகள் வைத்திருந்த லாரி சூறை**

**சிந்தனை**

ஜல்லிகட்டை அழிக்க திமுக எடுத்துவரும் தொடர் முயற்சியில் ஒன்று ஆன்மிக விழாவை அரசியல் விழாவாக மாற்றியது. விழாவில் கலந்துக் கொள்ள வந்தவர்களை பங்குபெறாமல் திருப்பி அனுப்புவது அவர்களின் ஊக்கத்தைக் கெடுக்கும்.

**...க்கு இரவல் பதக்கம் -**
**...ப்படுத்தும் திமுக அரசு**

...ட்டு பயணங்களுக்கும், கருணாநிதி
...கிறிஸ்தவ முஸ்லீம் மதபோதகர்கள்
...காடுத்தவனுக்கும், விற்றவனுக்கும்
...ட்டைக் காக்கும் காவல்துறைக்குப்
...மனநிலையை பாதிக்கும் செயல்.
...ளை துக்கப்படுத்தும் செயல்

**செய்தி:**

**CSI நிர்வாகத்தில் நடக்கும் ஊழலை அம்பலப்படுத்திய சமூக ஆர்வலர் தேவசகாயம்**

**சிந்தனை**

ஆங்கிலேயர் கொடுத்த சொத்துக்களை சூறையாடுகின்றனர். கணக்கு கொடுப்பதில்லை என்று பல குற்றசாட்டுகள். திருநெல்வேலி CSI பேராயாத்தில் தேர்தலின் போது பல வெட்டு குத்துக்கள். பல காரணங்களைக் காட்டி ஹிந்து கோவில்களைப் பிடுங்கும் அரசு, கிறிஸ்தவ நிறுவனங்களை கை வைக்குமா? அதுவும் பொது பணத்தில் தானே இயங்குகிறது.

**...செம்மொழி இலக்கிய**
**...ழியை சேர்க்கவேண்டும் -**
**...ல்லா**

...மொழி! சமஸ்கிருதம் அந்நிய
...டுது இந்திய மொழியா? உருது
...பாகிஸ்தானிலிருந்து பிரிந்தது
...லாமிய அடிப்படைவாதத்தால்
... மொழி. மொழி என்ற பெயரில்
... தமிழையும், பண்பாட்டையும்
...!

**செய்தி:**

**ஒரே பகுதியில் 20 குவாரிகளா? இருக்கந்துறை ஊர்மக்கள் அதிர்ச்சி**

**சிந்தனை**

சபாநாயகர் அப்பாவு பகுதியில் நடக்கும் இந்த கனிமக் கொள்ளையை கண்டுகொள்ளாமல் இருக்கும் சூழியலாளர்கள். இதே தொகுதியில் உள்ள கூடங்குளத்திற்காக குரல் கொடுத்தவர்கள் காணாமல் போய்விட்டார்கள்! நிலத்தடி நீர்மட்டம், விவசாயம் என்று அனைத்தையும் ஒழித்து தமிழகத்தை பாலைவனமாக மாற்றும் திமுக அரசு!

# உலகை அதிர வைத்த இந்தியா - ஐரோப்பிய யூனியன் ஒப்பந்தம்

பிபிந்த்ரா



இந்தியாவின் குடியரசு தினக் கொண்டாங்களின் பின்னணியில் , அனைவரையும் கவரும் விதமான ஒரு இராஜதந்திர நிகழ்வும் நடந்தேறியுள்ளது. ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அந்தோனியோ கோஸ்டா மற்றும் ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் இந்தியாவுக்கு குடியரசு தின விழாவில் கலந்துக் கொள்ள இந்தியா வந்தனர். இந்தப் பயணத்தின் முக்கிய நிகழ்வாக, ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தடையற்ற வணிக ஒப்பந்தம் (FTA) கையெழுத்தானது.

“அனைத்து வர்த்தக ஒப்பந்தங்களின் தாய்” என்று வர்ணிக்கப்படும் இந்த ஒப்பந்தம், கடந்த இரண்டு தசாப்தங்களாக அவ்வப்போது நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளின் வெற்றியாகக் கருதப்படுகிறது. இது 21-ஆம் நூற்றாண்டின் புவிசார் அரசியல் மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் தருணமாகப் போற்றப்படுகிறது.

**பெரும் எதிர்பார்ப்புகளுடன் கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சிமாநாடு**

> **அனைத்து வர்த்தக ஒப்பந்தங்களின் தாய் என்று வர்ணிக்கப்படும் இந்த ஒப்பந்தம், கடந்த இரண்டு தசாப்தங்களாக அவ்வப்போது நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகளின் வெற்றியாகக் கருதப்படுகிறது.**

ஜனவரி 26, 2026 அன்று இந்தியாவின் 77-வது குடியரசு தின விழாவில், ஐரோப்பிய ஒன்றியத்தின் இரு தலைவர்களும் முதன்மை விருந்தினர்களாகப் பங்கேற்றனர். இது ஐரோப்பிய ஒன்றியம் - இந்தியா இடையிலான உறவின் ஆழத்தையும், இரு தரப்பினரும் கொண்டுள்ள பொதுவான ஜனநாயக விழுமியங்களையும் வெளிப்படுத்தும் ஒரு அடையாளப்பூர்வமான நடவடிக்கை.

அவர்களின் வருகை வெறும் சம்பிரதாயமான ஒன்றல்ல; குறிப்பாக அமெரிக்கா மற்றும் சீனாவுடனான உறவுகளில் கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வரும் நிலையில், ஆழமான பொருளாதார ஒருங்கிணைப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய தலைமைத்துவத்தை நோக்கிய ஒரு மூலோபாய நகர்வாக இது அமைந்தது.

ஜனவரி 27, 2026 அன்று புது தில்லியில் நடந்த 16-வது இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாடு, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஊகூஅ ஒப்பந்தத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்து கையெழுத்திடும் களமாக மாறியது. 2007-லிருந்து

பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, பாதியில் நின்று, மீண்டும் புத்துயிர் பெற்று வந்த இந்த முயற்சிக்கு இப்போது ஒரு மிகப்பெரிய தீர்வு கிடைத்துள்ளது.

**இந்த ஒப்பந்தம் எதை சாதிக்கும்?**

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான நோக்கம், ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளுக்கும், 140கோடி ஜனத்தொகை கொண்ட இந்தியாவின் வலுவான பொருளாதாரத்திற்கும் இடையிலான வர்த்தகத்தை பெருமளவில் தாராளமயவாக்குவதே. இந்த இருநாடுகளும் இணைந்து உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 25%ஐக் கொண்டுள்ளதுடன், 2 பில்லியன் மக்களைக் கொண்ட ஒரு மாபெரும் சந்தையாகவும் விளங்குகின்றன.

**முக்கிய அம்சங்கள்:**

● பெரும்பாலான பொருட்களுக்கு வரித் தள்ளுபடி: ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வரும் பொருட்களில் ஏறக்குறைய 97% பொருட்களுக்கான வரிகளை இந்த ஒப்பந்தம் குறைக்கும் அல்லது ரத்து செய்யும். அதேபோல், இந்திய ஏற்றுமதிப் பொருட்களுக்கும் ஐரோப்பியச் சந்தைகளில் முன்னுரிமை அடிப்படையில் இதே போன்ற சலுகைகள் வழங்கப்படும்

● வாகனத் துறை தாராளமயமாக்கல்: ஐரோப்பிய கார்கள் மீது இந்தியா விதித்து வந்த 110% என்ற மிக அதிகமான வரி, இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக படிப்படியாக 10% முதல் 40% வரை குறைக்கப்படும்.

● சேவைகள் மற்றும் பணியாளர்கள் இடப்பெயர்வு: மாணவர்கள் மற்றும் நிபுணர்களுக்கு எளிதான விசா நடைமுறைகள், Horizon Europe போன்ற ஆராய்ச்சி திட்டங்களில் ஒத்துழைப்பு மற்றும் தொழிலாளர் இடப்பெயர்வுக்கு இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.

● தாராளமயமாக்கலில் இருந்து பாதுகாக்கப்பட்ட துறைகள்: இந்தியாவில் அரசியல் ரீதியாக அதிக முக்கியத்துவம் வாய்ந்த துறை விவசாயத் துறை. உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக, விவசாயம் சார்ந்த முக்கியமான துறைகள் இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாமல் அப்படியே வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஐரோப்பிய ஏற்றுமதியாளர்கள் ஆண்டுக்கு 4 பில்லியன் யூரோக்கள் வரை சேமிக்க முடியும் என்றும், 2032-க்குள் இருதரப்பு வர்த்தகம் இரட்டிப்பாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது ஐரோப்பிய யூனியன்.

**பொருளாதாரத்தைத் தாண்டி இதற்கு ஏன் முக்கியத்துவம்?**

வர்த்தகத்தின் புவிசார் அரசியல்: அமெரிக்காவின் வரி விதிப்புக் கொள்கைகளால் உலகளாவிய வர்த்தக உறவுகளில் ஒருவித தேக்கநிலை நிலவி வரும் சூழலில், இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

**இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான நோக்கம், ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளுக்கும், 140கோடி ஜனத்தொகை கொண்ட இந்தியாவின் வலுவான பொருளாதாரத்திற்கும் இடையிலான வர்த்தகத்தை பெருமளவில் தாராளமயமாக்குவதே.**

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நாட்டின் சந்தையை மட்டும் அளவுக்கு அதிகமாகச் சார்ந்திருக்காமல், தங்கள் நாடுகளின் பொருளாதாரத்தில் பங்கு பெறுபவர்களை பன்முகப்படுத்துவதன் அவசியத்தை ஐரோப்பிய யூனியனும், இந்தியாவும் உணர்த்தியுள்ளன.

பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு: இந்த உச்சிமாநாடு வர்த்தகத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. பாதுகாப்பு, தற்காப்பு, தொழில்நுட்பம் மற்றும் தூய்மையான எரிசக்தி ஒத்துழைப்பு குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் விவாதித்தனர். இது வர்த்தகத்தையும் தாண்டி, இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான மூலோபாயக் கூட்டாண்மை மற்றும் பல பரிமாணங்களைக் கொண்டு வளர்ந்து வருவதை உறுதிப்படுத்தியது.

**நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறை**

தலைப்புச்செய்திகளில் இது பெரும் வெற்றியாகக் கொண்டாடப்பட்டாலும், நடைமுறைக்கு வர இன்னும் சில காலம் ஆகும். இது நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, ஐரோப்பிய நாடாளுமன்றம் மற்றும் அதன் உறுப்பு நாடுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும்; அதேபோல், இந்தியாவின் அமைச்சரவை மற்றும் சட்டமன்ற நடைமுறைகளின் ஒப்புதலையும் பெற வேண்டும். இந்த ஒட்டுமொத்த செயல்முறையும் முடிவடைய சில மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சுருக்கமாகச் சொல்லப் போனால்,**

ஜனவரி 26-27, 2026 ஆகிய தேதிகளில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் இந்தியாவிற்கு மேற்கொண்ட பயணம், வெறும் சம்பிரதாயமான, இராஜதந்திர சந்திப்பையும் தாண்டியது. இது உலகின் பழமையான வர்த்தகக் கூட்டமைப்புகளில் ஒன்றான ஐரோப்பிய ஒன்றியமும், உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கியப் பொருளாதாரங்களில் ஒன்றான இந்தியாவும், தங்களுக்குள் ஆழமான ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்ள மேற்கொண்ட ஒரு மூலோபாய மறுசீரமைப்பைக் குறிக்கிறது.

உலகச் சந்தைகள், நுகர்வோர் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் என அனைத்துத் தரப்பினருமே, இந்த ஒப்பந்தத்தின் விளைவுகளை வரவிருக்கும் காலங்களில் உன்னிப்பாகக் கவனிப்பார்கள். கார்கள் மற்றும் ஒயின் இறக்குமதி முதல் தொழில்நுட்ப வல்லுநர்களின் இடப்பெயர்வு மற்றும் விநியோகச் சங்கிலி வரை, இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் இன்னும் பல ஆண்டுகளுக்கு எதிரொலிக்கும்.

# படம் சொல்லும் பாடம்

- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்






# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

**6. இழப்பு தடுப்பு**

பங்குச் சந்தை முதலீடு மற்றும் வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிப்பது இழப்பு தடுப்பு (STOP LOSS) என்று ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். பங்கு மூலமான நட்டம் அல்லது லாபத்துக்கான ஓர் அளவை நிர்ணயித்துக் கொள்ள முடியும். இது இழப்பு எனப்படுகிறது.

எப்படி என்பதை சற்று விரிவாக சான்று ஒன்றின் மூலம் பார்ப்போம்.

ஒரு பங்கை 100 ரூபாய் விலையில் வாங்குகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இதன் மூலமான இழப்பில் 5 விழுக்காட்டை உங்களால் தாங்கிக் கொள்ள முடியும். அதற்கு மேல் தாங்கிக் கொள்ள முடியாது என்றால் இழப்பு தடுப்பு 95 ரூபாயை நிர்ணயித்துக் கொள்ளலாம். அதே போல், இந்தப் பங்கு முதலீடு அல்லது வர்த்தகம் மூலம் 12 விழுக்காடு லாபம் கிடைத்தால் போதும் என்று முடிவு செய்திருந்தால் லாபத்துக்கான இழப்பு தடுப்பு ஆக 112 ரூபாயை வைத்துக் கொள்ளலாம்.

சிலர் நட்டத்துக்கு தான் இழப்பு தடுப்பு நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அது தவறு. நட்டம், லாபம் இரண்டுக்கும் இழப்பு தடுப்பு நிர்ணயித்துக் கொள்வது நல்லது.

இங்கே சான்றாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் பங்கின் விலை 112 ரூபாயைத் தாண்டும் போது விற்றுவிட்டால் நீங்கள் எதிர்பார்த்த 12 விழுக்காடு ஆதாயத்துடன் வெளியே வந்துவிடலாம். அதை தவறவிட்டிருந்தால், அந்தப் பங்கின் விலை 112 ரூபாய்க்கு உயர்ந்து, பிறகு இறங்க ஆரம்பித்துவிட்டால், மீண்டும் பழைய விலைக்கு எப்போது அதிகரிக்கும், லாபம் எப்போது கிடைக்கும் என்று சொல்ல முடியாது. எனவே, ‘இழப்பு தடுப்பு’ மிக அவசியம். போதும் என்கிற மனமே பொன் செய்யும் என்பது பங்குச் சந்தை முதலீடு மற்றும் வர்த்தகத்துக்கும் நூறு விழுக்காடு பொருந்தும்.

மேலும், இன்னொரு முக்கிய விஷயம் இருக்கிறது. இப்படி இழப்பு தடுப்பை நிர்ணயித்து விற்கும் போது கைவசம் இருக்கும் அனைத்துப் பங்குகளையும் ஒரே நேரத்தில் விற்று விடக் கூடாது. 100 பங்குகள் வாங்கியிருந்தால் அதில் 25 அல்லது 50 பங்குகளை முதலில் விற்க வேண்டும். பகுதி பங்குகளை விற்றப் பிறகு இழப்பு தடுப்பு மாற்றப்பட வேண்டியது அவசியம். அப்போதுதான் கூடுதல் லாபம் கிடைக்கும். உதாரணத்துக்கு இங்கே 100 பங்கில் 50ஐ 112 ரூபாய்க்கு விற்றுவிட்டீர்கள் என்றால் அதன் பிறகு லாபத்துக்கான தடுப்பு ஆக சுமார் 125 ரூபாய், இழப்புக்கான தடுப்பு ஆக சுமார் -100 ரூபாய் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

அப்படி இழப்பு தடுப்பு நிலையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் பழைய லாபம்/நட்டம் தான் ஏற்படும். இதற்காக கூடுதல் காலம் காத்திருக்க அவசியம் இல்லை. அடுத்து ஒரு பங்கின் விலை ஏற்ற இறக்கத்தை அறிந்து அதற்கு ஏற்ப இழப்பு தடுப்பு நிலையை நிர்ணயிப்பது நல்லது. ஒரு குறிப்பிட்ட (உதாரணமாக வாரம்/மாதம்) காலத்தில் சர்வ சாதாரணமாக 20 விழுக்காடு ஏற்ற இறக்கத்தை சந்திக்கும் பங்கிற்கு 5 விழுக்காடு இழப்பு தடுப்பு போட்டீர்கள் என்றால் அது வேகமாக நிறைவேறி நட்டத்தை (அரிதாக லாபம்) சந்திக்கும் நிலை ஏற்படக் கூடும். அதனால் பங்கின் ஏற்ற இறக்கத்தை கவனித்து இழப்பு தடுப்பு நிர்ணயிப்பது அவசியமானது.

**தொழில்நுட்ப ஆய்வு ஏன்?**

பங்குச் சந்தை முதலீட்டில் அதிக ஆதாயம் அடையும் வழியாக இந்த தொழில்நுட்ப ஆய்வு இருக்கிறது. பங்குகளை குறைவான விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்று லாபம் பார்க்க உதவியாக இருப்பது டெக்னிக்கல் அனாலிசிஸ் (Technical Analysis) என்கிற தொழில்நுட்ப பகுப்பாய்வுதான்.

பங்குச் சந்தையில் புள்ளிகள் வேகமாக இறங்கிக் கொண்டிருக்கும். ஆனால், குறிப்பிட்ட ஒரு பங்கை இப்போது வாங்கினால், 15 நாட்களில் 50 விழுக்காடு வருமானம் கிடைக்கும் என தொழில்நுட்ப பகுப்பாய்வாளர் (டெக்னிக்கல் அனலிஸ்ட்) ஒருவர் சொல்லி இருப்பார். அதன்படி நடந்திருப்பதை பலர் அனுபவத்தில் கண்டு இருப்பார்கள்.

**தொழில்நுட்ப ஆய்வு ஏன் தேவை என்பதற்கான காரணங்களைப் பார்ப்போம்.**

**தொழில்நுட்ப ஆய்வு ஏன் தேவை**

ஒரு பங்கை எந்த விலையில் வாங்கினால் அதிக லாபம் கிடைக்கும்?

பங்கை எப்போது விற்றால் (Profit Booking) அதிக லாபம் கிடைக்கும்?.

பங்கு முதலீட்டில் அதிக இழப்பு இல்லாமல் நஷ்டத்தை குறைப்பது (Stop Loss) எப்படி?

அடிப்படை ஆய்வை (ஃபண்டமென்டல் அனாலிசிஸ்) மூலமாக கொண்டதுதான் தொழில்நுட்ப ஆய்வு. இது ஒரு அறிவியல் அணுகுமுறை. இதில், அடிப்படை ஆய்வு கொடுக்கும் தகவல் என்னவென்றால் பங்கின் விலை மட்டும்தான். அந்தப்

பங்கின் விலையை வைத்து அந்தப் பங்கின் எதிர்கால போக்கு எப்படி இருக்கும் என்பதை தொழில்நுட்ப ஆய்வு முறையில் சொல்ல முடியும். தொழில்நுட்ப முறைப்படி 80 விழுக்காடு முதல் 90 விழுக்காடு சரியாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. சில அசாதாரண நிகழ்வுகளால் இந்தக் கணக்கு மாறக் கூடும்.

தொழில்நுட்ப ஆய்வு என்பது, அடிப்படை ஆய்வின் அடிப்படையில் ஒரு பங்கை தேர்வு செய்து விட்டு பங்குச் சந்தையின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, அந்த புள்ளி விவரங்கள் மற்றும் பங்கின் விலை நிலவரத்தை வைத்து வரை படம் ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் பங்கின் விலை போக்கை அறிவதாக இருக்கிறது. பொதுவாக வாங்குபவர், விற்பவர் எண்ணிக்கையின் (Supply and Demand) அடிப்படையில் பங்கின் விலை போக்கைக் கணிக்கலாம்.

தொழில்நுட்ப ஆய்வு என்பது தனிப்பட்ட பங்குக்கு மட்டுமானது அல்ல. அதை பங்குச் சந்தை குறியீடுகளான சென்செக்ஸ், நிஃப்டி போன்றவற்றின் ஏற்ற இறக்கத்தை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளலாம். இதன் மூலம் அடுத்துவரும் நாள் / வாரம் / மாதம் / காலாண்டில் சந்தையின் குறியீட்டு புள்ளிகள் அல்லது குறிப்பிட்ட நிறுவனப் பங்கின் விலை எப்படிச் செல்லும் என்பதை கணிக்க முடியும். இந்த ஏற்ற இறக்கங்களைப் பொறுத்து, முதலீடு செய்வதா?, வேண்டாமா? என்பதை முடிவு செய்ய முடியும்.

குறிப்பிட்ட பங்கின் ஆரம்ப விலை, அதிகபட்ச விலை, குறைந்தபட்ச விலை, முடிவு விலைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு எடுத்துக் கொண்டு அதன் எதிர்கால விலையை கணிக்க முடியும். குறிப்பிட்ட காலம் என்பது நாள் வர்த்தகம் (நொடி, ஒரு நிமிடம், 5 நிமிடம், 15 நிமிடம், 30 நிமிடம், ஒரு மணி நேரம்), வாரம், மாதம், காலாண்டு, ஆண்டு என்பது போல் இருக்கும். இதன் மூலம் அதன் பங்கின் விலை போக்கு எப்படி இருக்கும்; எப்போது வாங்க வேண்டும் அல்லது எப்போது விற்க வேண்டும் என்பதை முடிவு செய்ய முடியும்.

**தொழில்நுட்ப ஆய்வு ஏன் தேவை?**

★ ஒரு பங்கை எந்த விலையில் வாங்கினால் அதிக லாபம் கிடைக்கும்?

★ பங்கை எப்போது விற்றால் (Profit Booking) அதிக லாபம் கிடைக்கும்?.

★ பங்கு முதலீட்டில் அதிக இழப்பு இல்லாமல் நஷ்டத்தை குறைப்பது (Stop Loss) எப்படி?

அடிப்படை ஆய்வை (ஃபண்டமென்டல் அனாலிசிஸ்) மூலமாக கொண்டதுதான் தொழில்நுட்ப ஆய்வு. இது ஒரு அறிவியல் அணுகுமுறை. இதில், அடிப்படை ஆய்வு கொடுக்கும் தகவல் என்னவென்றால் பங்கின் விலை மட்டும்தான். அந்தப்




பங்கின் விலையை வைத்து அந்தப் பங்கின் எதிர்கால போக்கு எப்படி இருக்கும் என்பதை தொழில்நுட்ப ஆய்வு முறையில் சொல்ல முடியும். தொழில்நுட்ப முறைப்படி 80 விழுக்காடு முதல் 90 விழுக்காடு சரியாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. சில அசாதாரண நிகழ்வுகளால் இந்தக் கணக்கு மாறக் கூடும்

தொழில்நுட்ப ஆய்வு என்பது, அடிப்படை ஆய்வின் அடிப்படையில் ஒரு பங்கை தேர்வு செய்து விட்டு பங்குச் சந்தையின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, அந்த புள்ளி விவரங்கள் மற்றும் பங்கின் விலை நிலவரத்தை வைத்து வரை படம் ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் பங்கின் விலை போக்கை அறிவதாக இருக்கிறது. பொதுவாக வாங்குபவர், விற்பவர் எண்ணிக்கையின் (Supply and Demand) அடிப்படையில் பங்கின் விலை போக்கைக் கணிக்கலாம்.

தொழில்நுட்ப ஆய்வு என்பது தனிப்பட்ட பங்குக்கு மட்டுமானது அல்ல. அதை பங்குச் சந்தை குறியீடுகளான சென்செக்ஸ், நிஃப்டி போன்றவற்றின் ஏற்ற இறக்கத்தை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளலாம். இதன் மூலம் அடுத்துவரும் நாள் / வாரம் / மாதம் / காலாண்டில் சந்தையின் குறியீட்டு புள்ளிகள் அல்லது குறிப்பிட்ட நிறுவனப் பங்கின் விலை எப்படிச் செல்லும் என்பதை கணிக்க முடியும். இந்த ஏற்ற இறக்கங்களைப் பொறுத்து, முதலீடு செய்வதா?, வேண்டாமா? என்பதை முடிவு செய்ய முடியும்.

குறிப்பிட்ட பங்கின் ஆரம்ப விலை, அதிகபட்ச விலை, குறைந்தபட்ச விலை, முடிவு விலைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு எடுத்துக் கொண்டு அதன் எதிர்கால விலையை கணிக்க முடியும். குறிப்பிட்ட காலம் என்பது நாள் வர்த்தகம் (நொடி, ஒரு நிமிடம், 5 நிமிடம், 15 நிமிடம், 30 நிமிடம், ஒரு மணி நேரம்), வாரம், மாதம், காலாண்டு, ஆண்டு என்பது போல் இருக்கும். இதன் மூலம் அதன் பங்கின் விலை போக்கு எப்படி இருக்கும்; எப்போது வாங்க வேண்டும் அல்லது எப்போது விற்க வேண்டும் என்பதை முடிவு செய்ய முடியும்.

# வெற்றியும் தோல்வியும்

- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

அனைவருக்கும் இனிய பொங்கல் மற்றும் குடியரசு தின நல்வாழ்த்துக்கள் இந்தக் கட்டுரையில் முழுவதுமாக இந்தியா மற்றும் இலங்கை இணைந்து நடத்தவிருக்கும் 2026க்கான டி20 உலக கோப்பை பற்றி விரிவாக விளக்க இருக்கிறோம்

**கணிப்பு:**

இந்தத் தொடர் 10வது, டி20 உலக கோப்பையாகும். 2007 இல் முதல்முறையாகத் தொடங்கப்பட்ட t20 உலக கோப்பையை இந்தியா வென்றதோடு, 2024 இல் நடந்த 9வது உலகக்கோப்பைத் தொடரை இந்தியா அதுவரை இல்லாத வகையில், ஒரு தோல்வியும் இன்றி வென்று சாதனை படைத்தது. அதேபோல் இதுவரை எந்த அணியும் தொடர்ந்து இருமுறை டி20 உலக கோப்பை வென்றதில்லை இம்முறை இந்தியா அதையும் செய்து சாதனை படைக்கும் என்பதே நமது கணிப்பு. இதன் காரணத்தை இனிவரும் கட்டுரைகளில் விவரிக்கும் முன் இந்த போட்டி குறித்த சில அரசியல் நிகழ்வுகளை காணலாம்.



**அரசியல் பதட்டங்கள்:**

அரசியல் இன்றி இவ்வுலகில் எதுவும் அசையாது என்பதை தெளிந்தோர் அறிவர், 2024 இல் பாரிசில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்யாவுக்கு எதிராக உச்சபட்ச அரசியல் நடந்ததும், ரஷ்யாவை எதிர்க்காத இந்தியாவிற்கு எதிராக பல போட்டிகளில் அரசியல் காழ்ப்புணர்ச்சி நடந்து இந்தியர்கள் குறைந்தபட்ச மெடல்களையே வெற்றி கொள்ளும் நிலை நடந்ததும், பிறகு பிரதமர் மோடி உக்ரைன் மற்றும் ரஷ்ய அதிபரிடம் பேச்சுவார்த்தை நடத்திய சம்பவம் நிகழ்ந்த பின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக், பாகுபாடின்றி நடத்தப்பட்டதும் அதில் இந்தியா மெடல் குவிப்பு செய்ததும் அனைவரும் அறிந்ததே. ஆனால் இப்போது இந்தியாவில் நடக்கும் இந்த உலகக்கோப்பையை ஒட்டி நடக்கும் அரசியல் நிகழ்வுகளை ஏதோ புதியது போன்று பார்ப்பது ஆச்சரியமே. பாகிஸ்தான் இந்தியாவில் விளையாடுவதை பாகிஸ்தானுடன் இந்தியாவும் மறுக்கும் நிலையில் அவர்களுடைய ஆட்டங்கள் இலங்கையில் நடத்தப்பட உள்ளது.

தற்போது பங்களாதேஷில் நடக்கும் இந்துக்களுக்கு எதிரான வன்கொடுமைகளையும், அங்கிருக்கும் ஆட்சியாளர்கள், இந்தியாவின் வடமேற்கு மாநிலங்களின் பிரிவினை என்றும் இந்தியாவின் இறையாண்மை குறித்தும் பேசியவருக்கு ஆதரவாக இருந்த கண்டிக்கத்தக்க நிலைப்பாட்டினாலும், பங்களாதேஷ் வீரர்கள் ஐபிஎல்-ல் விளையாடுவதை இந்தியர்கள் விரும்பாத நிலையில் முஸ்தபிக்குகுர் ரஹ்மான் கேகேஆர் அணியில் இருந்து விலக்கப்பட்டார்.

இதைத்தொடர்ந்து தன் எதிர்ப்பை பதிவு செய்வதாக எண்ணி, பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியம் இந்தியாவில் தனது அணிக்கு பாதுகாப்பு இருக்காது என்று யாரும் ஏற்க முடியாத ஒரு அறிக்கையை வெளியிட்டதோடு தனது ஆட்டங்களையும் இலங்கையில் நடத்த வேண்டும் என்று கடைசி நேரத்தில் கோரிக்கை வைத்தது.

இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை சர்வதேச அளவுகோலின் படி மதிப்பிட்ட ஐசிசி இந்த வேண்டுகோளில் எந்த உண்மையும் இல்லை ஆதலால் மாற்ற முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்தது. அப்படியானால் தான் உலகக்கோப்பையில் இருந்து விலகிக் கொள்வதாக பங்களாதேஷ் அறிவித்தது. கிரிக்கெட்டில் அவுட் ஆப் ஃபார்மில் தன் அணி இருப்பதைக் கூட உணராமல் இப்படி ஒரு முடிவை வெளியிட்ட பங்களாதேஷை எந்த கவலையும் இன்றி ஐசிசி விலக்கி அதற்கு பதிலாக ஸ்காட்லாந்தை அழைத்துள்ளது. இதனால் பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியத்திற்கும் தங்களுக்கும் மீள முடியாத இழப்பு ஏற்படும் என்று வெளிப்படையாகவே பங்களாதேஷ் விளையாட்டு வீரர்கள் கவலை தெரிவித்திருக்கும் நிலையிலும் அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் சூழ்ச்சியினால் உருவான பங்களாதேஷ் அரசியல் நிர்வாகம் இப்போது எதுவும் செய்ய முடியாமல் ஸ்தம்பித்துள்ளது.

**நகைப்பு:**

பங்களாதேஷிற்கு ஆதரவாக ட்வீட் செய்த பாகிஸ்தானை கேலி செய்யும் வகையில் இந்தியா 'உங்களுக்கு அப்படி ஒரு பரந்த மனப்பான்மை இருந்தால், நீங்கள் உலக கோப்பையில் இருந்து விலகிக் கொள்ளுங்கள் உங்களுக்காக வகுக்கப்பட்டுள்ள போட்டிகளில் பங்களாதேஷை விளையாட வைக்கலாம்' என்று அறிவித்ததும், சட்டு என்று பாகிஸ்தானும் அமைதி நிலைக்குச் சென்றுவிட்டதும், சிரிப்பலைகளை ஏற்படுத்தி உள்ளது.

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## அத்தியாயம் 4 : எட்டுத்தொகை நூல்கள்

பத்துப்பாட்டு நூல்கள், ஒரே புலவர் இயற்றிய, நீண்ட அடிகளைக் கொண்ட பாடலாக அமைந்திருக்கின்றன. இதற்கு மாறாக, எட்டுத்தொகை நூல்கள், பல்வேறு புலவர்கள் பாடியிருக்கும் சிறிய அடிகளைக் கொண்ட பாடல்களின் தொகுப்பாகும். இவ்வாறு எட்டு நூல்கள் தொகுக்கப்பட்டதால், இவை எட்டுத்தொகை நூல்கள் எனப்படுகின்றன. இந்த நூல்களை நினைவில் வைத்துக்கொள்வதற்காக இயற்றப்பட்டுள்ள பழைய வெண்பா இதோ -

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ (று)**
**ஒத்த பதிற்றுப்பத் (து)ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோ (டு)அகம்புறம்என்**
**(று)இத்திறத்த எட்டுத் தொகை.**

மேற்குறிப்பட்ட எட்டு நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்தும் அகத்திணை அதாவது மனிதரின் உள்ளத்து இயல்பான காதல், பக்தி உள்ளிட்ட நம்பிக்கைகள் போன்ற உணர்வுகளைக் கூறும் நூல்கள். பதிற்றுப்பத்தும் புறநானூறும் அக்கால மன்னர்களின் வீரம், கொடைச் சிறப்பு ஆகியவற்றுடன் அவர்கள் செய்த வேள்விகள் போன்ற புறத்தே நிகழ்பவற்றைப் புகழும் புறத்திணை நூல்களாகும். மீதியிருக்கும் பரிபாடல், அகமும் புறமும் கலந்த அகப்புறத் திணை நூல் என்று அழைக்கப்படுகிறது.

எட்டுத்தொகை நூல்களிலேயே நீண்ட அடிகளைக் கொண்ட பாடல்களின் தொகுப்பு அகநானூறு. குறைந்தபட்சம் 13 அடிகளையும் அதிகபட்சமாக 31 அடிகளையும் கொண்ட மொத்தம் 401 பாடல்கள் இதில் உள்ளன. நீண்ட அடிகளைக் கொண்டிருப்பதால், இதற்கு நெடுந்தொகை என்ற மற்றொரு பெயரும் உண்டு. இந்தப் பாடல்களைப் 145 புலவர்கள் பாடியுள்ளனர். இவற்றைத் தொகுத்த புலவரின் பெயர், மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மர். ருத்ர சர்மா என்ற அந்தணப் புலவரின் பெயரே, தூய தமிழில் உருத்திரசன்மர் என்றழைக்கப்பட்டுள்ளது. இந்நூலைத் தொகுக்கச் செய்தவர் பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதி.

அகநானூறு நூல் தொகுப்புக்குத் தனிச் சிறப்பு உண்டு. 1, 3, 5, 7, 9, 11 என ஒற்றைப்படை எண்கள் கொண்ட பாடல்கள் பாலைத் திணை சார்ந்தவை. இத்திணையில் 200 பாடல்கள் உள்ளன. 2, 8, 12, 18 என இரண்டு, எட்டு ஆகிய எண்கள் வரும் 80 பாடல்கள், குறிஞ்சித் திணை பற்றியவை. 4, 14, 24 என நான்கு என்ற எண்ணில் வரும் 40 பாடல்கள் முல்லைத் திணைக்கு உரியவை. இதேபோல், 6, 16, 26 என ஆறு என்ற எண்ணில் உள்ள 40 பாடல்கள் மருதத் திணைக்கும், 10, 20, 30 என பத்துப் பத்தாக வரும் எண்கள் கொண்ட 40 பாடல்கள் நெய்தல் திணைக்கும் உரியவை.

குறைந்தபட்சம் 3 அடிகளையும் அதிகபட்சம் 6 அடிகளையும் கொண்டு, ஐந்து திணைகளுக்கு 100 பாடல் வீதம் மொத்தம் 500 பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூல், ஐங்குறுநாறு. இதனுள், மருதத் திணையில் ஓரம்போகியார், நெய்தல் திணையில் அம்மூவனார், குறிஞ்சித் திணையில் கபிலர், பாலைத் திணையில் ஓதலாந்தையார், முல்லைத் திணையில் பேயனார் ஆகிய புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். இந்த நூலைத் தொகுத்த புலவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார், தொகுக்கச் செய்தவர் சேர மன்னர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

இதேபோல் குறைந்தபட்சம் 4 அடிகளையும் அதிகபட்சமாக 9 அடிகளையும் கொண்ட 401 பாடல்களின் தொகுப்பு நூல், குறுந்தொகை. இந்தப் பாடல்களை மொத்தம் 205 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுக்கச் செய்தவர், குறுநில மன்னன் பூரிக்கோ. தொகுத்த புலவரின் பெயர் தெரியவில்லை. 9 அடிகள் முதல் 12 அடிகள் வரையுள்ள 400 பாடல்களின் தொகுப்பு நூல், நற்றிணை. இப்பாடல்களை 248 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களில் 56 பாடல்களை எழுதிய புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை. இதேபோல் இந்நூலைத் தொகுத்த புலவரின் பெயரும் தெரியவரவில்லை. இந்நூலைத் தொகுக்கச் செய்தவர், பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.

மற்றொரு அகத்திணை நூலான கலித்தொகை, கலிப்பாக்களால் அமைந்த 150 பாடல்களின் தொகுப்பாகும். இவற்றுள் முதல் பாடல் கடவுள் வாழ்த்து. எஞ்சிய 149 பாடல்கள் ஐந்திணை சார்ந்தவை. இவை பாலை (35 பாடல்கள்), குறிஞ்சி (29), மருதம் (35), முல்லை (17), நெய்தல் (33) என்ற வரிசையில் அமைந்துள்ளன. இவற்றை முறையே சேரன் பெருங்கடுங்கோ, கபிலர், மருதன் இளநாகனார், சோழன் நல்லுருத்திரன், நல்லந்துவனார்

ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர். கடவுள் வாழ்த்துப் பாடிய நல்லந்துவனாரே கலித்தொகையைத் தொகுத்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. நல்லுருத்திரனின் பாடல்களில் மகாபாரதம் பற்றிய குறிப்புகள் மிகுந்துள்ளன.

அகமும் புறமும் கலந்த பரிபாடல், பரி எனப்படும் குதிரையின் நடைபோல் அமைந்த பண்ணில், பரிபாடல் என்ற பாட்டு வகையில் எழுதப்பட்டதாகும். குறைந்தபட்சம் 25 அடிகளும் அதிகபட்சம் 300 அடிகளும் கொண்ட பாடல்கள் இதில் அடங்கும். உரையாசிரியர்கள் கூற்றுப்படி பரிபாடலில் மொத்தம் 70 பாடல்கள் உண்டு என்று கூறப்படுகின்ற போதிலும் தற்போது 22 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அவை, செவ்வேள் என்ற முருகப்பெருமான் குறித்த 8 பாடல்களும், திருமால் என்ற விஷ்ணு குறித்த 6 பாடல்களும், வைகை நதி குறித்த 8 பாடல்களும் ஆகும். இவை தவிர, பிற நூல்களில் இருந்து பிற்காலத்தில் திரட்டப்பட்ட சில பாடல்கள், பரிபாடல் புறத்திரட்டு என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

சேரர். சோழர், பாண்டியர் ஆகிய மூவேந்தர்கள் மற்றும் வேளிர் உள்ளிட்ட குறுநில மன்னர்களின் வீரம், ஈகை, வேள்விச் சிறப்புகளை எடுத்துரைக்கும் 400 பாடல்களின் தொகுப்பு நூலே, புறநானூறு. மொத்தம் 156 புலவர்கள் இப்பாடல்களைப் பாடியுள்ளனர். சேர மன்னர்கள் 10 பேரைப் பற்றி, 10 புலவர்கள் தலா 10 பாடல்களைப் பாடியிருப்பதன் தொகுப்பே பதிற்றுப்பத்து. ஆனால் இவற்றுள் முதல் பத்தும், கடைசிப் பத்தும் கிடைக்கவில்லை. பதிற்றுப்பத்தில் சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை செய்த புத்திரகாமேஷ்டி யாகம் உள்ளிட்ட பல்வேறு வேள்விகள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இனி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைக் காண்போம்...

(தொடரும்)

# தை பூசம்

குன்றுதோர் ஆடும் குமரா
குடத்தில் இட்ட விளக்காய் இருந்த கோடானுகோடி பக்தர்களை
குன்றில் இட்ட விளக்காய் திகழவைத்த
திருபரங்குன்றில் உறை குமரா

வழக்கத்தில் இருந்த ஒன்றை மீண்டும்
வழக்கமாக்கிட முனைந்தபோது உண்டானது ஒரு வழக்கு
வழக்கும் வழக்காடுதலும்
உனக்கு சிறுவர் விளையாட்டு அன்றே

ஞானப் பழத்தைப் பெற பெற்றோருடன் வழக்கு
பிரணவத்தின் பொருள் உரைக்க பிரமனுடன் வழக்கு
சொல்லுடன் விளையாட ஔவையுடன் வழக்கு
கந்தபுராணம் அரங்கேறிட காஞ்சியில் ஒரு வழக்கு

வழக்கிலும் வாதத்திலும் உன்னை
வெல்ல யார் உளர்
குன்றில் உறை குமரா

உன் வேலுக்கு விடை இல்லை
உன் கருணைக்கு அணை இல்லை
உன் பக்தருக்குப் பகை இல்லை
இனி குன்றில் தீபமேற்ற தடை இல்லை



இத் தை பூசத் திருநாளில் பத்துமலை முருகனைப் பணிந்து
எல்லா வளமும் பெற்றிடுவோம்


-ஸ்ரீநிவாசன்



# நமக்கான USER MANUAL

**இரா. முகுந்த கிருஷ்ணன்,**
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

நமது நாக்கு ருசியை உணரும் விசேஷ தன்மையால் ஒரு ஞானேந்திரியமாகிறது. ருசியான உணவை உண்டால் மட்டும் போதாது. ஜீரணிக்கப்பட்ட உணவின் சக்கையைத் தகுந்த சமயத்தில் வெளியேற்ற வேண்டும். அவ்வாறு மலத்தை வெளியேற்றும் வேலையை செய்யும் மலத்துவாரம் நாக்கின் இயந்திரக் கருவியாகும். மலம் வெளியேற்றப்படவில்லையானால் பசியையோ ருசியையோ நாக்கு விரும்பாது. எனவே நாக்கும் மலத்துவாரமும் ஒன்றோடு ஒன்று நெருங்கியத் தொடர்பு கொண்டவை. மருத்துவ அடிப்படையிலும் நாக்கிலிருந்து மலத்துவாரம் வரை உள்ள ஜீரண அமைப்பானது தொடர்ச்சியான ஒரே அங்கம்தான். மலம் என்றவுடன் நம் எல்லோருக்கும் ஏற்படுவது ஒருவித அருவருப்புதான். ஆனால் இந்த சொல் பொதுவாக தமிழ் மொழியில் அனைத்துவிதமான பயன்படாத, தேவையற்ற, அழுக்கான கழிவுப்பொருட்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். எனவே மலம் என்ற சொல்லைக் கண்டவுடன் “அசிங்கமான பொருள்” என்று மனதில் ஏற்படும் உணர்வுக்கு அவசியமில்லை.



ஆசனவாய் அல்லது மலத்துவாரம் என்ற இந்தப் பகுதி மனித உடலின் மிக முக்கியமான அங்கமாகும். தனிப்பட்ட விதத்தில் சொந்தமாக இயங்கக் கூடிய அங்கமாக இது இருக்கிறது.உணவை அரைக்கும் வேலையைச் செய்வது பற்கள். வாயில் உள்ள உணவுக்கு ஈரப்பதம் கொடுப்பது உமிழ் நீர். உமிழ்நீர் நாக்கின் ருசியுணர்ச்சியால் சுரக்கின்றது. அறுசுவைகளையும் அவற்றின் வெவ்வேறான கலவைகளின் அளவையும் தீர்மானித்து, தனக்குத் தேவையான உணவை நேர்த்தியாகத் தேர்வு செய்வது நாக்குதான். 32 பற்களுடன் மேலண்ணம், தாடை, இரண்டு உதடுகள் என்ற அமைப்புக் கொண்ட வாய்க்குத் தலைவன் இந்த நாக்குதான். வாய்க்குள் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று துளாவி உணவை ஒன்று சேர்த்து பலமுறை பற்களுக்கிடையே அதை கொண்டுவந்து அரைக்க வைத்து, உணவை கூழாக்கி தக்க சமயத்தில் தக்க ருசியுடன் அதை தொண்டைக்குள் தள்ளி முழுங்க வைப்பது இந்த நாக்குதான். அதேசமயம் எந்த ருசியாவது பிடிக்கவில்லையென்றால் உடனே அதை துப்பிவிடத் தூண்டுவதும் இந்த நாக்குதான். இவ்வளவு நுட்பமாக இயங்குவதால்தான் இது ஞானேந்திரியம் ஆகிறது. பேச்சாற்றலை விட ருசியை உணர்வதுதான் நாக்கின் விசேஷ அறிவுசக்தி.

வாய்வழியாக நாம் உட்கொள்ளும் உணவு பலநிலைகளில் ஜீரண உறுப்புக்களால் செறிக்கப்பட்டு சக்தியும் சாரமும் உறிஞ்சியபின், கடைசியாக மலக்குடலுக்கு தள்ளப்படுகிறது. மலத்துவாரம் அந்த சக்கையை வலிய இழுத்து வெளியே தள்ளுகிறது. ஆசனவாய் அல்லது மலத்துவாரம் என்பது சுருங்கி விரியும் தன்மையுடையது. இந்த உறுப்பு ஏதாவது காரணத்தால் சரிவர இயங்காமல் போனால் மலம் வெளியேறாது. வெளியேற்றப்படாத மலம் மலக்குடலில் தேங்கியிருந்து ஈரம் காய்ந்து போய் கெட்டிப்பட்டு மலச்சிக்கல் என்ற நோயாகிவிடும்.

வெகுநாட்களாக மலச்சிக்கல் என்ற சிக்கல் தொடர்ந்து இருந்து வந்தால் அதுவே மூலம் (Piles) என்கின்ற வியாதியாக உருவெடுக்கும். மலச்சிக்கலும் மூலவியாதியும் உடலில் மூலச்சூட்டை ஏற்படுத்தி மண்டையிடி அல்லது ஒற்றைத்தலைவலி போன்ற தீராத பலவித தலைவலிகளை ஏற்படுத்தும். ரத்த அழுத்தத்தை அதிகரிக்கும். நரம்புமண்டலத்தை சூடாக்கி, நைந்துபோகவைத்து நரம்புத்தளர்சியை ஏற்படுத்தும். பசியைத் தடுக்கும். குடல்புண்களை ஏற்படுத்தும். மலத்துவாரப் புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், குடல்வால் புண் போன்ற விதவிதமான நோய்களுக்கு காரணம், நாம் மட்டமானதாக கருதும் இந்த மலத்துவாரத்தின் ஆரோக்கியம் கெடுவதால்தான். இந்த இடத்தில் உயர்ந்த சுகத்தைப்பற்றிய தெனாலிராமன் கதையை நினைவுபடுத்திக் கொள்வோம்.

கேள்விகளுக்குத் தொடர்புகொள்ள (holisticyogichealing@gmail.com).

(தொடரும்)

# இது விளங்காது

**வ ரங்கநாதன்,**
ஆளுமைத் திறன் பயிற்றுநர்

சில பேர் எதுலயும் ஒரு குறை கண்டுபிடிச்சு விளங்காது ஆகாது அப்படீன்னே சொல்லுவாங்க

முல்லா வீடு தீப்பிடிச்சு எரியும். மொட்டை மாடில முல்லா இருப்பார். மக்கள் முல்லாவைக் காப்பாத்த ஒரு ஜமக்காளத்தைப் பிடித்துக் கொண்டு "முல்லா இதுல குதிங்க" என்பார்கள். ''மாட்டேன். குதிக்கும்போது நீங்க ஜமக்காளத்தை நகர்த்திடுவீங்க" ன்னாரு முல்லா. கடவுளே நேரில் வந்தாலும், நீங்க நாடக நடிகர்தானே என்பார்கள். விளங்காதவர்கள் சந்தேகம் பயம் அவநம்பிக்கையில் சந்தோஷம் இழந்து தவிப்பார்கள். தான் ஏதோ வஞ்சிக்கப்பட்டதாகவே உணர்வார்கள்.

**விடாப்பிடியான நெகடிவ் எண்ணம் ஏன் வருகிறது?**

● இயல்பிலேயே மனிதன் எதிர்மறையாகத்தான் சிந்திப்பவன். இது பரிணாம வளர்ச்சியின் பங்கு ஆகும். உயிரை இனத்தைக் காப்பாற்றி தக்க வைத்துக் கொள்ள இயல்பிலேயே சுற்றி உள்ள ஆபத்துகளை ஆழ்மனசு நோட்டம் விட்டுக்கொண்டே இருக்கும்.

● சிறு வயதில் ஆசைப்பட்டவைகள் மறுக்கப்பட்டதால் ஏற்பட்ட ஏமாற்றம் எதிர்மறை நம்பிக்கையாகி எதையும் அவநம்பிக்கையோடு பார்க்கும் பார்வை படிந்து விடுகிறது.

● ஒரு சில தோல்விகளால் தாழ்வு மனப்பான்மை பற்றிக் கொள்ள, தன்னால் எதுவும் முடியாது, தனக்கு எதுவும் படியாது என்ற மனப் போக்கினால் எதையும் நெகடிவாகவே பார்க்கும் வழக்கம் வந்து விடுகிறது. இது ஒருவகையில் தன் இயலாமையை மறைக்கும் உத்தி ஆகிவிடுகிறது.

● ஊடகங்களை, செய்தித்தாட்களை தினம் படித்துப் படித்து அவைகளில் வரும் கெட்ட செய்திகள் சம்பவங்கள் ஆகியவற்றையே படித்துப் பழக்கப்பட்டு மனதில் மாறா வடுவாக எதிர்மறை சிந்தனை படிந்து விடுகிறது.

இந்த மாதிரி சிந்திப்பவர்கள் நிச்சயம் மனநல ஆலோசனை பெறுவது உடல் ஆரோக்யத்துக்கு நல்லது. இல்லையேல் விரைவில் இதய நோயோ, வயிறு உபாதைகளோ வந்து விடும்.

**தானே தன்னை சரி செய்து கொள்ள விரும்புபவர்கள் செய்ய வேண்டிய வழிமுறைகள்**

1.இறைவன் மீதான நம்பிக்கையை பலப்படுத்த வேண்டும் தன் இயல்பில் எதுவும் சரி வராது என்றாலும் குலதெய்வத்தின் மீதோ இஷ்ட தெய்வத்தின் மீதோ பாரத்தைப் போட்டு விட்டு செய்ய வேண்டிய பணிகளை செம்மையாக செய்ய முயல வேண்டும். பணி செய்வது என் கடமை; பலன் தருவது பரமன் கருணை என மனத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்.


2.செய்திகள் பற்றிய சிந்தனைகளை விலக்க வேண்டும். நாளிதழ், சமூக ஊடகம் ஆகியவற்றைப் பார்ப்பதை நிறுத்த வேண்டும். ஏனெனில் அவைகள் நம்முடைய மனதை படபடப்பிலேயே வைத்திருக்கமுனையும். நிம்மதியைக் கெடுக்கும். சமூகமே கேவலமானது என்ற பிரமையை ஏற்படுத்தும்.

3.எண்ணத்தை கவனிக்கப் பழகணும் நெகடிவான சிந்தனை வரும்போது அதற்கு நேர் மாறாக நடக்கும் என்ற உள்ள உறுதியைக் கொண்டு வரணும். துணிந்து செயலில் இறங்கணும்.

4.நகைச்சுவை நெகடிவ் சிந்தனைக்கு நச்சு- நண்பர்களோடு அரட்டையில் ஈடுபடணும், நல்ல பொழுதுபோக்காக சிரித்து பேசி அரட்டை அடிக்கும்போது மனசில் நம்பிக்கை ஊறும்.

5.நன்றி தெரிவித்தல் - தினம் இரவு உறங்கச் செல்லும் முன் அன்று நடந்த நல்ல விஷயங்கள் அனைத்தையும் நினைவுபடுத்தி இறைவனுக்கு நன்றி சொல்லி விட்டு உறங்கச் செல்லணும் இது மூளை நரம்புகளுக்கு வலிமை சேர்க்கும். ஆக்கபூர்வமான எண்ணம் வளரும்.

**நெகடிவ் சிந்தனை நோய்க்கு தூது அனுப்பும்.**
**பாசிடிவ் சிந்தனையே உடலுக்கும் பலம் தரும்**



# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 8)

இராம . வெங்கடாத்ரி

வேற்றுமையில் ஒற்றுமையில் ஹிந்து தர்ம சாதனை! நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ்.எஸ்.-ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம் என்பதே. பல வண்ண மணிகளைப் பிணைத்து இணைக்கும் நூல் போல ஹிந்துப் பண்பாட்டின் கூறுகள் பன்னெடுங்காலமாக இந்த கலாச்சார பாரதத்தை இணைத்து வருகின்றன.

**இங்கே காசி அங்கே ராமேஸ்வரம்**

அமெரிக்க நாட்டின் சராசரி குடிமகனின் ஆசை வாழ்க்கையில் ஒரு முறையேனும் ஹவாயி தீவுகளுக்குச் சென்று வர வேண்டும் என்பதாக இருக்கும். நம் பாரத நாட்டிலோ காசிக்கும் ராமேஸ்வரத்துக்கும் தீர்த்த யாத்திரை சென்று வர வேண்டும் என்பது ஒரு நிறைவேற்ற வேண்டிய கடமையாக கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. தமிழர்கள் காசிநாதன் என்று பெயர் சூடி மகிழ்வதும், பஞ்சாபியர்கள் ராமேஸ்வர் சிங் என்று பெயர் சூட்டிக்கொள்வதும் இந்த கலாச்சார ஒருமைப்பாட்டின் சாட்சியங்கள்.

**ரோடு இணைக்காதபோதும், ஆன்மீகம் இணைத்தது**

காசிக்கும் ராமேஸ்வரத்துக்கும் இடையே உள்ள தொலைவு 1830 கிமீ என்று கூகுள் கூறுகிறது. போக வர உள்ள 3660 கிமீ தொலைவை அந்தக் காலத்தில் சுமார் 4 மாத கால நடைப் பயணமாக தீர்த்த யாத்திரை மேற்கொண்டிருக்கிறார்கள்.

காசி யாத்திரை மேற்கொள்வோர் காசியில் விசுவநாதரை வழிபடும்போது இராமேசு வரத்திலிருந்து கொணர்ந்த மண்ணை கங்கையில் கரைப்பார் கங்கையிலிருந்து புனித நீரெடுத்துக் கொண்டு மீண்டும் இராமேசுவரம் வந்து கங்கை நீரால் இராமநாதசுவாமிக்கு அபிஷேகம் செய்வார் இதன் பின்னரே காசி யாத்திரை நிறைவடையும். இப்படி காசியும்இராமேசுவரமும்இந்நாட்டின் ஒருமைப்பாட்டைத்தொன்றுதொட்டு நிலைநிறுத்தி வருகின்றன.

அந்தக் காலத்தில், காசி யாத்திரை போக கையில் காசு தேவையில்லை. அந்தந்த பகுதிகளில் வாழும் மக்களின் மொழி தெரிந்திருக்கத் தேவையில்லை. ஆனாலும் தீர்த்த யாத்திரையின்போது எல்லாப் பகுதிகளிலும் எல்லா மொழி பேசும் மக்களும் தங்கி இருக்கிறார்கள், உண்டிருக்கிறார்கள், ஒருவருக்கொருவரைத்தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளைக்காரன் ரோடு போட்டதாலும், ரயில் விட்டதாலும் இணைக்கப்பட்டு இந்தியா என்ற நாடு உருவானது என்று கூறும் மார்க்ஸியவாதிகள், இந்த காசி ராமேஸ்வரம் யாத்திரை இத்தனை காலமாக எப்படி ஒருவருக்கொருவரை இணைத்து வந்திருக்கிறது என்ற உண்மையை மறைக்க துடியாய்த் துடிப்பது ஏன் என்பது இப்போது புரிந்திருக்கும்.

**காசி நகர்ப்புலவர் பேசும் உரை**

பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார் என்ற பாடலில்

**“காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்”** என்று

காசிக்கும் தமிழகத்துக்குமான இணைப்பை சொல்லியிருக்கிறார் பாரதியார். தமிழகத்துக்கும் காசிக்குமானத்தொடர்புகள்மிகத்தொன்மையானவை, மகாபாரத காலத்தில் இருந்தே அந்த தொடர்பு நீள்கிறது.

சேரன் செங்குட்டுவன் கண்ணகி சிலைக்காக இமயத்தில் இருந்து கல்லை எடுத்து கனகவிசயரின் தலையில் சுமக்க வைத்தபொழுது, காசியில் இருந்து கங்கை நீரையும் எடுத்துவந்தான்.

**“கங்க கர ராமனுக்கு ராமேஸ்வர மண்ணு தெய்வம்**
**செங்குட்டுவ சேரனுக்கோ இமய மல கல்லு தெய்வம்**
**ராமேஸ்வர மண்ணும் தெய்வம், இமய மல கல்லும் தெய்வம்**
**ஒண்ணுதானே நம்ம நாடு தம்பி ஒண்ணுதான் ஒண்ணுதானே”**

என்ற ஆர்.எஸ்.எஸ். இயக்கப்பாடல் வரிகள் இந்த ஒருமைப்பாட்டை உணர்த்துகின்றன.

தமிழ்நாட்டில் பல வயதான மன்னர்கள் காசிக்குச் சென்று உயிர்நீத்த வரலாறு உண்டு. அப்படி செல்லமுடியாதோர் வடக்கு நோக்கி அமர்ந்து உயிர் நீத்தார்கள், ஏன் வடக்கு நோக்கி அமர்ந்தார்கள் என்றால் காசியினை நினைந்து, காசியில் இறப்பதாக நினைந்து காசி இருக்கும் வடக்கு நோக்கி அமர்ந்தார்கள்.

**“திருவாரூரில் பிறந்தால் முக்தி காசியில் இறந்தால் முக்தி**
**காஞ்சியில் வாழ்ந்தால் முக்தி சிதம்பரத்தை தரிசித்தால் முக்தி,**
**திருவண்ணாமலையினை நினைத்தால் முக்தி”**

என்பது தமிழக வழக்குச் சொல். அதாவது தமிழகத்தின் ஆலயங்களைப் போலவே காசியினை தங்கள் இயல்பான ஆலயமாக கருதி இப்படிச்



சொன்னார்கள், காசி தொலைவு என்றோ, எங்கோ இருக்கும் ஆலயம் என்றோ இங்கே யாரும் எப்போதும் கருதியதில்லை.

காரைக்கால் அம்மையார் கயிலாயம் செல்லும் போது காசியினை தரிசித்தார். பட்டினத்தார் முழு ஞானம் பெற்றது காசியில்தான், தன் மிகச்சிறந்த சீடன் பத்ருஹரியினை அவர் அங்குதான் சந்தித்தார். ராமானுஜர் வாழ்வினை மாற்றியதும் காசியே என்பது வரலாறு. திராவிட மாடல் வருவதற்கு முன்பு வடக்கு தெற்கு பேதம் எல்லாம் இருந்ததில்லை என்பதற்கு இது போல இன்னும் பல உதாரணங்கள் உள்ளன.

தமிழகத்து ஞானி குமரகுருபரர் காசிக்குச் சென்று ஷாஜகானின் மகனான தாரா ஷிக்கோவை சந்தித்து, கலைமகளின் மீது "சகலகலாவல்லி மாலை" பாடி சிம்மத்தில் அமர்ந்து உருது பேசி அதிசயக்க வைத்து காசியினை மீட்டார்.

காசிக்கு பல தமிழக மன்னர்கள் செய்த திருப்பணி போலவே ராமேஸ்வர ஆலயத்துக்கு வட இந்திய மன்னர்களும், நேபாள மன்னர்களும் செய்த திருப்பணிகள் பல உண்டு, இன்றும் நேபாள மன்னர் ராமேஸ்வர ஆலயத்தின் அறங்காவலரில் ஒருவர்.

**தமிழகத்து காசிகள்**

அந்தக் காலத்தில் காசியாத்திரை சென்று திரும்பி வந்தவர்கள் அவரவர் ஊர்களில் காசி விஸ்வநாதர் ஆலயத்தை நிறுவினர். இன்றைக்கும் இப்படி நிறுவப்பட்ட ஆயிரக்கணக்கான காசி விஸ்வநாதர் ஆலயங்களை, எல்லா தமிழக கிராமங்களிலும் காண முடியும்.

பராக்கிரம பாண்டிய மன்னன் காசிக்கு நிகராக தென் காசி என்னும் கோவிலையும், ஊரையும்,

**இந்த நாட்டில் வாழ்ந்த மகான்களும் மன்னர்களும் ஆன்மீகத்தை வாழ்வியலோடு கலந்து ஒரே தேசம் என்ற உணர்வை காலம் காலமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஆன்மிக ஒருமைப்பாட்டில் "காசி" தலையாய பங்கு வகிக்கிறது.**

காசி விசுவநாதார் பெயராலேயே ஏரி ஒன்றையும் நிர்மாணித்தான். பதினேழு ஆண்டுகள் இந்தக் கோவிலின் திருப்பணி நடைபெற்றது. இடையிலேயே அம்மன்னன் மரணமடைந்துவிட்டதால் அதற்குப் பின்னர் அரியணை ஏறிய குலசேகர பாண்டியனால் தென்காசி கோவில் கட்டி முடிக்கப்பட்டது. தென்காசியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி நடத்திய வழித்தோன்றல்கள் "தென்காசிப் பாண்டியர்கள்" என்றே சுட்டப்படுகின்றனர் .

விருதுநகர்மாவட்டத்தில்அரிகேசரி பராக்ரம பாண்டியனால்காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோயில்கட்டப்பட்டது. அந்த இடம்தான்இன்றைய சிவகாசி.

கடலூர் மாவட்டத்தில் உள்ள விருத்தகாசி என்று அழைக்கப்படும் விருத்தாசலம், சிவகங்கை மாவட்டத்தில் வைகை ஆற்றங்கரையில் எழுந்தருளியிருக்கும் புஷ்பவனக் காசி என்று அழைக்கப்படும் திருப்பூவனம், கரூர் மாவட்டத்தில் குளித்தலையில் தட்சண காசி என்று அழைக்கப்படும் கடம்பர் கோவில் இப்படி பல ஆலயங்கள் தமிழகத்துக் காசித் திருத்தலங்களாக, காசிக்கு நிகரான திருத்தலங்களாகக் குறிப்பிடப்பட்டு காசிக்கும் தமிழகத்திற்குமான பிணைப்பை பறைசாற்றுகின்றன.

**தமிழ் இலக்கியத்தில் காசி**

கி.மு. காலகட்டத்தைச் சேர்ந்த சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் கபிலர் எழுதிய குறிஞ்சித் திணை பாடல் ஒன்றில்

**"தெருவின்கண் காரணம் இன்றிக் கலங்குவார்க் கண்டு நீ வாரணவாசிப் பதம் பெயர்த்தல் ஏதில"**

**என்று** 'வாரணாசி' யின் உயர்வு கூறப்பட்டுள்ளது.

இதுபோல மணிமேகலை, சூளாமணை, நீலகேசி போன்ற பழந்தமிழ் இலக்கியங்களில் காசியைப் பற்றிய ஏராளமான குறிப்புகள் விரவிக் கிடப்பதை செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனம் வெளியிட்டுள்ள, தமிழர் மரபில் காசி என்ற நூல் ஆய்வு செய்துள்ளது. இது போக தமிழக கல் வெட்டுகளிலும், செப்பேடுகளிலும், தமிழக பழமொழிகளிலும் காசி பற்றிய தரவுகளைச் சொல்லும் இந்த நூல் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழகம் காசியோடு பிணைத்திருந்த ஒருமைப்பாட்டுக்கான ஆவணங்களை 51 பக்கங்களில் விலாவாரியாக விவரிக்கின்றது.

இந்த நாட்டில் வாழ்ந்த மகான்களும் மன்னர்களும் ஆன்மீகத்தை வாழ்வியலோடு கலந்து ஒரே தேசம் என்ற உணர்வை காலம் காலமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஆன்மிக ஒருமைப்பாட்டில் "காசி" தலையாய பங்கு வகிக்கிறது.

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 4

- ஏழுமலை




**இன்று சிந்திக்க இருக்கும் பாடல் வரிகள்**

"மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்". நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதிய பாடல் இரவு கழிந்தது இரவி எழுந்தான். அந்தப் பாடலில் வரும் **நரவுருவில் நடமாடிடும் தெய்வம்** என்ற வரிகளை பற்றி இந்தக் கட்டுரையில் ஆய்வோம்.

**மக்கள் தொகை வரமா? சாபமா?**

ஏகாத்ம மானவ வாதம் என்கின்ற கொள்கையை முன் வைத்த திரு.பண்டிட் தீனதயாள் உபாத்யாயா அவர்களிடம் ஒரு கம்யூனிஸ்ட் தலைவர் இந்த நாட்டின் மக்கள் தொகை ஒரு பெரிய பிரச்சனை என்று பேசும்போது, "எல்லா மனிதருக்கும் ஒரு வயிறுதான் உள்ளது, ஆனால் உழைத்துச் சம்பாதிக்க அதை விட இரு பங்கு வரத்தைக் கடவுள் கொடுத்திருக்கிறார், ஒரு வயிறு இருக்கிறது, ஆனால் இரண்டு கைகள் இருக்கின்றனவே" என்று திரு.தீனதயாள்ஜி குறிப்பிட்டார். இரண்டு கைகளால் உழைத்து தனக்கும், தனது குடும்பத்துக்கும், சமுதாயக்கும், வளம் சேர்க்கும் மனிதன் நாட்டின் மனித வளம் ஆகிறான். அப்படி இல்லாதவன் நாட்டின் சுமை ஆகின்றான்.

**மனிதக் கம்பன்**

கம்ப ராமாயணத்தைப் படிப்பதன் வாயிலாக மனிதத்தன்மை புலனாக வேண்டும். ஆகவே
"கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்"
என்று பாரதியார் சுட்டுகிறார். இராமன் மனிதனாகப் பிறந்த தெய்வம். மனிதப் பிறவியின் மேம்பட்ட தன்மைகளுக்குக் குறியாக விளங்கும் இறையோ எல்லையற்றது. அவ்வெல்லையற்றதைக் கம்பர் தாம் எடுத்துக் கொண்ட கதையின் வாயிலாகத் தம் திறமையையும் குழைத்துச் சில குறிகளால் தெளிவாக்கிவிட முயல்கிறார் என்பதை பாரதியார்
**"எல்லையொன் றின்மை எனும்பொரு ளதனைக்**
**கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி"**
என்று பாடுகிறார். ஆகவே கம்பன் காட்டும் ராமனைப் போன்று வாழ்பவர்கள் மனித உருவில் தெய்வம் என்பதாகச் சொல்லாமல் சொல்லிப் புரிய வைத்திருக்கிறார் பாரதியார்.

**வள்ளலார் என்ற உத்தம மனிதர்**

இந்த உலகில் மனிதனைத் தேடினார் சென்னையில் வாழ்ந்த 'தோப்பா சாமியார்' என்னும் அவதூத துறவியார். மனிதன் முன்னால் வாழ்ந்தால் ஆடை வேண்டும், மனித உருவில் மிருகங்கள் வாழும் இடத்தில், தான் ஆடை அணிய தேவை இல்லை என்றார் அவர். அந்தத் தெரு வழியாக போகிற ஒவ்வொருவரையும் பார்த்து நாய் போகிறது, நரி போகின்றது என்று மிருகங்களின் பெயரைச் சொல்லி அழைத்துக் கொண்டே இருப்பார். மக்கள் அவரைப் பைத்தியக்காரன் என்றனர். ஒரு நாள் வள்ளலார் அந்தத் தெரு வழியாகச் செல்வதைப் பார்த்த 'தோப்பா சாமியார்', 'இதோ ஓர் மனிதன் வருகிறார்' என்று உரைத்து தனது உடல்உறுப்புகளை இரு கரங்களால் மறைத்துக் கொண்டார். வாடிய பயிரைக் கண்டும் மனம் வாடிய மகான் வள்ளல் பெருமான். அவரது இத்தன்மையையே மனிதத் தன்மை என்று கூறினார் 'தோப்பா சாமியார்'

**மனித உருவில் தெய்வம்**

'தெய்வம் மனுஷ்ய ரூபேண' -அதாவது, தெய்வம், மனித வடிவில் வரும் என்பது, முன்னோர் வாக்கு. சுந்தரர் சீர்காழியைத் தரிசித்து, அங்கிருந்து திருக்கருகாவூர் புறப்பட்டார். தாகமும், பசியும் சுந்தரரையும் அவருடன் வந்த அடியார்களையும் வாட்டின. அங்கே ஒரு தண்ணீர்ப் பந்தலில் சிவனடியார் ஒருவர் இவர்களுக்கு உணவு அளித்தார். சுந்தரரும் உடன் வந்த அடியார்களும் உண்டு, உண்ட களைப்பு தீர, படுத்து உறங்கினர். கண் விழித்துப் பார்த்தால் தண்ணீர் பந்தலைக் காணவில்லை; தண்ணீர் பந்தல் வைத்து, உணவூட்டி, தாகம் தீர்த்தவர், இறைவனே என்று, "இத்தனை யாம் ஆற்றை அறிந்திலேன்" என்ற சுந்தரர் பதிகம் பாடினார். தெய்வம், மனித வடிவில் வரும்; அதே போல மற்றவர்க்கு உதவி செய்யும் மனிதர்கள் தெய்வ வடிவினர் என்பதை இந்த ஒன்பதாம் நூற்றாண்டு வரலாறு கூறுகிறது.

**ராமர் கடவுளா, மனிதனா**

கவிஞர் வைரமுத்து ராமர் மனிதனா? கடவுளா? என்று கேட்கிறார். மனிதன் என்றால் மனிதனுக்குக் கோயில் எப்படி? தெய்வம் என்றால் பிறக்காதவனுக்கு ஏன் பிறப்பிடம் என்று கேட்கிறார். வைரமுத்துவுக்கு பதில் கம்பராமாயணத்திலேயே இருக்கிறது.

**தேறினன் அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர்**

**அன்றே,**
**மாறி, இப் பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோர்**
**ஆறு கொள் சடிலத்தானும், அயனும், என்று**
**இவர்கள் ஆதி**
**வேறு உள குழுவை எல்லாம், மானுடம் வென்றது**
**அன்றே**

என்று கூறும் கம்பர், இராமன் மனிதனாகப் பிறந்ததால், தெய்வப் பிறவிகளை மனிதப்பிறப்பு வென்று விட்டது என்கிறார். சுருக்கமாகச் சொன்னால் ராமனைப் போன்று வாழ்பவர்கள் எல்லாம் மனித உருவில் தெய்வம்.

இதைத்தான் வள்ளுவர்
**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்க ப்படும்.**
என்று கூறி இருக்கிறார்.

இராமர் கோவில் பிராணப்ரதிஷ்டையின் போது, திரு.ஜக்கி வாசுதேவ் அவர்கள் கூறிய பின்வரும் கருத்தும் இத்துடன் ஒப்பு நோக்கத் தக்கது:

“குறிப்பிட்ட சில குணங்களை நாம் தெய்வீகம் என்று அங்கீகரிக்கிறோம். ஏதோ ஒரு மனிதர் அந்த குணத்தை வெளிக்காட்டும்போது நாம் அவரை வணங்குவோம். அவரிடம் உள்ள அந்த தன்மையை வணங்குகிறோம். அவரை மனிதராக வணங்கவில்லை...ராமர் மரியாதைக்குரிய புருஷர், ராமர் மனிதர்களில் உயர்ந்தவர் என்பதால் அவரை மரியாதா புருஷோத்தமர் என்று வணங்குகிறோம்.”

திரு கோபால்ஜி இன்னொரு பாடலில்
**சிறுமியர் எல்லாம் தேவியின் வடிவம்**
**சிறுவர் அனைவரும் ராமனே**
என்று கூறுகிறார். ராமனைப் போன்ற மரியாதா புருஷோத்தமர்களால் இந்த நாடு நிரம்பிட வேண்டும் என்பது அவரது அவா.

**ராமனும் சிவராமனும்**

திரு.ராம கோபாலன் ஐயா அவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ். பேரியக்கத்திலே முன் மாதிரியாக இருந்து வழிகாட்டிய பெரியவர் ஸ்ரீ சிவராம்ஜி. தனது வாழ்க்கை முழுக்க தொண்டுப்பணிகளுக்காகவே அர்ப்பணித்தவர் அவர், அவருக்குப் பிறகும் அவரைப் போல நாட்டுத் தொண்டிலே பித்தராகிடும் பலரை உருவாக்கிச் சென்ற உத்தமர் அவர்.

இந்த நாட்டில் கம்பன் கண்ட ராமனையும், தான் கண்ட பெரியவர் சிவராமனையும் போன்ற மனிதர்களைக் காண வேண்டும் என்ற கருத்தையே நரவுருவில் நடமாடிடும் தெய்வம்என்ற வரிகள் மூலமாக வீரத்துறவி உணர்த்தியிருப்பதாகக் கருதுகிறேன்.

(தொடரும்)

இந்தப் பாடலின் இசை வடிவத்திற்கு இந்த **QRCODE SCAN** செய்யவும்.

**பாரதியார் பாடல் - வேடிக்கை மனிதர்கள்**

நாம் பல பாடல்களை முதல் சில வரிகளை படித்து இருப்போம். அதுவே முழுப் பாடல் என்று நினைத்துக் கொண்டிருப்போம். அல்ல. முழுப் பாடலும் படிக்கும் போது ‘ அட ! இந்தப் பாடலுக்குப் பின் இவ்வளவு இருக்கிறதா’ என்று ஆச்சரியம் வரும்.

அப்படிப்பட்ட பாடல்களில் ஒன்று தான் கீழே உள்ள பாடல்.

**பாடல்**

**தேடிச் சோறுநிதந் தின்று -**
**பல சின்னஞ் சிறுகதைகள் பேசி -**
**மனம் வாடித் துன்பமிக உழன்று -**
**பிறர் வாடப் பலசெயல்கள் செய்து -**
**நரை கூடிக் கிழப்பருவ மெய்தி -**
**கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும் -**
**பல வேடிக்கை மனிதரைப் போலே -**
**நான் வீழ்வே னென்று நினைத் தாயோ?**

தனித்தனியே பொருள் சொல்லத் தேவை இல்லை. மிக எளிதான பாடல்தான்.

இது ஒரு பக்திப் பாடல் என்று சொன்னால் நம்ப முடிகிறதா?

# வெளிச்சம் படாத வேர்கள்

## வேலூர் சிப்பாய் புரட்சி

யா.சு. கண்ணன்

1806-ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர் புரட்சி என்பது வெறும் அரசியல் மாற்றத்திற்கான போர் மட்டுமல்ல; அது இந்திய வீரர்களின் ஆன்மா மற்றும் மத அடையாளங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு புனிதப் போராட்டமாகவும் அமைந்தது. குறிப்பாக, இந்தப் புரட்சியில் இருந்த இந்து சமயப் பரிமாணம் (Hindu Dimension), வீரர்களை ஒன்றிணைத்து ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்த வைத்ததில் முக்கியப் பங்கு வகித்தது.

இதனைப் பின்வரும் தலைப்புகளில் விரிவாகக் காணலாம்:

**கலாச்சார மற்றும் சமய அடையாளங்கள் சிதைக்கப்படுதல்**

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாளையக்காரர் முறையை ஒழித்த ஆங்கிலேயர்கள், 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியர்களைத் தங்களின் முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுவர முயன்றனர். இதன் ஒரு பகுதியாக, மெட்ராஸ் மாகாண ராணுவத்தில் இருந்த இந்திய வீரர்களின் (சிப்பாய்கள்) பாரம்பரிய அடையாளங்களை நீக்க உத்தரவிட்டனர்.

1806 ஜூலை 10-ல் நிகழ்ந்த வேலூர் புரட்சியானது, இந்தியச் சிப்பாய்கள் தங்களின் மத அடையாளங்கள் மற்றும் கலாச்சார உரிமைகள் பறிக்கப்பட்டதற்கு எதிராக நடத்திய முதல் பெரும் கிளர்ச்சியாகும்.

1857ல் பெரும் புரட்சிக்கு வித்திட்ட பல அம்சங்கள் 50 ஆண்டுகளுக்கு முன்பே வேலூரில் அரங்கேறின. இதில் இந்து மற்றும் முஸ்லிம் சிப்பாய்களின் சமய உணர்வுகள் மிக முக்கியப் பங்கு வகித்தன.

**சமய அடையாளங்கள் மீதான தாக்குதல்**

சென்னை மாகாணத்தின் புதிய படைத்தளபதி சர் ஜான் கிராடக் (Sir John Cradock) அறிமுகப்படுத்திய புதிய ராணுவ விதிமுறைகள் இந்து சிப்பாய்களைப் பெரிதும் காயப்படுத்தின:

- **சமயச் சின்னங்களுக்குத் தடை:** இந்து சிப்பாய்கள் நெற்றியில் திருநீறு, நாமம் அல்லது சந்தனம் போன்ற சமயச் சின்னங்களை இடக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது. இது ஒரு வீரனின் மத அடையாளத்தை அழிப்பதாகக் கருதப்பட்டது.
- **காதணிகள் நீக்கம்:** அக்காலத்தில் இந்து ஆண்கள் காதணி அணிவதைத் தங்களின் குல வழக்கமாகவும், கௌரவமாகவும் கருதினர். அவற்றைக் கழற்றச் சொன்னது அவர்களைப் பெரும் அவமானத்திற்கு உள்ளாக்கியது.
- **தாடி மற்றும் மீசை விதிகள்:** மீசையை ஒரு குறிப்பிட்ட சீரான அளவில் (Uniform cut) வைத்திருக்க வேண்டும் என்றும், தாடியைச் சவரம் செய்ய வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்பட்டது.

**2. அக்னியூ தலைப்பாகை (Agnew's Turban) - ஒரு சமயச் சிக்கல்**

புரட்சிக்கு உடனடித் தூண்டுதலாக அமைந்தது 'அக்னியூ தலைப்பாகை'. இதில் இரண்டு முக்கியச் சிக்கல்கள் இருந்தன:

இந்த புதிய தலைப்பாகையை அறிமுகப்படுத் தியது சர் ஜான் கிராடக் எனும் ஆங்கிலேய அதிகாரி.

- இந்தத் தலைப்பாகை ஐரோப்பியத் தொப்பியைப் போன்றே வடிவமைக்கப்பட்டிருந்தது.
- அதில் விலங்குத் தோலினால் (பசு மற்றும் பன்றி) செய்யப்பட்ட லட்சினை (Crest/Cockade) பொருத்தப்பட்டிருந்தது. இந்துக்கள் பசுவைப் புனிதமாகத் தொழுபவர்கள் என்பதால், அதைத் தொடுவது தங்களின் மதத்தைப் புனிதம் இழக்கச் செய்யும் என அஞ்சினர்.முஸ்லீம்கள் பன்றியை வெறுப்பது என்பது அவர்களின் மத நம்பிக்கையைச் சார்ந்திருந்தது.
- சிலுவை வடிவம்: அந்தத் தலைப்பாகையில் இருந்த சிலுவை போன்ற சின்னம் தங்களைக் கிறித்தவர்களாக மாற்றும் ஒரு மறைமுக முயற்சி என்று வீரர்கள் நம்பினர்.
- இது இந்து மற்றும் முஸ்லிம் வீரர்களின் மத உணர்வுகளைக் காயப்படுத்திய இந்த ஏற்பாட்டினை அவர்கள் ஏற்க மறுத்தனர்.
- இதனை எதிர்த்த சிப்பாய்களுக்கு 500 முதல் 900 கசையடிகள் தண்டனையாக வழங்கப்பட்டன.

**கட்டாய மதமாற்ற அச்சம்**

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேலூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கிறித்தவ மிஷனரிகளின் செயல்பாடுகள் தீவிரமடைந்திருந்தன. இராணுவ மருத்துவமனைகளிலும், முகாம்களிலும் மத போதனைகள் செய்யப்பட்டன. புதிய இராணுவ விதிகள் அனைத்தும் இந்தியர்களை மெதுவாகக் கிறித்தவ மதத்திற்கு மாற்றும் ஒரு திட்டமிட்ட சதி (Premeditated plot) என்று இந்து மற்றும் முஸ்லிம் சிப்பாய்கள் ஒருசேர நம்பினர். "இன்று தலைப்பாகை,

நாளை மதம்" என்பதே அவர்களின் பொதுவான கவலையாக இருந்தது.

**சமூகப் புறக்கணிப்பு மற்றும் தர்மம்**

இராணுவ விதிகளை ஏற்றுக் கொண்ட சிப்பாய்கள் தங்களின் கிராமங்களுக்குச் சென்றபோது, அவர்களின் சொந்த சமூகத்தினரே அவர்களைப் புறக்கணித்தனர். "மதத்தை விற்றவர்கள்" என்றும், "சாதி கெட்டவர்கள்" என்றும் மக்கள் அவர்களை ஏளனம் செய்தனர். இந்தச் சமூக அழுத்தம், இழந்த தங்களின் கௌரவத்தையும் மதத்தையும் மீட்டெடுக்க அவர்களைப் புரட்சியை நோக்கித் தள்ளியது.

**இந்து - முஸ்லிம் ஒற்றுமை**

வேலூர் புரட்சியின் ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால், மத அடையாளங்களைக் காக்க இந்துக்களும் முஸ்லிம்களும் கைகோர்த்ததுதான். மைசூர் மன்னர் திப்பு சுல்தானின் மகன்கள் இப்புரட்சிக்கு ஆதரவளித்தனர். இந்து சிப்பாய்கள், அந்நியர்களான ஆங்கிலேயர்களை விட, மண்ணின் மைந்தர்களான சுல்தானின் குடும்பத்தினர் ஆட்சியிலிருந்தால் தங்களின் மதச் சுதந்திரம் பாது காக்கப்படும் என்று கருதினர்.

**ஆனால் முஸ்லீம்களும் கூட அன்னியரே, கிறிஸ்துவ மதமாற்ற சக்திகளுக்கு ஒப்பானவர்களே என்பதை ஹிந்துக்கள் உணர மறுத்தது சரித்திர விசித்திரமே!!**

இத்தகையப் போக்கை ஆங்கிலத்தில் Naïve என்று கூறுவார்கள்; Naïve என்பதற்கு அகராதி, சூதறியா, வெகுளித்தனமான, அனுபவ முதிர்ச்சியில்லாத என்று பொருள் வழங்குகிறது.

ஆனால் சரித்திரத்திலிருந்து இஸ்லாத் தின் போக்கைப் பற்றி பாடம் கற்காதவர்களாக பெரும்பாலும் ஹிந்துக்கள் இன்றளவும் இருந்து வருவது துரதிருஷ்டவசமானது.

**புரட்சியின் போக்கு மற்றும் விளைவு**

1806 ஜூலை 10 அன்று அதிகாலையில் புரட்சி வெடித்தது.

**நேரம்:** அதிகாலை 2:00 மணி. வேலூர் கோட்டையில் காவல் பணியில் இருந்த 1வது மற்றும் 23வது படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் திடீரென தாக்குதலைத் தொடங்கினர்.

**முதல் பலி:** கோட்டையின் கமாண்டண்ட் கர்னல் பேன்கோர்ட் (Colonel Fancourt) முதலில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைத் தொடர்ந்து 23-வது ரெஜிமென்ட்டைச் சேர்ந்த கர்னல் மீக்கிராஸ் கொல்லப்பட்டார்.

- **படைவீரர்கள்:** சுமார் 500-க்கும் மேற்பட்ட ஆங்கிலேய வீரர்கள் உறக்கத்தில் இருந்தபோதே தாக்கப்பட்டனர். சுமார் 113 ஐரோப்பியப் படைவீரர்களும், பல அதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.



- **புலி கொடி:** புரட்சியாளர்கள் வேலூர் கோட்டையைக் கைப்பற்றி, திப்பு சுல்தானின் மூத்த மகன் ஃபதே ஹைதரை மன்னராக அறிவித்து, திப்புவின் மைசூர் புலி கொடியை ஏற்றினர்.

இருப்பினும், ஆற்காட்டிலிருந்து வந்த ஆங்கிலேயத் தளபதி கில்லெஸ்பி இந்தப் புரட்சியைக் கொடூரமாக ஒடுக்கினார். 800-க்கும் மேற்பட்ட வீரர்கள் கொல்லப்பட்டனர்.

**வரலாற்றுப் பாடம்**

புரட்சி தோல்வியடைந்தாலும், சிப்பாய்களின் மத உணர்வுகளில் தலையிட்டது தவறு என்பதை ஆங்கிலேய அரசு உணர்ந்தது. புதிய தலைப்பாகை மற்றும் மதச் சின்னங்களுக்கான தடைகள் உடனடியாகத் திரும்பப் பெறப்பட்டன. 2026-ஆம் ஆண்டில் நாம் இந்த வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, இந்தியர்களின் மதச் சுதந்திரத் திற்காகவும், கலாச்சார அடையாளத்திற்காகவும் சிந்தப்பட்ட முதல் ரத்தமாக வேலூர் புரட்சி திகழ்கிறது.

**முடிவுரை:**

வேலூர் புரட்சி என்பது வெறும் சம்பள உயர்வுக்காகவோ அல்லது பதவி உயர்வுக்காகவோ நடந்ததல்ல. அது "தன்மானம் மற்றும் தர்மம்" காக்க நடந்த ஒரு அறப்போர். 1857 முதல் சுதந்திரப் போருக்கு இதுவே ஒரு முன்னோடிப் பாடமாக அமைந்தது என்பதில் ஐயமில்லை.

தானத்தில் சிறந்தது அன்னதானம். அற்றார் அழிபசி தீர்த்தல் சிறந்தது என்று திருக்குறள் கூறுகிறது. மிக்க அறமே விழுத்துணையாவது என மணிமேகலை போற்றுகிறது. வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும், இங்கு வாழும் மாந்தருக்கெல்லாம் என்று பாடிய பாரதியும் பசிப்பிணி போக்கும் அன்னதானத்தை ஒரு மிக உயரிய அறச்செயலாக வலியுறுத்துகிறார். இப்படிப்பட்ட உயரிய அன்னதானத்தையே தன் வாழ்வின் லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர் தான் அன்னதானம் சிவன் எனும் மஹான்!

அன்னதானம் சிவன் கும்பகோணம் அருகிலுள்ள தேப்பெருமாநல்லூரைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் ராமஸ்வாமி. இவரது இளமைப்பருவத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் வசித்த கயத்தூர் சீனிவாச ஐயர் என்னும் மிராசுதார் பல கோவில் திருவிழாக்களில் அன்னதானம் செய்வதைப் பார்த்தார். அவருடன் அந்த சேவையில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். பசித்தவருக்கு உணவளிப்பதே கடவுளுக்கும், மனிதனுக்கும் செய்யக்கூடிய முதல் பணி என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. பிறகு தன்னிடமிருந்த ஒரு வீட்டையும், தன் தொண்டர் படையோடு களமிறங்கி விடுவார்!

1897ல் கும்பகோணத்தில் நடந்த மகாமகத்தின் போது, சங்கரமடமே கண்டிராத அளவுக்கு மிகப்பெரிய அன்னதானத்தை நடத்தினார். அதைக்கண்ட பல செல்வந்தர்கள் தாமாகவே முன்வந்து அவருக்கு பொருள் அளித்தனர். அதைக்கொண்டு பல கோவில் விழாக்களிலும் அன்னமளித்தார். 1916ல் கும்பகோணம் சங்கர மடத்தில் நடந்த நவராத்திரி விழாவில் “லட்சம் பிராமண போஜனம்” நடத்திக்காட்டினார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி உணவருந்தும் இடம் என்றாலும், சமைக்கும் இடம், சாப்பிடும் இடம் எல்லாம் படுசுத்தமாக இருக்குமாம்! இலை போட்டுப் பரிமாறும் இடத்தைச் சுத்தம் செய்வதற்காகவே துடைப்பம் வண்டி வண்டியாக வந்து இறங்கும் என்றால், உணவுப் பண்டங்களுக்குக் கேட்கவா வேண்டும்? ஆயிரக்கணக்கில் அரிசி, பருப்பு மூட்டைகள், மளிகைச் சாமான்கள், வண்டி வண்டியாகக் காய்கறிகள், இலைக்கட்டுகள்; அடுப்பு எரிக்க விறகு நூறு வண்டிகளில், ஊறுகாய்க்கான நெல்லிக்காய் மட்டும் இரண்டு மூன்று வண்டிகளில்! மலைப்பாக இருக்கிறதல்லவா?

மஹான்களின் தரிசனம்

# அன்னதானத்தால் அமரத்துவம் அடைந்த சிவன்

- நிதீஸ்வரன்

நிலத்தையும் விற்று கிடைத்த பணத்தில், லட்சுமி நரசிம்மர் கோவில் ஒன்றில் நடந்த திருவிழாவின் போது அன்னதானம் செய்தார்.

ராமஸ்வாமிக்கு அன்னதான சிவன் என்ற பெயரை காஞ்சி மடம் வழங்கியது. காஞ்சி மடம் அக்காலத்தில் கும்பகோணத்தைத் தலைமைபீடமாக கொண்டிருந்தது. அன்றைய காலக்கட்டங்களில், இப்பொழுது உள்ளது போன்ற உணவு விடுதிகள் இல்லாத காலம். மகாமகம், கும்பாபிஷேகம், திருவிழாக்கள் போன்ற மக்கள் பெருமளவில் கூடும் விழாக்களில் மக்கள் பசியாற இதுப் போன்ற அன்ன சத்திரங்களை நம்பியிருந்த காலம்.

திருச்செங்காட்டங்குடியின் அமுதுபடித் திருவிழா, அம்பர் மாகாணத்தின் சோமயாக விழா, காரைக்கால் மாம்பழத் திருவிழா, காவிரிப்பட்டணத்து ஆடி அமாவாசை, மாயூரம் துலா (ஐப்பசி) மாத உத்ஸவம், திருநாகேஸ்வரம் கார்த்திகை சோமவார விழா, நாச்சியார் கோயில் தெப்பம், திருவிடை மருதூர் தைப்பூசம், கும்பகோணத்து மாசி மகம், எட்டுக் குடி பங்குனி உத்திரம் என்று பெருந்திரளான மக்கள் கூடும் உத்ஸவங்களில் எல்லாம் அன்னதான சிவன்



அத்தனை பேருக்கு வேண்டிய தயிருக்கு, அன்னதானம் நடைபெறும் ஊரில் சில வாரங்களுக்கு முன்னதாகவே தயிரை சேகரிக்கத் தொடங்கி, கிடைக்கும் தயிரை எல்லாம் மரப் பீப்பாய்களில் நிரப்பி மூடி, மெழுகினால் அடைத்து சீல் வைத்து, அந்த ஊர்க் குளத்தில் உருட்டி விடுவார்களாம்! அன்னதானம் நடைபெறும் நாளில் பீப்பாய்களைத் திறந்தால் நேற்றுதான் தோய்த்த தயிர் போல், புளிப்பில்லாமல் சுவையாக இருக்குமாம்! இதை, "குளத்தோட குளிர்ச்சி மாத்திரந்தான் காரணம்னு சொல்லறதிக்கில்லே, அவரோட மனஸு விசேஷமும் சேந்துதான் அப்படி இருந்திருக்கணும்". என்பார் திரு ரா.கணபதி அவர்கள்.

ஒரு ஊரில் அன்னதானம் என்றால், அதற்கு முன் நாள் இரவு வரை அதற்கான சுவடே தெரியாதாம். இரவோடு இரவாகப் பண்டங்கள் வந்து இறங்கி, பங்கீடு ஆகி, அதிகாலையில் அடுப்பு மூட்டி உலையேற்றினால், பசி வேளைக்கு அறுசுவை உணவு தயார்.

ஆளுயர அண்டாக்களில் சாம்பார், ரசம், பாயசம்! கொதிக்கும் போது உண்டாகும் வாசனையை வைத்தே உப்பு, புளி, காரம், வியஞ்ச னங்கள் போதுமா போதாதா என்று தீர்மானம் செய்வார்களாம். முறத்தில் உப்பை வைத்துக் கொண்டு சிப்பந்தி ஒருவன் நிற்க, ருசிக்கேற்ற வாசனை வரும் வரை உப்பைப் போடுவது வழக்கமாம். முறம் கணக்கில் கொத்துமல்லி விதையை அரைத்து ரசத்தில் சேர்ப்பார்களாம்!

அதே போன்று, எத்தனை அண்டா வெச்சாலும், எத்தனை நீளம் கோட்டையடுப்பு வெட்டினாலும் சாதம் வடிச்சு மாளாதுன்னு அவர் என்ன பண்ணுவாராம் பத்து மூட்டை, இருபது மூட்டை வடிச்சு அதை அப்படியே நீள நீளப் பாய்லே பரத்திக்கொட்டி, கொதிக்கக் கொதிக்க இருக்கிற அந்த அன்னப் பாவாடை மேலேயே மெல்லிசா ஒரு துணியைப் போட்டு மூடி, கிடு கிடுன்னு அது மேலேயும் ஒரு பத்து இருபது மூட்டை ஈரப்பச்சரிசியை, ஆமாம் பச்சையா இருக்கிற அரிசியாவேதான் பரத்திக் கொட்டிட்டு,அதுக்கு மேலே கெட்டிக் கோணியாப் போட்டு, நன்றாக அடிப்பாய்க்கு அடி வரையில் அதை ஓரளவு இறுக்கமாச் சொருகி மூடி விடுவாராம். அரைமணி கழித்துக் கோணியை எடுத்தா அத்தனை அரிசியும் சாதமாயிருக்குமாம். அதாவது சாதம் வடிக்கிற வேலையில் பாதி மிஞ்சும்படி இப்படி யுக்தி பண்ணியிருக்கிறார்.

"சாதம்னா அப்படியே வெள்ளை வெளேர்னு ஹிமயமலை மாதிரி குவிச்சிருக்கும். ஸாம்பார் அண்டாவுல யானையே முழுகிப்போனாக்கூடத் தெரியாது. ஹிமாசல சிவன் மதுரை மீனாக்ஷி கல்யாணத்தில குண்டோதரனுக்காக அன்னக்குழி ஸ்ருஷ்டிச்சார்னு சொல்லுவாளே, அதையே இந்த ஏழைப் பிராமண சிவன் பண்ணாரோன்னு ப்ரமிக்கும்படியா அவர் பண்ணிண்டிருந்தார்." என்று குதூகலத்துடன் கூறிக் களிப்பாரம் காஞ்சி காமகோடி மஹாபெரியவா என்று குறிப்பிடுகிறார் திரு.ரா.கணபதி அவர்கள்.

ஒரு முறை திருவிசைநல்லூரில் ஸ்ரீதர ஐயாவாள் அவர்கள் ஆராதனை சமயம், அதே நேரத்தில் திருவிடைமருதூரில் மஹா ஸ்வாமிகள் முகாமிட்டிருக்க ஆயிரக் கணக்கில் திருவிசைநல்லூருக்கு வந்தனர். அவர்கள் பசியாற அன்னதானம் செய்யும்படி மஹாஸ்வாமிகள் இட்ட கட்டளையின் பேரில் அன்னதான சிவம் தகுந்த ஏற்பாடுகளை செய்திருந்தார். ஆராதனை முடிந்து ஒரு பந்திக்கு சுமார் இருநூறு பேருக்கும் மேலாக உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினர். அதே போன்று 4 பந்திகள் முடிந்தும், அடுத்த 2 பந்திக்கு மக்கள் காத்திருந்த நிலையில், பரிமாற நெய் தீர்ந்து இருந்தது. உடனே, அங்கிருந்தவர்கள் வந்து சிவனிடம் கூறவே அவர் எந்த சலனமும் இல்லாமல், பார்த்துக் கொள்ளலாம், ஏதாவது ஏற்பாடு செய்யலாம் போ என்று கூறிவிட்டார்.

வேறு ஒரு உதவியாளரை அழைத்து, நீ போய் திருவிடைமருதூர் வடக்குத் தெரு முனையில் போய் இரு. நம் மடத்தைத் தேடிக் கொண்டு யாராவது வழி கேட்டால் அவர்களுக்கு வழி சொல்லு என்று அனுப்பி வைத்தார். அவர் சொல்லியபடியே இவர் சென்ற போது, அங்கு ஒருவன் மாட்டு வண்டியில் நெய் டின்களை ஏற்றிக்கொண்டு வந்து வழிகேட்கவே இந்த உதவியாளர் வழிகாட்ட, அடுத்த பந்தி ஆரம்பிப்பதற்குள் நெய் வந்துவிட்டதாம்!

இவ்வளவு தூரம் நடக்கும் அன்னதான உணவில் சிறிதும் சிவன் ருசித்ததில்லை! மாறாக, எவரேனும் ஒரு அன்பரின் வீட்டுக்குச் சென்று நாலு கவளம் மோருஞ்சோற்றை உண்பார். அன்னதானம் செய்யாத தினங்களிலும் பழைய சோற்றைத்தான் தன்னுடைய இஷ்டாவான தக்ஷிணாமூர்த்திக்கு மானஸீகமாக நிவேதித்து விட்டு உண்பார்!

காஞ்சி மஹா ஸ்வாமிகள், சிவனின் வயோதிக காலத்தில் அவரது விருப்பப்படி திருப்புவனத்தில் தங்கியிருக்க ஏற்பாடு செய்தார். சிவன் மறைந்த செய்தி கிடைத்ததும், "சிவன் ஒரு துறவி இல்லை. ஞானமார்க்கத்தில் எந்த வித சாதனையும் செய்ததில்லை. ஆனாலும் இந்த ஜென்மத்தில் செய்த புண்ணிய பலனால் அவர் மோட்சம் அடைந்து விட்டார். இனி அவருக்கு பிறப்பில்லை," என்றார்.

சிவனைப் போல நம்மில் எத்தனை பேருக்கு மனம் வரும்! இன்று ஐ.டி.கம்பெனிகளிலும், வியாபாரத்திலும் கோடி கோடியாக சம்பாதிப்பவர்கள் எத்தனையோ பேர்! அவர்கள் தங்கள் தேவை போக மீதியை தானம் செய்ய வேண்டும். அதுவும் அன்னதானம் செய்யவேண்டும்.


# விழாக்களும் விரதங்களும்

-ஸ்வாதி, ஹரிப்ரியா

**பிப்ரவரி 01, தைப்பூசம்:**

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக போற்றப்படும் கந்தக் கடவுள் முருகனுக்கு ஆண்டு முழுவதும் பல்வேறு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அவற்றில் மிக முக்கியமான விரத நாளாக திகழ்வது தைப்பூச திருநாளாகும். தை மாதத்தில் வரும் பூச நட்சத்திரமும் பௌர்ணமியும், இணையும் நாளில் தைப்பூசம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 2026 பிப்ரவரி 01-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) தைப்பூச பெருவிழா நடைபெற உள்ளது.

தைப்பூசம் என்றாலே பக்தர்களின் நினைவிற்கு முதலில் வரும் தலம் பழனி. அசுரனை வதம் செய்யும் முன், முருகப்பெருமான் பழனியில் ஆண்டிக் கோலத்தில் இருந்து அன்னை பார்வதியிடம் வேல் பெற்று சூரனை வதம் செய்ததாக ஐதீகம் கூறுகிறது. இதனால் தான், பிற திருத்தலங்களை விட பழனியில் தைப்பூச விழா மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது. இந்த நாளை முன்னிட்டு, பக்தர்கள் துளசி மாலை அணிந்து, 48 நாட்கள் விரதம் இருந்து, நடைபயணமாக பழனிக்கு சென்று கந்தனை தரிசிக்கின்றனர்.



தைப்பூசத்தில் வழிபடும் வேல், ஞானம், தைரியம் மற்றும் தீமையை அழிக்கும் சக்தியின் சின்னமாக போற்றப்படுகிறது. அதேபோல், பால் அபிஷேகம் சுத்தத்தையும் மன அமைதியையும் குறிக்கிறது. காவடி எடுப்பது உடல் அகந்தை, ஆசை, கோபம் போன்ற மன சுமைகளை முருகனிடம் ஒப்படைக்கும் பக்தி வெளிப்பாடாக நம்பப்படுகிறது.

தைப்பூசம் இந்தியாவில் மட்டுமல்லாது மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உள்ளிட்ட நாடுகளிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இது முருக பக்தியின் உலகளாவிய தன்மையை வெளிப்படுத்துகிறது.

எளிய முறையில் விரதம் இருந்து, பால் குடம் அல்லது காவடி எடுத்து, அருகிலுள்ள முருகன் கோவிலில் வழிபடலாம். கோவிலுக்கு செல்ல இயலாதவர்கள் வீட்டிலேயே முருக நாமங்களை ஜபித்து, எளிய பூஜை செய்து விரதத்தை நிறைவு செய்யலாம்.

வேலின் வடிவான கந்தனை நினைத்து, வேண்டிய வரம் பெறுவோம்.

**தைப்பூச நாளின் மற்ற சிறப்புகள்:**

தைப்பூசம் முருக வழிபாட்டிற்கு மட்டுமின்றி சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, குரு வழிபாட்டிற்கும் மிகவும் உகந்தது ஆகும். அதனால் தைப்பூச நாளில் எந்த தெய்வத்தை வழிபட்டாலும் அளவில்லாத பலன் கிடைக்கும்.

தாமிரபரணியின் கரையில் தவமிருந்த ஸ்ரீகாந்திமதிக்கு நெல்லையப்பர் அருள்பாலித்த திருநாளும் இதுவே.

திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூரில் சாம்பலாகிப்போன பூம்பாவையை எழுப்பும்போது, ஆன்மிகத்தோடு தொடர்புடைய திருவிழாக்களை எல்லாம் பட்டியலிட்டு, அவற்றையெல்லாம் காணாமல் போய்விட்டாயே எனச் சொல்லி, பூம்பாவையை உயிர்ப்பிக்கின்றார். ஞானசம்பந்தர் வரிசைப்படுத்தும் விழாக்கள் யாவன: மாகேசுவர பூஜை, ஐப்பசி ஓண விழா, கார்த்திகை தீபம், திருவாதிரைத் திருவிழா, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், அஷ்டமி நாள், விடையாற்றி விழா என்பன ஆகும்.

அப்படி அவர் குறிப்பிடுகின்ற நாள்களுள் தைப்பூசம் ஒன்றாகும். "நெய்ப்பூசம் ஒண் புழுக்கல் நேரிழையார்கொண்டாடும்தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்" என்பது ஞானசம்பந்தர் வாக்கு. தைப்பூசத்தன்று தான் பூம்பாவையை திருஞானசம்பந்தர் உயிர்பித்தார். குருவாகிய ஞானசம்பந்தர் போற்றிய தைப் பூசத்தை, வள்ளலாரும் சிறப்பாகக் கொண்டாடத் துணிந்தார். வள்ளற்பெருமான் மேட்டுக் குப்பத்தில் சித்தியடைந்த நாள் தைப்பூசமாகும்.

திருவிடைமருதூரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வரும் தைப்பூச விழாவில் தாமும் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலோடு பாடுகின்றார் திருநாவுக்கரசர். "பாசம் ஒன்றிலராய் பல பக்தர்கள் வாச நாள் மலர் கொண்டு அடிவணங்கலும், பூச நாம் புகுதும் புனல் ஆடவே" என்பது அவர் பாடிய தேவாரம். திருச்சி ஸ்ரீரங்கத்தில் வீற்றிருக்கும் அரங்கநாதர் காவிரி கரையோரம் குடிகொண்டிருக்கும் தன் தங்கையான சமயபுரம் மாரியம்மனுக்கு சீர் கொடுக்கும் நாளும் இந்த தைப்பூச தினம் தான்.

காவிரி அன்னை மகாவிஷ்ணுவை நோக்கித் தவமிருக்கிறாள். தை மாதம் பூச நட்சத்திரத்தன்று

தான் காவிரிக்கு நேரே காட்சி கொடுத்து வரம் அளித்தார் மஹாவிஷ்ணு. இந்நிகழ்வை 108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருச்சேறை சாரநாதப்பெருமாள் கோவிலில் விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. எட்டு நாட்கள் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு ஒன்பதாம் நாள் தேர் திருவிழாவும் நடைபெறுகிறது.

தைப்பூசம் முருகனுக்கு உரியது என்றாலும், சைவர்கள் அனைவருக்குமே இது பொது விழாவாகும். அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து நீராடி தேவார திருவாசகப் பதிகங்கள் சொல்லி ஒருவேளை பால், பழங்கள் மட்டும் உண்டு மாலை கோயிலுக்குச் சென்று வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

**பிப்ரவரி 15, சிவராத்திரி:**

**உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் ஜோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்**

இந்த வருடம் மகா சிவராத்திரி பிப்ரவரி 15ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. “சிவராத்திரி” என்றால் “சிவனின் இரவு” என்று பொருள். இதில் மிக முக்கியமானது மஹா சிவராத்திரி ஆகும். இது ஆண்டுதோறும் மாசி மாத கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி நாளில் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நாளில் பக்தர்கள் நோன்பிருந்து, இரவு முழுவதும் விழித்திருந்து, இறைவன் சிவனை தியானித்து வழிபடுவது சிறப்பாகும்.



தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, உலகையே அழிக்கும் சக்தி கொண்ட ஆலகால விஷம் வெளிப்பட்டது. அதன் விஷப்புகை அனைத்தையும் கருமையாக்கியதால், அஞ்சி நின்ற தேவர்களும் அசுரர்களும் சிவபெருமானை வேண்டினர்.அவர்களை காக்க, சிவபெருமான் அந்த விஷத்தைத் தன் வாயில் ஏற்றுக் கொண்டார். விஷம் உடலுக்குள் பரவாமல் தடுக்க, அன்னை உமாதேவி சிவபெருமானின் கழுத்தைத் தன் கரங்களால் அழுத்திப் பற்றினாள். அதன் காரணமாக அவரது கழுத்து நீல நிறமாக மாறியது. இதனால் சிவன் நீலகண்டன் என அழைக்கப்பட்டார். உலகைக் காக்க ஆலகால விஷத்தை உண்ட இந்த மகத்தான தியாகத்தை நினைவு கூரும் திருநாளே சிவராத்திரி என நம்பப்படுகிறது.

ராத்ர என்ற சொல்லுக்கு, யாவும் செயலற்று ஒடுங்கி நிற்றல் என்று பொருள். எனவே தான் உயிர்கள் செயலற்று உறங்கும் இரவுப் பொழுது ராத்திரி எனும் பெயர் ஏற்றது. ஒருமுறை உலகமே இருண்டு கிடந்த ஊழிக்காலத்தில் பஞ்சபூதங்களும் செயலற்று ஒடுங்கியிருந்தது. இந்த நிலையில் சக்தியான தேவி, உலக உயிர்களை மீண்டெழச் செய்திட இரவு முழுதும் விழித்திருந்து சிவபூஜை செய்து மறுநாள் பொழுது விடிந்து உலகம் மீண்டும் தழைக்கும் வரத்தைப் பெற்றாள். அதோடு தான் செய்த சிவ வழிபாட்டை நினைவு கூரும் விதமாக அந்த இரவை சிவராத்திரியாக அழைத்து முறைப்படி விரதமிருந்து இரவில் நான்கு கால சிவபூஜை செய்வோர்க்கு மங்களங்கள் யாவும் தந்து நிறைவில் மேலான பதமும் தரவேண்டும் எனவும் வேண்டினாள். ஈசன் அவ்வாறே வரம் அளித்தார். இதையே நாம் இன்று சிவராத்திரியாக அனுஷ்டித்து 4 கால பூஜை செய்து வழிபடுகிறோம் என்றும் புராண குறிப்புகள் கூறுகின்றன.


சிவராத்திரியின் மிக முக்கியமான அம்சம் இரவில் நடக்கும் நான்கு கால பூஜைகள் தான். முதல்காலத்தில் சிவன் சோமஸ்கந்த ரூபத்தில் வணங்கப்படுகிறார். இரண்டாம் காலத்தில் மவுனகுருவான தட்சிணா மூர்த்தி ரூபத்தில் வணங்கப்படுகிறார். மூன்றாம் காலத்தில் சிவன் லிங்கோதவ ரூபியாக ஆராதிக்கப்படுகிறார். நான்காம் காலத்தில் சிவஸ்வரூபமாகவே லிங்கம் வழிபடப்படுகிறது.

பிரபஞ்சத்தில் சந்திரனும் மனித மனமும் ஒரே அம்சமாகக் கருதப்படுகின்றன. சதுர்த்தசி மற்றும் அமாவாசை நாட்களில் சந்திரன் மறைவதால், அந்த நாட்களில் மனமும் ஒடுங்கிய நிலையில் இருக்கும் என்று ஆன்மிக நம்பிக்கை உள்ளது.

அதனால், அந்த நேரத்தில் செய்யப்படும் ஜபம் மற்றும் தவங்களுக்கு அதிக ஆன்மிக வலிமை உண்டு. மன ஆசைகளைத் துறந்து இறைவனுடன் ஒன்றிய நிலையை அடைய சிவராத்திரி விரதம் பெரிதும் உதவுகிறது.

சிவராத்திரிக்குப் பின் மனம் இறைவனோடு ஒன்றிய அமைதியான நிலையில் இருக்கும் என நம்பப்படுகிறது.

மகா சிவராத்திரி நாளில் சிவதரிசனம் செய்து, சிவபூஜையும் சிவநாம பாராயணமும் மனமார மேற்கொண்டால், இதன் மூலம் அளவிட முடியாத ஆன்மிக பலன் கிடைக்கும். சர்வ மங்களமும் ஏற்பட்டு, மோட்சத்தை அடையும் பாதை உருவாகும்.



# கொன்றை வேந்தன் கதைகள்

## ஏவா மக்கள் மூவா மருந்து.

கலாவதி

***சுமன் பார்த்த வேலை***

முழு ஆண்டு தேர்வு முடிந்ததும், வகுப்பு தோழர்களுடன் பொழுதை கழித்துவிட்டு, இரவில் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் சுமன்.

அப்போது தான் அப்பாவும் வேலையை விட்டு வந்திருந்தார். இவனைப் பார்த்ததும் "வாடா, இந்த வருஷம் எந்த அத்தை வீட்டுக்கு போக போறே?" என்று அப்பா கேட்டார்.

"எந்த அத்தை வீட்டுக்கும் போகலை" என்றதும், "ஏன் உங்க சித்தப்பா வீட்டுக்கு போக போறியா? ஆனா, அவனும் எங்கயோ ஊருக்கு போறதா சொன்னானே?" என்று இழுத்தார்.

"அதெல்லாம் இல்லப்பா. இந்த வருஷம் தம்பி வருண் மட்டும் ஊருக்கு போகட்டும். எனக்கு இங்கயே வேலை இருக்குப்பா" என்று கெஞ்சுவது போல சொன்னான்.

அவனை குழப்பத்துடன் பார்த்த அப்பா,"நீ பெரிய பையனாயிட்ட. பசங்களோட ஊர் சுத்த ஆசையா? என்னமோ போ. அப்புறம் ஊருக்கு அனுப்பணும்னு கேட்டா, என்னால அனுப்ப முடியாது புரிஞ்சிக்க…" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

மறுநாள் முதல் சுமன் காலையில் எழுந்து தயாராகி, "அம்மா… விளையாட போறேன் மா" என்று சொல்லிவிட்டு கிளம்பி விடுவான். மாலை பொழுது சாய்ந்ததும் தான் வீடு திரும்புவான். "மதியம் கூட சாப்பிடாம அப்படி என்னதான் டா விளையாட்டு" என்று அம்மா அக்கறையுடன் கோபப்பட்டாலும், "மதியம் பசங்களோட சாப்பிட்டுட்டேன் மா" என்று சொல்லி, பேச்சை வேறு விஷயத்துக்கு மாற்றி விடுவான். இந்த ஒன்றரை மாத விடுமுறைகள் ஞாயிற்றுக்கிழமைகளிலும், அவனது அத்தை, மாமா குழந்தைகள் வந்தபோது ஓரிரு நாட்களிலும் மட்டும் வீட்டில் இருந்தான்.

பள்ளி திறக்க இன்னும் இரண்டு நாள்தான் இருந்தது. வீட்டில் டிவி பார்த்துக் கொண்டிருந்த தம்பி வருண், திடீரென "சுமன், இங்கே பாரேன். செய்திகளில் நம்ம ஆசிரியர் வராரு" என்று கூவி அழைத்தான். அப்பா, அம்மா, சுமன் எல்லோரும் வந்து பார்த்தபோது, ஆசிரியரின் அறிவியல் கண்டுபிடிப்புக்கு ஏதோ அரசு அங்கீகாரம் கிடைத்ததாக சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

நிருபர்கள் ஆசிரியரிடம் பேட்டி எடுத்ததை எல்லோரும் கேட்டார்கள். "என்னோட அறிவியல் கண்டுபிடிப்புக்கு எனது மாணவர்கள் செய்த உதவிதான் காரணம். அதிலும், சுமன் என்ற மாணவன் ஒரு புத்திசாலி. இந்த விடுமுறையில் ரெண்டு மாசமும் தினமும் வந்து உதவி செஞ்சான்" என்று ஆசிரியர் சொன்னதும், அதை கேட்டுக் கொண்டிருந்த அப்பாவும், அம்மாவும் "இதுக்காகத்தான் ரெண்டு மாசமும் எங்கயும் போகாம வீட்டுல கூட ஒழுங்கா உட்காராம இருந்தியா?" என்று கேட்டார்கள்.

"ஆமாம்பா, நீங்க ரெண்டு பேரும் எங்க பள்ளி கட்டணத்தை எப்படி கட்டறதுன்னு கவலைப்பட்டதை கவனிச்சேன். அந்த நேரத்துலதான் எங்க ஆசிரியரும் உதவியாளருக்கு ஆள் தேடிட்டு கேட்டாரு. நானும் அவர்கிட்ட நம்ம நிலைமையை விளக்கி சொன்னேன். வேலைக்கு போய் என்னோட கட்டணத்தை நானே பார்த்துக்கிட்ட மாதிரியும் ஆச்சு. அறிவியல் பத்தி தெரிஞ்சிக்கிட்ட மாதிரியும் ஆச்சு" என்று சொல்லி முடித்தான்.

"இப்படி பொறுப்புள்ள பையனா இருக்கறது ரொம்ப பெருமையா இருக்கு" என்று கூறி அப்பா அவனை அணைத்துக் கொண்டார்.



# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்

**படகு லக்ஷ்மணன்**

விவேகானந்தர் தவம் இருந்த ஸ்ரீபாதப் பாறையை மீட்டவர்களில் ஒருவரான திரு.லட்சுமணன்ஜி அவர்கள் 2026 ஜனவரி 22 அன்று தனது 86 வது வயதில் காலமானார். கேரள கோழிக்கோட்டில் பிறந்து ஆர்.எஸ்.எஸ். பேரியக்கத்தில் இணைந்த ஸ்ரீ லட்சுமணன் ஜி, 1962ல் நடந்த விவேகானந்தா நினைவுச் சின்னம் அமைக்க எழுந்த போராட்டத்தில் உயிரைத் துச்சமென மதித்து இரவோடு இரவாக சிலுவையை உடைத்தெறிந்து ஸ்ரீபாதப் பாறையை மீட்ட 15 பேர் கொண்ட குழுவில் ஒருவர்.

**விவேகானந்தரா? சேவியரா?**

விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவை பாரத அரசே ஒரு ஆண்டு முழுவதும் கொண்டாட முடிவு செய்த வேளையில், கன்னியாகுமரியில் விவேகானந்தர் மூன்று நாட்கள் தியானம் செய்த ஸ்ரீபாதப் பாறையில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பிட திரு.வேலாயுதம் பிள்ளை தலைமையில் அனைத்து ஹிந்து அமைப்புகளின் குழு அமைக்கப்பட்டது. அந்தப் பாறையில் விவேகானந்தருக்கு முன்பே தேவி கன்னியாகுமரி தவம் செய்திருக்கிறாள். பாறையில் பதிந்துள்ள பாதம் அவளுடையதுதான். அதனாலேயே அதனுடைய பெயரே ஸ்ரீபாதப் பாறை என்று ஆகியது.

கன்னியாகுமரி விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் அமைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாத கிறிஸ்தவர்கள் அது சேவியர் பாறை என்று பொய்க்கதை பரப்பினார்கள். கோவாவில் சமயக்குற்ற விசாரணை என்ற பெயரில் ஆயிரக்கணக்கானோரை சித்திரவதை செய்து, கொலையும் செய்த கொடுங்கோலன் சேவியர் பெயரில் ஒரு பெரிய சிலுவையை இரவோடு இரவாக நட்டார்கள். வெறுமனே சிலுவை அமைத்தால் போதாது. புனித சேவியருக்கு அங்கொரு நினைவுச் சின்னமும் எழுப்பியாக வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் போராட ஆரம்பித்தனர். கையைப் பிசைந்துக் கொண்டிருந்தார் அன்றைய முதல்வர் பக்தவத்சலம்.

**ஏகநாத் ரானடே**

இந்நிலையில் ஆர்.எஸ்.எஸ்ஸின் அப்போதைய அகில இந்தியப் பொதுச்செயலாளர் ஏக்நாத் ரானடே அவர்கள் விவேகானந்தர் மணி மண்டபம் அமைக்கும் பணிகளை ஒருங்கிணைக்க வந்தார். கிறிஸ்தவ கோட்டை போன்று இருந்த அந்த மீனவ குடியிருப்புகளின் பாதுகாவலை மீறி அந்த சிலுவையை அகற்றுவதே முதலில் செய்ய வேண்டிய பணி. கன்யாகுமரியில் ஹிந்து மீனவர்களே இல்லாத நிலையில் கோழிக்கோடு, வெள்ளையில், குயிலாண்டி, பைபூர் ஆகிய பகுதியில் இருந்த மீனவ குடியிருப்பில் இருந்து வீர தீரம் மிக்க 15 ஆர்.எஸ்.எஸ். ஸ்வயம்சேவகர்களை இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுத்தார். P. லட்சுமணன், N.P. நாராயணன், K. அம்புஜன், K.P. சந்திரன், K. ராமன், K. குட்டிமோன் (இவர்கள் எல்லாம் வெள்ளையில்); A.V. பாலன் (குயிலாண்டி); V.P. ராமன், V.P. அச்சுதன், K. ஸ்ரீதரன், T.P. கங்காதரன் (இவர்கள் பையோலி); M. தாஸன், M. கிருஷ்ணன், K. வாசு (பைபூர்), கருவந்துருத்து உன்னி அகியோர் இந்த வீர சாகசப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.



**ஆபரேஷன் விஜயதசமி**

கோழிக்கோட்டில் இருந்து கிளம்பிய மீனவர் குழு கன்யாகுமரி வந்தடைந்தது அந்த குழுவினர் பல நாட்கள் கன்யாகுமரியில் தங்கியிருந்து கடல் அலைகள், கடல் நீரோட்டம், நீரின் சுழற்சி மற்றும் வேகம், புவியியல் அமைப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, சிலுவையை எப்படி அகற்ற வேண்டும் என்பதற்காக ரகசியமாகத் திட்டம் தீட்டினர். இதற்கு ஆபரேஷன் விஜயதசமி என்று பெயர் சூட்டப்பட்டு, வெற்றித் திருநாளாம் விஜயதசமி ஆகிய அக்டோபர் 8, 1962 என நாளும் குறிக்கப்பட்டது. திட்டமிட்டபடியே நள்ளிரவில், கொந்தளிக்கும் கடலில் நீந்திச் சென்று, கையில் இருந்த ஆயுதங்களுடன், விரைவில் அந்த தடையை (சிலுவையை) அகற்றி, ஸ்ரீபாதப் பாறையை மீட்டது வீரர் குழு. இதன் பிறகே விவேகானந்தர் மணி மண்டபம் அமைக்கும் இதர பணிகள் வேகம் பெற்றன.

இந்த 15 பேர் குழுவில் பைபூரைச் சேர்ந்த M.தாசன், M.கிருஷ்ணன் ஆகிய இருவர் மட்டுமே தற்போது உயிருடன் இருப்பதாகத் தெரிகிறது

ஸ்ரீபாதப் பாறையை மீட்டெடுத்தபின் விவேகானந்தர்நினைவுச் சின்னத்தை அமைப்பதில்தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர் ஸ்ரீலட்சுமணன்ஜி. அவரது துணிச்சல், ஹிந்துக்களின் வெற்றி வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

# சினிமா சாரல்

- சேஷு



## திரௌபதி II :


தமிழகத்தில் ஸ்க்ரீன் கிடைக்காமலும், கிடைத்தாலும் ப்ரைம் ஷோ டைமில் ஒதுக்காமல், எப்பாடுபட்டாவது மக்களின் கண்களில் பட்டுவிடக் கூடாது என ஷிஃப்ட் போட்டு வேலை செய்தாலும் தமிழகத்தில் பலராலும் பேசப்படும் படம் தான் திரௌபதி II.

நேதாஜி புரொடக்ஷன்ஸ் சார்பில், மோகன்.ஜி. சத்ரியன் இயக்கத்தில் வெளிவந்துள்ளது. இயக்குநரின் ஆஸ்தான நடிகர் ரிச்சர்ட் இந்தப் படத்திலும் நடித்துள்ளார்.படத்திற்காக ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டை முழுவதுமாக பயன்படுத்தியிருப்பதை பலரும் பாராட்டியுள்ளனர். உண்மையான வரலாற்றின் மீது ஆர்வம் உள்ளவர்கள் இப்படத்தை வெகுவாக பாராட்டுவதுடன், இக்கதையை தைரியமாக எடுத்துள்ள இயக்குநரை கொண்டாடுகின்றனர்.

அப்படியென்ன கதையென்றால் டெல்லி சுல்தான் துக்ளக், தேவகிரியை ஆண்ட அவரது தம்பி பல்வான், திருவண்ணாமலையை தலைநகராக கொண்டு ஆண்ட வீரவல்லாளர்(நட்டி) , அவரது தளபதியாக வீரநரசிம்மன் ( ரிச்சர்ட்) ஆகியோருக்கு எதிராக, குறிப்பாக மதம் மாற மறுக்கும் ஹிந்து மன்னர்களை கொடுமைப்படுத்திய வரலாற்றை பதிவு செய்துள்ளது திரௌபதி II.

சுல்தான்களின் பேராசை, அதை செயல்படுத்த செய்யும் கொடூரங்கள்,அநீதி, அவரின் அடிமை சேவகர்கள் ஹிந்து மன்னர்களுக்கு இழைக்கும் கொடுமையை பட்டவர்த்தனமாக காட்டியிருப்பது பாராட்டுக்குரியது. குறிப்பாக மதம் மாற எப்படியெல்லாம் அழுத்தம் தரப்படுகிறது, ஜிஸியா வரி விதிப்பு ஆகியவற்றை காட்சிப்படுத்தியிருப்பதும், அதுகுறித்த தெளிவான டயலாக்குகளும் க்ளாப் ரகம். மதம் மாற மறுப்பதோடு, தன் மன்னனுக்காக எந்த தியாகத்தையும் செய்ய தயாரான தளபதி, போர் வீரர்கள் என காட்டியிருப்பது தமிழர்களின் சனாதன நம்பிக்கை எப்படிப்பட்டது என்பதை உணர முடிகிறது.

இந்த உண்மை வரலாறு தமிழக மக்களிடம் பதிந்து விடுமோ என தடா ரஹீம்கள், இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் பதறுவதே இப்படத்தின் வெற்றி. ஜிப்ரானின் இசை, நட்டி, ரிச்சர்ட் நடிப்புகள் பாராட்டப்பட வேண்டியது.தமிழ் திரையுலகில் அரிதாக வரும் இது போன்ற தைரியமான முயற்சிக்கு நாம் ஆதரவு தரவேண்டியது கடமை.



## OTT பார்வை : Netflix & Taskaree ( The Smuggler's Web )

இயக்குநர் நீரஜ் பாண்டேவின் படங்கள், வெப்சீரிஸ்களை பார்த்தவர்கள் இதை கண்டிப்பாக மிஸ் செய்யமாட்டார்கள். இவருக்கென்று கதைக் களம் எப்படி அமைகிறது? அதற்கான நடிகர்கள், லொகேஷன் என அதுவாக அமைவது மகா அதிர்ஷ்டசாலி தான் மனுசன். போதாக்குறைக்கு இவருடன் கோ-டைரக்டர் B.A.Fida, ராகுல் ஜெய்ரத் மற்றும் கதை உதவிக்கு விபுள் ராவல் தனியாகவே கலக்கும் நீரஜ் கூட்டணி போட்டு அசத்தியிருக்கிறார் என்றால் மிகையில்லை. இந்திய நிதி பாதுகாப்பில் கஸ்டம்ஸின் பங்கு மிக முக்கியமானது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் அமளியால்,வெளிநாடுகளில் இருந்துதங்கம்,விலையுர்ந்த வாட்ச்,பேக் ஆகியவற்றை கடத்தும் கும்பலை ஒழிக்கத் திட்டமிடுகிறது ஆளும் அரசு. மும்பை விமான நிலையத்தில் கஸ்டம்ஸில் நேர்மையானவர்களை நியமிக்க அமைச்சர் முடிவெடுக்கிறார்.இந்த டீம்முக்கு தலைவராகிறார் அர்ஜூன் மீனா ( இம்ரான் ஹாஷ்மி). அவரது டீம் அடுத்தடுத்து மும்பை விமான நிலையத்தில் வேகமாக செயல்பட்டு தங்க கடத்தலைத் தடுக்கின்றனர்.

தங்கக் கடத்தல் எப்படியெல்லாம் நடக்கிறது, கடத்த அவர்களின் லேட்டஸ்ட் டெக்னிக், விமான நிலையத்தில் நடக்கும் கஸ்டம்ஸ் செக்கிங் என காட்சிகள் விறுவிறுப்பைக் கூட்டி வெப்சீரிஸின் பிரமாண்ட இயக்குநர் நீரஜ் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார். வெளிநாட்டு லொகேஷனாக இருக்கட்டும், விமான நிலைய காட்சியமைப்பு கண்களுக்கு அழகையும், பிரம்மாண்ட உணர்வையும் ஏற்படுத்துகிறது.வெளிநாட்டிலிருந்து இந்தக் கடத்தல் பிஸ்னஸ்க்கு மூளையாகச் செயல்படும் படா சௌத்ரியாக ( ஷரத் கேல்கர்) தனது அலட்சியமான நடிப்பால் கவர்கிறார். கஸ்டம்ஸில் தனது ஆட்கள் மூலம் காய்நகர்த்தும் படா சௌத்ரிக்கும், படா சௌத்ரி கேங்கில் தனது informer மூலம் ஊடுருவும் அர்ஜூன் மீனாவுக்கும் இடையே நடக்கும் கேட் அண்ட் மௌஸ் போட்டி த்ரில்லிங் அல்டிமேட். நாட்டில் **RAW**, இராணுவம், **CBI**, **NIA** எப்படி செயல்படுகிறதோ, அதைப் போல கஸ்டம்ஸ் பணியும் முக்கியமானது என்பதைக் காட்டும் முயற்சி. நெட்ஃபிளிக்ஸ் ஆச்சே என அச்சம் வேண்டாம்! குடும்பத்துடன் சங்கடமில்லாமல் பார்க்கலாம்.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.